REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜூன் 6 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

1932 - 2022

வரு. 90 இல. 131 | Monday 06,June, 2022 | 16 பக்கங்கள் | 40/-

## சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சி

**ஒரு பவுண் 1,87,000 க்கு விற்பனை**

சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை சற்று குறைவடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சர்வதேச சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 06

## ரஷ்யாவுடன் இலங்கைக்கு எந்த பிரச்சினையும் இல்லை

**சட்டப்பிரச்சினை குறித்து ரஷ்யாவுக்கு அரசு அறிவிப்பு**



ரஷ்ய Aeroflot விமானம் தொடர்பான பிரச்சினை இராஜதந்திர பிரச்சினையல்ல என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ரஷ்ய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை வெளிவிவகார அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ரஷ்ய Aeroflot விமானம் தொடர்பான பிரச்சினை தனிப்பட்ட சட்டப் பிரச்சினை என்றும், இந்த விவகாரத்தை 06

**முதலாம் தவணையின் 02ஆம் கட்டமாக**

## பாடசாலைகள் இன்று மீளவும் ஆரம்பம்




அரச மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் தனியார் பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் இன்று முதல் மீள ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகளுக்காக இவ்வாறு பாடசாலைகள் 06

## சீனாவிலிருந்து அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் வந்தடைவு



சீன அரசாங்கத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்ட மருந்தும் சத்திர சிகிச்சைக்கான உபகரணங்களின் ஒரு தொகுதியும் நேற்று முன்தினம் இரவு நாட்டை வந்தடைந்தன. இவற்றில் 14 அத்தியாவசிய மருந்து வகைகளும் அடங்குகின்றன. 06

**ரஷ்ய விமானத்தை இலங்கையில் தடுத்துவைத்த விவகாரம்;**

# நீதிமன்ற உத்தரவை மீறி அரசினால் செயற்பட முடியாது

**இலங்கை மீது எந்தத் தவறும் இல்லை என அரசு தெரிவிப்பு**





**அனுமதி கோரினால் விமானத்தை கொண்டு செல்ல அனுமதிக்கலாம் என்கிறார் அமைச்சர் நிமல் சிரிபால**

(ஷம்ஸ் பாஹிம்)

ரஷ்ய விமானம் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்ட சம்பவத்தில் இலங்கை அரசாங்கம் எந்த தவறும் செய்யவில்லை என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நீதிமன்ற தடைஉத்தரவு தொடர்பிலும் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா 06



தென் இந்தியாவுக்கான இலங்கையின் துணைத் தூதுவர் துரைசாமி வெங்கடேஸ்வரன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தமிழக முதல்வர் மு. க ஸ்டாலினை சென்னையில் உள்ள தலைமை செயலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்து உரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.



21 திருத்தம் குறித்து இறுதி முடிவு எடுக்க

**தமிழ் கட்சித் தலைவர்கள் இன்று ஒன்றுகூட தீர்மானம்** 03

## லாஃப் சமையல் Gas விலை அதிகரிப்பு

**சிலிண்டரின் விலை ரூ.6850 ஆனது**



லாஃப் சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, 12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயு 6,850 ரூபாவாகவும், 5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயு 2,740 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 3500 மெட்ரிக் தொன் லாஃப் எரிவாயு தாங்கிய கப்பல் ஒன்று நேற்று வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் குறித்த சமையல் 06

## டீசல் கையிருப்பு குறைவடைவு விநியோகத்தில் இனி கட்டுப்பாடு

**தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கே முன்னுரிமை**



இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் டீசல் விநியோக செயற்பாட்டை மட்டுப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. டீசல் கையிருப்பு குறைந்தளவில் காணப்படுவதன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதன்படி முன்னுரிமை பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மாத்திரம் டீசல் விநியோகிக்கப்படும் என அதன் செயலாளர் 06

## அரச ஊழியர்களது ஓய்வு வயதெல்லையில் மாற்றம்

**சுயவிருப்பில் 55 வயதில் ஓய்வு பெறலாம்**



அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை குறைக்க முன்மொழியப்பட்டுள்ளதாக அறியவருகிறது. கடந்த ஜனவரி மாதம் முதல் அரச உழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 ஆக அதிகரிக்கப்பட்டது. எனினும், தற்பொழுது 55 வயதில் தங்களுடைய சுய விருப்பத்திற்கு அமைய ஓய்வு பெறமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டது. தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் அரச ஊழியர்களுக்கு 06

## சிறுவர்கள் மத்தியில் புதிய வைரஸ் பரவல்

**அவதானமாக இருக்க எச்சரிக்கை**

லோரன்ஸ் செல்வநாயகம்



கொழும்பு உள்ளிட்ட நாட்டின் சில பிரதேசங்களில் சிறுவர்களுக்கு புதிய வைரஸ் காய்ச்சலொன்று உருவாகி வருவதாகவும் அது தொடர்பில் பெற்றோர் மிகுந்த கவனம் செலுத்துவது அவசியம் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 6 மாதம் முதல் 12 வயது வரையிலான சிறுவர்களுக்கு இந்த காய்ச்சல் ஏற்படுவதாகவும் இது ஒருவரிலிருந்து 06

## வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு பொருளாதார நெருக்கடி பெரிதல்ல!

**30 வருடங்கள் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள்**

(அஷ்ரப் ஏ சமத்)



"இன்றைய பொருளாதார நெருக்கடியானது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்குப் புதியதல்லவென்று சிங்கள ஊடகவியலாளர் ஒருவருக்கு நான் கூறியுள்ளேன்" என்று மனோ கணேசன் எம். பி தெரிவித்துள்ளார். ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை ஆராய்ந்து முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பற்றிய 06

**மே. 09 வன்முறைச் சம்பவங்கள்;**

## 2, 393 சந்தேக நபர்கள் இதுவரை கைதாகியுள்ளனர்

**விளக்கமறியலில் 1,055 பேர் தடுத்து வைப்பு**



கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற 856 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 2,393 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று 45 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் 37 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். மேலும் 18 பேர் விளக்கமறியலில் 06

## வெள்ளிக்கிழமைகளில் அரச ஊழியர்கள் வீட்டிலிருந்தே பணி

**அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



அரசாங்க ஊழியர்கள் பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் வீட்டிலிருந்தே தமது பணிகளை மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அமைச்சர், அதற்கிணங்க அரசாங்க ஊழியர்கள் 06

## ஜோன்ஸ்டனை தேடும் 2 பொலிஸ் குழுக்கள்

**பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு**




காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களாக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் சந்தேக நபர்களை கைது செய்வதற்கு தீவிர முயற்சிகள் 06



கட்சியை கட்டியெழுப்ப தவறியதாக கூறி

**மைத்திரியை மடக்கி கேள்வி எழுப்பிய SLFP உறுப்பினர்கள்** 03



**நீர் கட்டணத்தை செலுத்த புதிய முறை அறிமுகம்**

0719399999 எனும் இலக்கத்தில் பதிவு செய்யவும் 03



நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு

**அரசாங்கங்கள் சகலதுமே பொறுப்புக்கூற வேண்டும்** 03

### டீசல் வழங்கப்படவில்லை; இன்று சில பகுதிகளில் பஸ் சேவைகள் இல்லை



நாட்டில் சில பகுதிகளில் இன்று (06) பஸ் சேவை முழுமையாக முன்னெடுக்கப்படமாட்டாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்தல் விடுத்துள்ளது. தென் மாகாணம், கம்பஹா மாவட்டம், மன்னார், வவுனியா, கேகாலை, மாவனல்லை, பொலன்னறுவை, பதுளை மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் முழுமையாக பஸ்கள் சேவையில் ஈடுபடாது என அதன் தலைவர் 06

### பாடசாலை வாகனங்களுக்கு CTB டிப்போக்களில் எரிபொருள் வழங்கல்



அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் முதலாம் தவணைக்கான இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று (06) ஆரம்பமாகின்றன.

இந்த நிலையில், பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்தார். 06

### அன்றாட கூலி வேலை செய்வோரின் வாழ்வு படுமோசமான நிலையில்!



பசளையை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு கொடுக்கின்றபோது கஞ்சியாவது குடித்து மக்கள் இருக்கின்ற வாழ்க்கையை உண்டு பண்ணலாம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். பொருளாதார நிலமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். விவசாயிகள் சேமித்து வைத்த அரிசிகள் 06

### பங்களாதேஷ் தீ விபத்தில் 35 பேர் பலி

**450 பேர் படுகாயமடைந்தனர்**



பங்களாதேஷில் தனியார் சேமிப்புக்கிடங்கு ஒன்றில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளதாகவும் மேலும் 450 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பங்களாதேஷில் முக்கிய கடல் துறைமுகமான சிட்டகாங் பகுதிக்கு வெளியே 40 கி.மீ தொலைவில் சேமிப்புக் கிடங்கில் நேற்று நள்ளிரவு பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது. 06

### பிரபல சிங்கள நடிகை சுமனா அமரசிங்க நேற்று காலமானார்



பிரபல சிங்கள திரைப்பட நடிகை சுமனா அமரசிங்க காலமானார். திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக அவர் கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று காலமானார். மரணிக்கும்போது அவருக்கு வயது 73.

'பிப்பென குமுது' என்ற சிங்கள திரைப்படத்தின் மூலம் திரையுலகத்திற்கு அறிமுகமான அவர், பல திரைப்படங்களில் நடித்துள்ளார். ரேன கிரவ், மே தேச குமட்டத, சுது பரவியோ, 06

# நகர்வலம்



# ஈரானைக் கட்டியெழுப்ப இமாம் கொமெய்னி செய்த அர்ப்பணிப்புக்களின் 33 ஆவது ஆண்டு நினைவுகள்





**ருஸைக் பாரூக்**

கொழும்பிலுள்ள ஈரான் இஸ்லாமியக் குடியரசு தூதரகத்தின், கலாசார பிரிவு ஒழுங்கு செய்த ஈரானிய இஸ்லாமியப் புரட்சியின் ஆன்மீகத் தலைவர் ஆயதுல்லா ரூஹுல்லா கொமெய்னியின் 33ஆவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு "இமாம் கொமெய்னியின் சிந்தனையில் ஒற்றுமை" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.

இந்நிகழ்வு ஈரான் கலாசார நிலையத்தின் கலாசார கவ்வுன்சிலர் கலாநிதி பி. மோஸாமி குடார்சியின் தலைமையில் ஈரான் கலாசார நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில், சமயத் தலைவர்கள் வண. கலாநிதி மாதம்பாகம அஸ்ஸாஜி திஸ்ஸ நாயக்க தேரர், மெதடிஸ்த தேவாலயத்தின் ஓய்வு பெற்ற ஆயர் ஆசிரி பெரேரா, கலாநிதி சுப்ரமணிய குருக்கள் மற்றும் புகழ் பெற்ற எழுத்தாளரும் மூத்த மொழி பெயர்ப்பாளருமான கலாநிதி அஷ்ஷேக் எஸ்.எல். மதனி ஆகியோர் உரையாற்றினர்.

ஈரானுக்கு, இமாம் கொமெய்னி செய்த பங்களிப்பு மற்றும் வரலாற்று இஸ்லாமியப் புரட்சிக்கு வழிவகுத்த அவரது பெரும் முயற்சிகள், சிறப்பான சேவைகள் பற்றி இங்கு பேசப்பட்டன.

பௌத்த மற்றும் பாளி, பல்கலைக் கழகத்தின் முன்னாள் சமய கற்கைகள் பேராசிரியர் சமந்தா இளங்கோன் மற்றும் உலகளாவிய சட்ட சிந்தனையாளர்கள் சங்கத்தின் ஆலோசகர் கலாநிதி ஜூனியஸ் சில்வா ஆகியோரும் உரையாற்றினர்.

## கொரோனா தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் மீண்டும் ஆரம்பம்



**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

கொரோனா தடுப்பூசி ஏற்றும்பணிகள் மீண்டும் இலங்கை இராணுவத்தினால் கடந்த 18ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு விஹாரமகா தேவி பூங்காவின் திறந்த வெளியரங்கில் வாரத்தில், திங்கள் தொடக்கம் சனிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை இப்பணி இடம் பெறுவதாக இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

சினோபாம் தடுப்பூசி முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசிகள், பைஸர் தடுப்பூசிகள் 01,02,03ஆவது மற்றும் நான்காவதும் ஏற்றப்படுகின்றன. இதில்,அதிகளவான மக்கள் கலந்துகொணடு தடுப்பூசிகளை ஏற்றிக் கொண்டனர்.

## பிரிந்து சென்றோர் இணைந்து பணியாற்ற வேண்டிய நேரமிது

### மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பிரும்

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண கட்சிகள் பலப்பட்டு பங்களிப்புச் செய்ய வேண்டிய சூழ்நிலையிருப்பதால்,அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்றோர் இணைந்து பணியாற்ற முன்வர வேண்டுமென மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பிரும் கட்சியின் முக்கியஸ்தருமான பாயிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.இதுபற்றி அவர் தெரிவித்துள்ளதாவது,

எல்லோருக்கும் பொதுவான பொருளாதார பிரச்சினையை தீர்க்க வேண்டியது சகலரதும் கடமை. இதற்காக பலப்பட வேண்டிய காலம் வந்துள்ளது.சிற்சில கருத்து பேதங்களுக்காக கட்சியை விட்டுச் செல்வது அல்லது புதிய அணியில் இணைவதெல்லாம் சமூகத்தை பலமிழக்கச் செய்யும்.

இன்று ஏற்பட்டுள்ள நிலை,என்ன காரணத்துக்காகவும் எல்லோரும் ஒன்றுபடுவதன் அவசியத்தையே உணர்த்துகிறது.

எனவே,அரசியல் நோக்கங்களுக்காக அல்லது தற்செயலான ஆசைகளுக்காக கட்சியை விட்டுச் சென்றவர்கள் மீண்டும் இணைந்து பணியாற்ற முன்வர வேண்டும். எதிரே வரவுள்ள நாட்கள்,சமூகங்களாக பலப்படுவதன் தேவையையும் ஏற்படுத்தியுள்ளது.அரசியலமைப்பில் கொண்டு வரப்படவுள்ள புதிய திருத்தங்கள் சிறுபான்மை சமூகங்களை எந்த வகையிலும் பாதிப்பதை அனுமதிக்க முடியாது.எனவே,பேச்சுவார்த்தை மேசைகளில் எமது கட்சிக்குள்ள பலம் வெளிப்படுத்தப்பட வேண்டும்.கட்சியி ன் பலம் மட்டுமல்ல,தங்களுக்கு வாக்களித்த மக்களின்,சமூகத்தின் பலங்களையும் நிரூபிக்கும் பட்சத்தில்தான் நமக்குச் சாதகமாக திருத்தங்களை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கால்வாயை தூர்வாரி துப்புரவு செய்யும் பணிகள் புத்தளத்தில் ஆரம்பம்

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் நெடுங்குளம் வீதியிலிருந்து ஆரம்பித்து மரைக்கார் வீதி முற்சந்தியூடாக போல்ஸ் வீதிவரை செல்லும் கால்வாயை, தூர்வாரி துப்புரவாக்கும் பணிகள் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக்கின் நேரடிக் கண்காணிப்பின் கீழ், நகரசபையால் (02) முன்னெடுக்கப்பட்டன.

திடீர் வெள்ளப்பெருக்கு நிலைமைகளைக் கருத்திற்கொண்டு நகரசபையினால் இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, நகரசபையின் பல வளங்களும் பயன்படுத்தப்பட்டன.அத்துமீறிக் கட்டப்பட்ட கட்டடங்கள் மற்றும் துப்பரவு செய்ய முடியாதவாறு சரியான திட்டமிடலின்றி அமைக்கப்பட்டிருந்த கால்வாயின்கொங்ரீட் மூடிகளும் நகரபிதாவின் நேரடிப் பணிப்பின்பேரில், உடைத்து அகற்றப்பட்டன.

இவ்வேலைத்திட்டத்தில், நகரசபை உறுப்பினர் ரனீஸ் மற்றும் பதூர்தீன் ஆகியோர் களத்தில் பங்களிப்புச் செய்ததுடன் நகர சபை உறுப்பினர்கள் ஜௌபர் மரைக்கார், விஜேதாச மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர் அருள்தாசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## இயந்திரத்தில் சிக்கி இளைஞர் பலி

மரதங்கடவல ஹபறன வீதி கட்டுமானப்பணியில் பணியாளராக வேலை செய்துவந்த நபர், நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் டோசர் இயந்திரத்தில் சிக்கி,உயிரிழந்தார்.பணியில் ஈடுபட்டிருந்தபோதே இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது.

பளுகஸ்வெவ ஆசிரிகம பிரதேசத்தை சேர்ந்த 33 வயதையுடைய எஸ். தினேஷ் செனவிரத்ன எனப்படும் இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கனேவல்பொல பகுதியில் வீதியை செப்பனிடும் பணிகள் நடந்துகொண்டிருக்கையில்,

டோசர் இயந்திரத்திற்கு வழிகாட்டிக்கொண்டும், வீதி போக்குவரத்தை சரிசெய்து கொண்டுமிருக்கையில், டோசர் இயந்திரத்தின் டயரில் இவரது, தலை சிக்கியது. சம்பவ இடத்திலேயே இந்நபர் உயிரிழந்தார்.

பின்னர், அவ்விடத்தில் பணிபுரியும் சக பணியாளர்கள் சடலத்தை மரதங்கடவல வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். மரதங்கடவல பொலிஸ் நிலையம், மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகிறது.

## அட்டுலுகமை ஆயிஷாவின் இல்லத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் விஜயம்



**தெஹிவளை கல்கிஸை விஷேட நிருபர்**

பண்டாரகம அட்டுலுகம பெரியபள்ளிவாசலுக்கு முன்பாக வசித்துவந்த வேளையில், துரதிஷ்டவசமாக கொல்லப்பட்ட ஒன்பது வயதுச்சிறுமியான பாத்திமா ஆயிஷாவின் வீட்டுக்குச் (04) சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அச்சிறுமியின் குடும்பத்தினர் அனைவரிடமும் தனது துயரத்தையும் பகிர்ந்து கொண்டார்.

இச்சந்திப்பில், மறைந்த சிறுமி பாத்திமா ஆயிஷாவின் தாயாரான அமீர் மும்தாஸ் பேகத்திற்கு எதிர்க்கட்சி தலைவர் நிதியுதவிகளையும் வழங்கினார். எதிர்காலத்திலும் இக்குடும்பத்திற்கு பக்கபலமாக இருப்பதாகவும் அவர்,இதன்போது தெரிவித்தார்.

# தர்காநகர் முஸ்லிம் மகளிர் பாடசாலையில் கலாசார மண்டபம்

**பேருவளை தினகரன் விஷேட நிருபர்**

களுத்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட தர்காநகர் அளுத்கம வீதி, முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலையில் கலாசார மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் வைபவம் அதிபர் முஹம்மத் பாயிஸ் தலைமையில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில், பிரதம அதிதியாக தர்காநகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர்ஆலிம் கலந்துகொண்டார்.

களுத்துறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா அமைப்பின் செயலாளரும் மேற்படி பாடசாலையில் உதவி அதிபருமான அஷ்ஷெய்க் பர்ஹான் ஹனீபா (நளீமி)யின் முயற்சியினால் தர்காநகர் நஜீப் ஹாஜியார் கல்வி



நிலைய ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம், இந்த கலாசார மண்டபத்தை அமைக்க முன்வந்துள்ளார்.

ஆறு மில்லியன் ரூபா செலவில் இக்கலாசார மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

இக்கலாசார மண்டபம் அமைக்கப்படுவதன் மூலம் பாடசாலையில் கற்கும் மாணவிகளுக்கு உரிய நேரத்தில் தொழுகையை மேற்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்.

தர்காநகர் பிரதேசத்தினதும் குறிப்பாக களுத்துறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களினதும் பல்வேறு சமய, சமூக,கல்வி பணிகளுக்காக தர்காநகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் மேற்கொள்ளும் சேவைகளை பலரும் நிகழ்வில் பாராட்டிப் பேசினர்.

நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள்,ஆசிரியர்கள், மாணவிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## பாடசாலை மாணவியை வல்லுறவு புரிந்த இராணுவ சிப்பாய் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்**

திறப்பனை பகுதியில் அமைந்துள்ள அரசாங்க பாடசாலை ஆசிரியர் விடுதியில் 15 வயது பள்ளி மாணவியை கடுமையான பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய 24 வயது இராணுவ சிப்பாய் ஒருவரை கடந்த (03) கைது செய்துள்ளதாக திறப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான சிப்பாய், இதற்கு சில வாரங்களுக்கு முன்பு 15 வயது சிறுமியை பாடசாலை ஆசிரியர் விடுதியினுள் வைத்து பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக சிறுமி தனது தாயாரிடம் தெரிவித்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொள்ளப்பட்ட பின்னர், சந்தேக நபரான இராணுவ சிப்பாய் கைதுசெய்யப்பட்டார்.

பாடசாலை நேரத்தின் பின்னர், இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



வெலிகம பத்ர் மன்றம் 14ஆவது வருடமாக ஏற்பாடு செய்த மாபெரும் இரத்ததான நிகழ்வு, புகாரி மஸ்ஜித் மாவத்தையில் அமைந்துள்ள கல்பொக்கை அரச மருந்தகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இன,மத பேதமின்றி நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். தானம் செய்யப்பட்ட இரத்த துளிகள் காலி கராப்பிட்டிய வைத்தியசாலை இரத்த வங்கிக்கு அன்பளிப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(வெலிகம தினகரன் நிருபர்)

# அநுராதபுரம் மாவட்டத்தில் பூஞ்சை தொற்று நோய் அரம்பம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் டினியா பூஞ்சை தொற்று அதிகரித்துள்ளதாக அநுராதபுரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் மருத்துவ அதிகாரி ஹேமா வீரகோன் தெரிவித்தார்.

மாவட்டத்தின் பல பிரதேசங்களில், தற்போது "டினியா" தொற்றுக்கள் பதிவாகியுள்ளன.இந்நோய்,வயது அல்லது பாலினம் இல்லாமல் பரவுவதாகவும் வைத்தியர் தெரிவித்தார்.

பூஞ்சை தொற்றுக்குரிய சிகிச்சை அளிக்கப்படாததே,இதற்கு முக்கிய காரணமென கூறப்பட்டுள்ளது. பெரும்பாலான பூஞ்சை எதிர்ப்பு மருந்துகள் உள்ளன.

இருப்பினும், மருத்துவ ஆலோசனை அல்லது பரிந்துரை இல்லாமல் மருந்தகங்களில் இருந்து பெறப்பட்ட பூஞ்சை எதிர்ப்பு மருந்துகளால் பூஞ்சை தொற்று குணமடையாதுள்ளதாகவும் வைத்தியர் தெரிவித்தார்.

சில சுகாதார துறைகளால் பூஞ்சை எதிர்ப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

ஐந்து வாரங்களுக்கு மேல் பூஞ்சை எதிர்ப்பு மருந்தை பயன்படுத்த வேண்டும்.

ஆடை மூலமும் பூஞ்சை உட்செல்லலாம். ஈரப்பதம் மற்றும் வியர்வை



தொடர்ந்து இருக்கும் தோற்பகுதிகளிலும் தொற்று ஏற்படும்.

குறிப்பாக இடுப்பு, கால்களின் கீழ் மற்றும் முகத்திலும் இத்தொற்றுக்கள் ஏராளமாக காணப்படும்.

ஆரம்பத்தில் ஒரு சிறிய கொப்புளமாக தென்பட்டு, படிப்படியாக தோலின் மேற்பரப்பில் கறையாக மாறி அரிப்பு ஏற்படும்.

பூஞ்சை தொற்று ஏற்பட்டால், பூஞ்சை மருந்தினை மட்டும் ஆறு வாரங்களுக்கு மேல் பயன்படுத்தினால் சமூகத்தில் நோய் பரவுவதைக் குறைக்க முடியும்.

இருப்பினும், தொற்று குணமடைந்தாலும், இரண்டு வாரங்களுக்கு மேல் பூஞ்சை எதிர்ப்பு மருந்துகளை பயன்படுத்த வேண்டும் எனவும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜுன் 6 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN



போக்குவரத்து துறை மேம்பாட்டிற்காக

## எதிர்வரும் 15 முதல் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் செய்யப்படும்

**ஷம்ஸ் பாஹிம்**



போக்குவரத்து துறையின் மேம்பாட்டிற்காக ஜூன் 15 ஆம் திகதி முதல் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் பொதுப் போக்குவரத்து பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வு காண்பதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் பயணிகள் எதிர்நோக்கும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்றவற்றை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பல குறுங்கால நடவடிக்கைகள் குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்படி, அன்றாட நடவடிக்கைகளுக்கு போக்குவரத்து துறையின் பயன்பாட்டை மேம்படுத்துவதுடன் அலுவலக ரயில்

06

## 21 ஆவது திருத்தம் இன்று அமைச்சரவைக்கு



அரசியலமைப்பின் 21வது திருத்தம் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவினால் இன்று (06) அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த வரைவு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அமைச்சரினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடப்பட்டதன் பின்னர், அதனை மீண்டும் அமைச்சரவையில் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், அரசியல் கட்சித் தலைவர்களின் பங்களிப்புடன் வரைவு தொடர்பாக பல சுற்றுக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

கடந்த 3ஆம் திகதி பிரதமர் விஜயதாச ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைமைக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி இந்த வரைவு இணக்கப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பிரதமரை பதவி நீக்கம் செய்வதற்கான நடைமுறை தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசியுள்ளதாகவும் அமைச்சரவை கூட்டத்தின்

06

## இன்று முதல் 2 மணி 15 நிமிடம் மின்வெட்டு அமுல்



இன்று (06) முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நாளாந்தம் மின்வெட்டை அமுல்படுத்த இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.இதற்கமைவாக, இன்று ஜூன் 6 ஆம் திகதி முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நாளாந்தம் 02 மணித்தியாலங்கள் 15 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படுமென ஆணைக்குழு அறிவித்துள்ளது.

11 மற்றும் 12 ஆம் திகதிகளில் ஒரு மணித்தியாலத்திற்கும் மின் விநியோகம் தடைப்படுமென இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இன்றைய தினம் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் அல்லது வேறு நோக்கத்திற்காகவும்

## அரசாங்க ஊழியர்கள் வெளிநாடு செல்ல அனுமதி

### ஐந்தாண்டுகள் சம்பளமில்லா விடுமுறை



தொழில் நிமித்தம் அல்லது வேறு எந்த நோக்கத்திற்காகவும் வெளிநாடு செல்ல விரும்பும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஐந்தாண்டு கால சம்பளமில்லாத விடுமுறை திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து கருத்த வெளியிட்ட அவர், அரச ஊழியர்கள் 5 வருட நிறைவில் சம்பளம் இல்லாமல் விடுமுறை காலத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் சகல

06

## வெளிவிவகார அமைச்சர்-சீனத் தூதுவர் சந்திப்பு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இலங்கைக்கான சீனத் தூதருடன் அமைச்சில் வைத்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பின் போது, தூதுவர் ஜென்ஹோங் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிகள் குறித்து விளக்கியதுடன், இருதரப்பு ஈடுபாடுகள் மற்றும் நாட்டின் தற்போதைய முன்னேற்றங்கள் தொடர்பான விடயங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

குறிப்பாக தற்போதைய சூழ்நிலையின் போது சீனாவின் தாராளமான உதவிகளையும் ஆதரவையும் பாராட்டிய அதே வேளையில்,

இலங்கையில் பொருளாதார சவால்களைத் தணிப்பதற்கு தொடர்ந்தும் ஆதரவளிக்குமாறு சீன

06



### B,O பொசிட்டிவ் சிறுநீரகம் தேவை

கொழும்பு 10 இல் வசிக்கும் பெண்மணி ஒருவருக்கு சிறுநீரக மாற்று சிகிச்சை செய்ய B பொசிட்டிவ் அல்லது O பொசிட்டிவ் சிறுநீரகம் தேவைப்படுகிறது. வழங்குபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு கொள்ள Mufeez 0770166785, Muzaffar 0767036209.

3,500 மெ.தொ எரிவாயு கப்பல் நேற்று வருகை

## இன்று முதல் லாப்ஸ் Gas விநியோகம் நடைபெறும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டர்களை இன்று முதல் சந்தைக்கு விநியோகிக்க எதிர்ப்பார்ப்பதாக லாஃப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.அதேபோல், லாஃப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க 12. 5 கிலோ கிராம் எடை கொண்ட லாப் எரிவாயு சிலிண்டரின் விலை 6850 ரூபாவாகவும் 5 கிலோ கிராம் எடை கொண்ட லாப் எரிவாயு சிலிண்டரின் விலை 2740 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் நேற்று லாப் கேஸ் நிறுவனத்தின் தலைவர் கே.எச். வேகபிட்டிய தெரிவிக்கையில்:

3500 மெட்ரிக் தொன் லாப் கேஸுடன் கப்பல் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்துள்ளது.

அவற்றை இறக்கும் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றதனைத் தொடர்ந்து விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


அதற்கிணங்க நேற்று கொழும்பு உள்ளிட்ட அதனை

06

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு

## அரசாங்கங்கள் சகலதுமே பொறுப்புக்கூற வேண்டும்

### இ.ம.வ முன்னாள் ஆளுநர் குற்றச்சாட்டு



நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சகல அரசாங்கங்களும் பொறுப்பு கூற வேண்டும் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்ரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் செயற்பட்ட அரசாங்கங்களும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். கடந்த காலத்தில் இருந்தே இதனை கட்டுப்படுத்துவதற்காக செயற்பட்டிருக்க வேண்டும் எனவும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்ரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

21 திருத்தம் குறித்து இறுதி முடிவு எடுக்க

## தமிழ் கட்சித் தலைவர்கள் இன்று ஒன்றுகூட தீர்மானம்

### இணையவழி ஊடாக கலந்துரையாடி முடிவு



அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் குறித்து ஒருமித்த முடிவை எட்டுவதற்காக தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றுகூடி கலந்துரையாடவுள்ளன.

இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள குறித்த கலந்துரையாடல் இணையவழி ஊடாக இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இலங்கை தமிழரசு கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், டெலோ, தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசியக் கட்சி என்பன கூடி இது குறித்து கலந்துரையாடியிருந்தன.

இருப்பினும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் இடம்பெறும் கூட்டத்தில் எட்டப்படும் முடிவுகளை வைத்து தாம் ஒரு இணக்கப்பாட்டிற்கு வர அன்றைய தினம் முடிவு செய்தனர்.

அதன்படி பிரதமர்

06

கட்சியை கட்டியெழுப்ப தவறியதாக கூறி

## மைத்திரியை மடக்கி கேள்வி எழுப்பிய SLFP உறுப்பினர்கள்



ஜனாதிபதியாக பதவி வகித்த சந்தர்ப்பத்தில் கட்டியெழுப்ப முடியாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினை பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் போது எவ்வாறு கட்டியெழுப்ப முடியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அதன் சிரேஷ்ட உறுப்பினர்கள் வினவியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஏற்பட்டுள்ள முறுகல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்றது.

எனினும் இதற்கு கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த கலந்துரையாடலின் போதே இவ்வாறு வினவப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்திப்பில் அமைச்சு பதவிகளை

06

நீதி அமைச்சர் -சுவிட்சர்லாந்து தூதுவர் சந்திப்பு

## முடிந்த அனைத்து பங்களிப்பையும் செய்வதாக சுவிட்சர்லாந்து தெரிவிப்பு



நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் டொமினிக் பர்க்லர் இடையிலான சந்திப்பு நீதி அமைச்சில் நடைபெற்றது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியலமைப்பின் உத்தேச 21வது திருத்தம் மற்றும் வரவிருக்கும் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் எழும் அரசியல் ஸ்திரத்தன்மையின் மூலம் அடையக்கூடிய அரசியல் ஸ்திரத்தன்மை குறித்து அமைச்சர் தூதுவருக்கு விளக்கினார்.

இலங்கையும் சுவிட்சர்லாந்தும் வலுவான பொருளாதார மற்றும் அரசியல் நட்புறவின் நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதாகவும், தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு உதவ சுவிட்சர்லாந்து அரசாங்கத்தின் உதவியைஎதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கும்

06

## UDAக்கு கோப் குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு




நகர அபிவிருத்தி அதிகார சபையை நாளை மறுதினம் புதன்கிழமை ஆஜராகுமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் குழு அழைப்பு விடுத்துள்ளது.

கோப் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தலைமையில் அன்றைய தினம் கூடவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 8ஆம் திகதி கோப் குழுவில் ஆஜராகுமாறு மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை மின்சார சபை எதிர்வரும் 09 ஆம் திகதி கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையின் 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

## முன்னாள் விளம்பர பிரிவு ஊழியர் காலமானார்



லேக்ஹவுஸ் விளம்பரப் பிரிவில் சிரேஷ்ட வர்த்தக ஊக்குவிப்பு உத்தியோகத்தராக பணியாற்றி ஓய்வுபெற்ற சாந்தி ரணசிங்க நீண்டகாலமாக சுகவீனமுற்றிருந்த நிலையில் நேற்று காலமானார். அவரது இறுதிக்கிரியைகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும்.

## நீர் கட்டணத்தை செலுத்த புதிய முறை அறிமுகம்

### 0719399999 எனும் இலக்கத்தில் பதிவு செய்யவும்



தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை பொதுமக்களுக்கான அறிவித்தலொன்றை விடுத்துள்ளது. அதாவது,

பொதுமக்கள் தத்தமது கட்டணங்களை மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்வதற்கு தங்களை பதிவு செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நீர் கணக்கு எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை 07193 99999 என்ற எண்ணுக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

நீர் கட்டணங்களை அச்சிடுவதற்கான கடதாசி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமையின் காரணமாக, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும், அடுத்த 3 மாதங்களுக்கு நீர் கட்டணங்களை அச்சிடுவதற்கான கடதாசிகள் கையிருப்பில் உள்ளதாக, தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் வர்த்தகப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் பியல் பத்மநாத தெரிவித்தார்.

## மண்ணெண்ணெய் கையிருப்பில் இல்லை; வரிசையில் நிற்க வேண்டாம்



நாட்டில் தற்போது நிலவும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் ஓரிரு தினங்களில் நுகர்வோருக்கு மண்ணெண்ணெயை பெற்றுக்கொடுக்க முடியும் என பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மண்ணெண்ணெய்யை ஓரிரு தினங்களில் சந்தைக்கு விநியோகிக்க முடியும் என்றும் அந்த நிறுவனம் நேற்று தெரிவித்துள்ளது.

06

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 255.52 | 266.96 |
| கனடியன் டொலர் | 280.59 | 291.86 |
| யூரோ | 383.09 | 393.95 |
| ஜப்பான் யென் | 2.7258 | 2.8339 |
| சிங்கப்பூர் டொலர் | 258.78 | 267.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 445.19 | 460.70 |
| சுவிஸ் பிராங்க் | 369.45 | 383.41 |
| அமெரிக்க டொலர் | 355.31 | 365.28 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 955.66 | கட்டார் ரியால் | 98.64 |
| குவைத் டினார் | 1,177.52 | சவூதி ரியால் | 96.05 |
| ஓமான் ரியால் | 935.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.09 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 23ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 05

## குறள் தரும் சிந்தனை



நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று

சொல்வன்மைக்கு உள்ள சிறப்பு வேறு எதற்கு மில்லை. எனவே அது செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வமாகும்.

# உணவுப் பயிர்ச் செய்கையில் உடனடி அக்கறை அவசியம்

நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையக் கூடிய நிலைமையே காணப்படுவதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், 'எதிர் வரும் செப்டம்பர் மாதமளவில் உலகளாவிய உணவுப் பற்றாக்குறை ஏற்படும். அதன் தாக்கம் 2024 வரை இலங்கையில் நீடிக்கும். அதனால் அடுத்து வரும் சில மாதங்களில் இந்நாட்டு மக்கள் பெரும் உணவுப் பற்றாக்குறைக்கு முகம் கொடுக்க நேரிடலாம்' என்றுள்ளார்.

இதனை சாதாரண விடயமாக நோக்க முடியாது. இந்நாட்டில் பயிர்ச்செய்கைக்கு உகந்த நிலமாக 28,116 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு காணப்படுகின்றது. அதாவது 1.37 மில்லியன் ஹெக்டேயர் நிலம் பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாக உள்ளது. பயிர்ச்செய்கைக்கு தேவையான மண்வளமும் சீதோஷண நிலையும் இங்கு காணப்படுகின்றன.

இதன் பயனாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நாடாக விளங்குகின்றது இலங்கை.

கடந்த வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட இரசாயனப் பசளை பாவனைக் கட்டுப்பாட்டைக் காரணம் காட்டி, கடந்த பெரும்போகத்திலும், சிறுபோகத்திலும் பெருந்தொகையான நிலம் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படவில்லை.

உணவு பயிர்ச்செய்கையை அடிப்படையாகக் கொண்ட நாடொன்றில் இரண்டு போகங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவில்லை என்பது சாதாரணமான விடயமல்ல. அதன் தாக்கம் எத்தகையதாக இருக்கும் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

இலங்கை புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தரவுகளின்படி, இந்நாட்டில் பெரும்போகச் செய்கையின் மூலம் 32 இலட்சம் மெற்றிக் தொன்னும், சிறுபோகச் செய்கையின் மூலம் 20 இலட்சம் மெற்றிக் தொன்னும் என்றபடி நெல் சராசரியாக அறுவடை செய்யப்படுவது வழமை. அத்தோடு, 07 இலட்சத்து 10 ஆயிரம் மெற்றிக் தொன் மரக்கறியும், 05 இலட்சத்து 40 ஆயிரம் மெற்றிக் தொன் பழங்களும் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவை இவ்வாறிருக்க, உக்ரைன் மீதான போரை ரஷ்யா கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பித்தது. அந்தப் போர் இற்றை வரையும் தொடர்ந்த வண்ணமுள்ளது. உலகிற்கு தேவையான கோதுமையில் மூன்றிலொரு பங்கை ரஷ்யாவும் உக்ரைனும்தான் வழங்கக் கூடியதாக இருந்தன. இந்த யுத்தம் இந்நாடுகளது கோதுமை விநியோகத்தில் பெரும் தாக்கத்தை செலுத்தியுள்ளதாக பொருளாதார நிபுணர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இவ்வாறான பின்னணியில் உணவுப் பற்றாக்குறைக்கும் இலங்கை முகம் கொடுக்கக் கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது. நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் ஏற்கனவே அந்நியச் செலாவணி பற்றாக்குறை, எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களதும் விலைகளும் அதிகரித்திருக்கின்றன. அவை மக்களின் இயல்பு வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் சுமையாக அமைந்துள்ளன. இந்த நிலையில் உணவுப் பற்றாக்குறையும் ஏற்படுமாயின் மக்கள் மேலும் நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாவதைத் தவிர்க்க முடியாது.

ஆனால் உணவுப் பயிர்ச்செய்கை உற்பத்தியை அடித்தளமாகக் கொண்ட நாட்டில் உணவுப் பற்றாக்குறை தோற்றம் பெற இடமளிப்பதும் அதற்கு துணை புரிவதும் எவ்விதத்திலும் நியாயப்படுத்தவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாத விடயமாகும். அதனால் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்படுவது அவசியம். உணவுப் பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான காணிகளை அதற்கென உரிய முறையில் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்த வேண்டும்.

இதேவேளை, ஏற்கனவே உணவுப் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படும் நிலங்களுக்கு மேலதிகமாக இப்பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தக் கூடிய நிலங்களையும் பாவிப்பது குறித்தும் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது அந்த அடிப்படையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 'நாட்டிலுள்ள பெருந்தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தக் கூடிய அனைத்துக் காணிகளையும் பொருத்தமான பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாட்டில் 23 பெருந்தோட்ட நிறுவனங்கள் உள்ளன. அவற்றுக்குச் சொந்தமான நிலங்களில் பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான நிலங்களில் 09 ஆயிரம் ஹெக்டேயர்கள் எவ்வித பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்தப்படாதுள்ளது. அந்நிலங்களையும் பயன்படுத்தவே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது. இது ஏற்கனவே பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படும் நிலங்களுக்கு மேலதிகமான நிலமாக அமையும்.

ஆகவே பயிரச்செய்கைக்கு பயன்படுத்தக் கூடிய அனைத்து நிலங்களையும் உரிய முறையில் பயன்படுத்தும் போது இந்நாடு உணவுப் பற்றாக்குறைக்கு முகம் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படாது. அதனால் நாட்டின் மீது உண்மையான அன்பும் பற்றும் கொண்ட ஒவ்வொரு பிரஜையும் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தக் கூடிய காணிகளை உச்சளவில் பயன்படுத்த முன்வர வேண்டும். அதுவே இன்றைய அவசர தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# 'கூட்டுச் சூழலியல் விவசாயம்' வேலைத்திட்டமே இலங்கையின் உணவு நெருக்கடிக்கான உரிய தீர்வு

இலங்கை மக்கள் பொருளாதார நெருக்கடி மற்றும் தொற்றுநோயால் மோசமாக பாதிக்கப்படும் போது மற்றொரு உணவு நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. இது கடுமையான உணவு நெருக்கடி. ஏற்கனவே உணவுப் பொருட்களின் விலை உயர்வு மக்களைப் பாதித்துள்ளது, இது பெரும்பான்மையான மக்களின் உணவு உட்கொள்ளலைக் கடுமையாகக் குறைக்கிறது. மக்கள் தொகையில் பாதிப் பேர் தினமும் ஒரு வேளை உணவைக் கொண்டு நிர்வகிக்கிறார்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு சுமார் 20 வீதமாக உயர்ந்துள்ளது. இதனால் பட்டினி என்ற உடனடிப் பிரச்சினையைத் தவிர, வருங்கால சந்ததியினரும் மோசமாகப் பாதிக்கப்படுவார்கள்.

நீண்ட காலமாக இரசாயன உரம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட விதை வகைகளை நம்பியிருப்பதும், நவீன உபகரணங்களின் பயன்பாடும், வெளிநாட்டு எரிபொருள் விநியோகத்தை சார்ந்திருப்பதும் விவசாயிகளை மோசமாகப் பாதித்துள்ளது. இந்த ஆண்டு யாலா பயிர்ச்செய்கை பாதிக்கு மேல் குறையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதே போன்று இப்பிரச்சினை மற்றைய மூன்றாம் உலக நாடுகளையும் பாதித்துள்ளது.

இதேபோன்ற உணவு நெருக்கடி 1972 இன் கடுமையான பொருளாதார நெருக்கடியுடன் சேர்ந்தது. நிதியமைச்சர் என்ற வகையில் கலாநிதி என்.எம்.பெரேரா நெருக்கடியின் அளவை மக்களுக்கு அறிவித்ததுடன் நெருக்கடியிலிருந்து மீள தேவையான நடவடிக்கை எடுப்பதாக மக்களுக்கு உறுதியளித்தார். அந்நியச் செலாவணி கையிருப்பு 1.3 பில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்ததால், நமது உணவுத் தேவைகளில் பெரும்பகுதியை வெளிநாட்டிலிருந்து வாங்குவதற்கு டொலர்கள் கிடைப்பது சாத்தியமில்லாமல் போனது.

அவரது வற்புறுத்தலின் பேரில் அத்தியாவசியமற்ற அனைத்து பொருட்களின் இறக்குமதியும் தடை செய்யப்பட்டன. இது டொலர்களின் இருப்பை அதிகரிக்கிறது. இதனால் தேவையான உணவு ம ற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய முடியும். விவசாய அமைச்சர் ஹெக்டர் கொப்பேகடுவவின் தீவிர ஆதரவுடன், ஒரு தீவிரமான உணவுப் பிரசாரம் ஆரம்பிக்கப் பட்டது மற்றும் அது முழுசமூகத்தின் உற்சாகமான ஒத்துழைப்பையும் பெற்றது. டொக்டர். என்.எம்.பெரேரா, கைத்தொ ழில் அமைச்சர் டி.பி.சுபசிங்க தலைமையில், உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பெறுமதி சேர்ப்புத் தொழில்களை ஊக்குவிக்க விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான ஒதுக்கீட்டை உயர்த்தினார்.

டொக்டர் என்.எம்.பெரேரா பொருளாதார மீட்சியின் சுமையை பணக்காரர்கள் மீது சுமத்தி ஏழைகளைக் காப்பாற்றினார். வரியை அதிகபட்சமாக 75 வீதம் ஆக உயர்த்தி, VAT போன்ற மறைமுக வரிவிதிப்பு இல்லாமல் ஏழைகளைக் காப்பாற்றினார். அரசாங்கம் உற்பத்தியாளர் கூட்டுறவு மற்றும் நுகர்வோர் கூட்டுறவு ஆகிய இரண்டையும் ஊக்குவித்தது. இடதுசாரி விருப்பமுள்ள மக்கள் கூட்டுறவு இயக்கம் திறமையாக செயல்படுவதையும் ஊழலற்றதாக இருப்பதையும் பார்த்தனர். இருவருக்கிடையிலான நேரடித் தொடர்பு இடைத் தரகர்கள், வியாபாரிகள் செய்து வரும் பெரும் இலாபத்தை ஒழித்தது. கூடுதலாக, சந்தைப்படுத்தல் மற்றும் உணவுக் கட்டுப்பாட்டுத் துறைகள் செயல்படுத்தப்பட்டன, மேலும் அவை உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் இணைக்க மொபைல் சேவையை வழங்க உதவின.



வெளிநாட்டில் இருந்து உதவி கிடைக்கவில்லை. 1974/75 இல் வெளிநாட்டுக் கையிருப்பு 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்தது மற்றும் பொருளாதாரம் 1974 இல் பட்ஜெட் பற்றாக்குறை மற்றும் 1975 இல் வரவு செலவு உபரி இல்லாமல் நிலையானது. டொக்டர். என்.எம்.பெரேரா வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டமை வெகுமதியாகும். ஏனெனில் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிற வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகள் தலைமையிலான சர்வதேச சமூகம், பொருளாதாரம் ஸ்திரமாக இருப்பதால், இலங்கையில் முதலீடு செய்யத் தயாராக இருப்பதாகக் கூறியது.

1976 இல் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணியை விட்டு வெளியேறியது. ஏன் ஏகாதிபத்திய சக்திகள் வலியுறுத்தின என்று நீங்கள் யோசிக்கலாம். லங்கா சமசமாஜ கட்சி மற்றும் கலாநிதி என்.எம். பெரேராவை இலங்கையில் முதலீடு செய்வதற்கான நிபந்தனையாக வெளியேற்றுவது ஒன்று, பெருந்தோட்டங்கள் மற்றும் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளை தேசியமயமாக்குவது, அதன் மூலம் நமது பொருளாதாரம் மற்றும் நேரடி சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

மற்றைய முக்கிய காரணம் சேனகா பிபிள மருத்துவ கொள்கையை அமுல்படுத்தியது. பிந்திய சேனகா நிறுவிய அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் (SPC) சர்வதேச டெண்டர்களை அழைப்பதன் மூலம் முழு தீவுக்கான மருந்துத் தேவையும் குறைந்த விலையில் கிடைத்தது. இவ்வளவு பெரிய தொகையை மொத்தமாக கொள்முதல் செய்ததால், மருந்து மாபியா (பன்னாட்டு நிறுவனங்கள்) தங்கள் இலாபத்தை பெரிய அளவில் குறைக்க வேண்டியதாயிற்று. லங்கா சமசமாஜக் கட்சி இங்கும் வெளிநாட்டிலும் முதலாளித்துவ வர்க்கத்தால் வெறுக்கப்படுவதில் ஆச்சரியமில்லை.

இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள தட்டுப்பாடும் உணவுப் பொருட்களுக்கான விலை உயர்வும் ஏற்படக் காரணம் முடிவெடுப்பதில் உள்ள குழப்பம் மற்றும் விவசாயத்தை சார்ந்திருப்பதே இதற்குக் காரணம். இரசாயன உரம், களைகொல்லிகள், பூச்சிகொல்லிகள் போன்ற வெளிநாட்டு உள்ளீடுகள் மற்றும் அவற்றைச் சார்ந்துள்ள இறக்குமதி செய்யப்பட்ட விதை வகைகளின் பயன்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இந்த விவசாய முறையின் மூலம் பெரும் இலாபம் ஈட்டும் நிறுவனங்கள் மற்றும் நபர்கள் பலர் உள்ளனர். இந்த வெளிநாட்டு உள்ளீடுகளைப் பயன்படுத்தும் உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளால் விவசாயிகள் மற்றும் நுகர்வோர் இருவரும் சுரண்டப்படுகிறார்கள்.

**கலாநிதி என். எம். பெரேராவின் 117 ஆவது பிறந்த நாள் இன்றாகும் (ஜூன் 06 ஆம் திகதி). என்.எம். பெரேரா நினைவுரையை டொக்டர் சி.எம்.விஜயரத்ன (BSc,MSc[leeds UK], phd[Cornell,USA] Consultancies – South and East Asia, Africa) இன்று காலை 10.00 மணிக்கு நிகழ்த்துகின்றார். என்.எம். பெரேரா நினைவு நிலையத்தில் இந்நிகழ்வு நடைபெறுகின்றது. நமது நாட்டு மக்கள் இன்றைய உணவு நெருக்கடியிலிருந்து நிரந்தரமாக விடுபட வேண்டும் என்பதில் என்.எம். பெரேரா அவர்களின் அறிவு, மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் பலன்களை இலங்கையும் பெறலாம் என்பது எமது நம்பிக்கையாகும்**



**இலங்கையில் இன்றைய உணவு நெருக்கடி போன்று 1972 இலும் கடுமையான நெருக்கடி உருவாகியிருந்தது. அவ்வேளையில் நிதியமைச்சர் என்ற வகையில் கலாநிதி என்.எம்.பெரேரா நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார்**

உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி முற்றிலும் மாறுபட்ட முறையில் இயற்கை விவசாயத்தை நோக்கி நாம் திரும்ப வேண்டும் என்ற கருத்து இலாபம் ஈட்டுபவர்களால் கேலி செய்யப்படுகிறது. துரதிர்ஷ்டவசமாக வெளிநாட்டில் பயிற்சி பெற்ற பல இலங்கை விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களும் இந்தக் கருத்தை ஆதரிக்கின்றனர். இலங்கையின் புகழ் பெற்ற விஞ்ஞானியும் சர்வதேச ரீதியில் சிறந்து விளங்கும் விவசாய அறிஞருமான கலாநிதி சி.எம்.விஜயரத்ன தனது வேலைகளை மீறி சில நாட்களாக இலங்கைக்கு விஜயம் செய்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

வெளிநாட்டு இடுபொருள் விவசாயத்தை சார்ந்திருந்து விடுபட பல்வேறு நாடுகளில் அவருக்கு அதிக தேவை உள்ளது. தென் மற்றும் கிழக்கு ஆசியா மற்றும் ஆபிரிக்காவில் உள்ள பல மூன்றாம் உலக நாடுகளில் வெளிநாட்டு உள்ளீடுகளைச் சார்ந்திருப்பதற்கான தீர்வாக 'கூட்டு சூழலியல் விவசாயம்' என்ற அவரது கருத்தின் அடிப்படையில் இந்த நேரத்தில் விவசாயத்தை மாற்றியமைக்கிறார், உதாரணமாக பாகிஸ்தானில் அவரது திட்டம் ஒரு பெரிய பகுதியை உள்ளடக்கியது. இலங்கை மற்றும் இந்தியாவை விட பல்வேறு மாநிலங்களிலும், வியட்நாம், சூடான் போன்ற நாடுகளிலும் அவர் செயல்பட்டு வருகிறார்,



பேராசிரியர்
திஸ்ஸ வித்தாரண

# குளங்களை அண்டிய பகுதிகள் ஆக்கிரமிப்பு; மேய்ச்சல் நிலமின்றி கால்நடைகள் பாதிப்பு!

கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் இல்லாமையினால் தாங்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக அனுராதபுரம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அனுராதபுரம் மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் சுமார் 45 ஆயிரம் பேர் இருப்பதுடன், அவர்கள் ஆண்டொன்றுக்கு நான்கு கோடி லீட்டர் பால் உற்பத்தி செய்கின்றனர். கால்நடைகளுக்கு உணவின்மையினால் பால் உற்பத்தி குறைந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அனுராதபுரம் மாவட்ட கால்நடை உற்பத்தி, விவசாய கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் அதுல திஸாநாயக்கவிடம் வினவிய போது “அனுராதபுரம் மாவட்டத்தில் அதிகமான பால் உற்பத்தியாளர்கள் இருக்கின்றார்கள்.அதே போன்று ஒரு இலட்சத்திற்கும் அதிகமான கறவைப் பசுக்களும் உள்ளன. குளத்தை அண்டிய பிரதேசங்களில் அவைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் இருந்த போதும், அதனுள் நுழைவதற்கு இடமளிக்கப்படுவதில்லை” என்று கவலை தெரிவித்தார்.

“எச் வலயம் மற்றும் நிர்ப்பாசனத் தொட்டி இருப்புக்களிலுள்ள குளங்களை மறைத்து சில விவசாயிகள் அனுமதியின்றி விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வருவதனால் கால்நடைகள் புற்களை மேய்வற்கு அவர்கள் அனுமதிப்பதில்லை. கட்டியாவ குளத்துப் பகுதியில் மாத்திரம் 4500 மாடுகளுக்கான புற்களை வழங்க முடியும். ஆனாலும் அங்கு உட்பிரவேசிக்க முடியாதுள்ளது. அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள சகல குளங்களினதும் நிலைமை இதுதான்.



**அனுராதபுரம் மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் 45 ஆயிரம் பேர் வேதனை!**

முன்னாள் மாவட்ட செயலாளர் இருந்த போது அனுராதபுரம் மாவட்ட விவசாய சங்க கூட்டத்தின் போது கால்நடைகளுக்கு குளக்கரைகளை மேய்ச்சலுக்கு விடுவிக்குமாறு ஆலோசனை முன்வைத்து அது நிறைவேற்றப்பட்டது. அதனூடாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் சில பிரதேச செயலாளர்களை அதற்காக நியமித்த போதும் கால்நடைகள் அப்பிரதேசத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்படவில்லை” எனவும் அவர் தெரிவித்தார்.


எமது நாட்டில் பால் பண்ணையாளர்களுக்கான பாரிய பிரச்சினை பாலுக்கான நியாயமான விலை கிடைக்காமையாகும். வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பாலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் தேசிய பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து ஒரு லீற்றர் பாலை 110 ரூபாவுக்கு பெற்றுக் கொள்கின்றனர்.

சகல அத்தியாவசிய பொருட்களினதும் விலை உயர்ந்துள்ளது. இதனால் பால் பண்ணையாளர்களுக்கு ஒரு லீற்றர் பாலுக்கு 150 ரூபா வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றும் அனுராதபுரம் மாவட்ட கால்நடை உற்பத்தி, விவசாய கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் அதுல திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

அனுராதபுரம் மத்திய நுவரகம் பிரதேச கால்நடை உற்பத்தி விவசாய கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எஸ்.பி.கே.ஜயசிங்கவிடம் இது தொடர்பில் வினவிய போது “குறித்த பிரதேசத்தில் சுமார் 4000 பால் உற்பத்தியாளர்கள் இருக்கின்றனர். அவர்கள் மாதம் ஒன்றிற்கு 2 இலட்சத்து 25 ஆயிரம் லீற்றர் பால் உற்பத்தி செய்கின்றனர். ஆனாலும் அவர்களுக்கான பாரிய பிரச்சினை கால்நடைகளுக்கு போதிய உணவு இல்லாமையாகும்.

வுலங்குளம், வசவாக்குளம் பகுதியில் கால்நடைகளுக்குத் தேவையான போதிய உணவு இருந்த போதும் அங்கு உட்பிரவேசிக்க முடியாதுள்ளது. சிலர் குளத்து பகுதிகளை ஆக்கிரமித்து பயிரிட்டு வருகின்றனர். அதனால் அப்பகுதிகளை கால்நடைகளுக்கு விடுவித்து தருமாறு கேட்டு கொள்கிறோம்” எனத் தெரிவித்தார்.

அனுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தரவிடம் இது தொடர்பில் வினவிய போது, தற்போது குளத்தை அண்டிய பகுதிகளில் விவசாயிகள் சாகு படியில் ஈடுபட்டுள்ளனர். குறித்த பகுதியில் உள்ள புற்களை கால்நடைகளுக்கு உணவுக்காக விடுவிக்கும் போது அது எந்த மாதிரியான பாதிப்பை ஏற்படும் என்பதை முதலில் கண்டறிய வேண்டும். குளங்கள் விவசாய சங்கங்கள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ளன. இது தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க வேண்டும்” எனப் பதிலளித்தார்.



மதார் தம்பி ஆரிப்
(அனுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# புதிய அரசியல் கலாசாரத்தினூடாகவே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு

## அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் பேட்டி

புதிய அரசியல் கலாசாரத்தினூடாகவே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணலாம் என்று சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார். தினகரனுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**கேள்வி: பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய அமைச்சரவையின் எதிர்காலம் எப்படியிருக்கும்?**

**பதில்:** அரசியலமைப்பின் பிரகாரம் அமைச்சரவைக்கு ஜனாதிபதியே தலைமை தாங்குகிறார். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் புரிந்துணர்வுடன் செயலாற்றும் இந்த ஒற்றுமை மற்றும் அமைச்சரவையினால் நாட்டின் எதிர்காலம் சிறப்புள்ளதாகும் என எதிர்பார்க்கிறேன்.

**கேள்வி: நாடு எதிர்கொண்டுள்ள நிதிநெருக்கடிக்கு அமைச்சரவை மாற்றம் அல்லது அரசியலமைப்பு மாற்றம் தீர்வாகுமென்றா நினைக்கிறீர்கள்?**

**பதில்:** மாற்றங்கள், பாராளுமன்றத்திலும் இடம்பெற்றிருக்கின்றன. அதிக கட்சிகளைச் சேர்ந்தோருக்கு அமைச்சுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்தும் சிலர் அமைச்சுகளைப் பொறுப்பேற்றுள்ளனர். பிரதான ஆளுங்கட்சி விட்டுக்கொடுப்புடன் கூடிய புரிந்துணர்வில் செயற்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சிலரும் புதிய அரசாங்கத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இந்த மாற்றங்கள் புதிய அரசியல் கலாசாரம் ஏற்படுவதற்கான அடையாளம்தான். இப்புதிய கலாசாரத்தினூடாக பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணலாம்.



## 'எனது பதவிக் காலத்துக்குள் ஐயாயிரம் பேருக்கு தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வேன்'

**கேள்வி:அமைச்சரவையிலுள்ள ஒரேயொரு முஸ்லிம் அரசிய**ல்வாதி நீங்கள். **கடந்த காலங்களைப் போன்று சிறுபான்மையினருக்குப் பாதகமான விடயங்கள் கொண்டு வரப்பட்டால், எந்த வகையில் இவற்றை எதிர்கொள்ளலாம்?**

**பதில்:** எந்த வகையிலும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறேன். தேர்ச்சியான காய்நகர்த்தல்களை கையாண்டு, நிலைமைகளை வெல்லலாம். கடந்த காலங்களில் நடந்த சில தவறுகளால் ஏற்பட்டதை இன்று எல்லோரும் அனுபவிக்கையில், இனியும் இந்தத் தவறுகள் இடம்பெறுமென நான் நினைக்கவில்லை. அவ்வாறு நடந்தால் சிறுபான்மை சமூகங்களுக்கான எனது பங்களிப்புக்கள் காத்திரமானதாயிருக்கும்.

**கேள்வி: மட்டக்களப்பு மாவட்டம் உங்களது பூர்வீகம். அங்குள்ள காணிப் பிரச்சினைகள், சமூகங்களுக்கிடையில் மனக் கிலேசங்களை ஏற்படுத்தும் நிலையிலே இருக்கின்றன. இவற்றை சுமுகமாகத் தீர்க்க ஏதாவது திட்டங்கள் உங்களிடம் இருக்கிறதா?**

**பதில்:** இவ்விடயத்தில்,முஸ்லிம் தரப்புக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. அரசியல் தரப்பிலிருந்து மட்டுமல்ல, ர்வாகப்பலத்தின் உடந்தையுட னும் சில நிகழ்ந்திருக்கின்றன. எனவே சில விட்டுக்கொடுப்புகள் இவ்விடத்தில் அவசியப்படுகின்றன. இதை சகோதர சமூகத்தினரே செய்ய வேண்டும். ஒரேமொழி பேசுவோருக்கிடையே நிலவும் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக இது அமையும்.

**கேள்வி: நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க எடுக்கப்படும் முயற்சிகள் குறித்து உங்களது கருத்து என்ன?**

**பதில்:** அவசியம் தேவைப்படும் அதிகாரமுறைமை இது. இந்தப் பதவிக்கு வரும் ஆட்களைப் பொறுத்தே இதன் ஆழ, அகலங்கள் அறியப்படுகின்றன. கடந்த காலங்களில் அனுபவிக்க நேர்ந்தவைகளே இப்பதவியை ஒழிக்க வேண்டுமென்ற கோஷங்களை உயர்த்தியுமுள்ளன. இதை மட்டுப்படுத்த வேண்டுமென்ற மனநிலையிலே நான் உள்ளேன். மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படும்போதுதான் 'எல்லோருக்குமான எங்கள் ஜனாதிபதி' என்ற உரிமையிருக்கும். மாறாக பாராளுமன்றம் இவரை தெரிவு செய்தால்,ஒரு மாவட்டத்துக்கு அல்லது பிரதேசத்துக்கு உரியவராகவே அர்த்தப்படும். அதுமட்டுமல்ல, தேர்தலூடான தெரிவு வரும் போதுதான், சமூங்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இவருக்கு ஏற்படும்.

**கேள்வி: சிறுபான்மை அரசியலின் எதிர்கால வளர்ச்சிக்கு தனித்துவக் கட்சிகளின் தேவைப்பாடு அவசியம்தானா?**

**பதில்:** ஏனைய சமூகங்களின், அதாவது வாக்குப்பலங்கள் குறைவாகவுள் ள சமூகங்களைச் சேர்ந்தோரின் உள்ளக்கிடக்கைகளை தேசிய கட்சிகள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். பின்னர் சமஅளவான பங்கீடு, பாரபட்சமில்லாத அபிவிருத்தி, வேற்றுமைவாதமில்லாத வேலை வாய்ப்புகளை இந்த தேசிய கட்சிகள் வழங்குமானால், பிராந்திய கட்சிகளின் அல்லது சமூக அடையாளங்களிலான கட்சிகள் அவசியமற்றுப் போகலாம்.

**கேள்வி: பதவிக்காலத்துக்குள் ஐயாயிரம் பேருக்கு தொழில்வாய்ப்பு வழங்கவுள்ளதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். இன்றைய நிதி நெருக்கடிகளில் இது எவ்வாறு சாத்தியப்படும்?**

**பதில்:** நெருக்கடிக்குள் தீர்வு காண்பதுதான் அரசியல்வாதிக்கு அழகு. ஓடும்நீரில் குளிப்பது இலகுதானே! ஓடையை உருவாக்கி, ஊர் மக்கள் எல்லாம் குளிப்பதற்கு ஏற்பாடு செய்வதுதானே சாதனை. நான், முதலமைச்சராக இருந்த காலத்திலும் இவ்வாறு பல சவால்களை வென்றவன். அந்த அனுபவம் மற்றும் தைரியத்திலே இதையும் செய்யவுள்ளேன். செய்யப் போவதாக சொல்வதை விடவும் செய்துள்ளதாக காட்டுவதே சிறந்தது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இயற்கை வளங்கள் எத்தனையோ தொழில்வாய்ப்புகளை உருவாக்கும் வரப்பிரசாதங்களை கொண்டுள்ளன.

இதற்கு அரசியல் அதிகாரம் தேவை. இப்போது,அது இருக்கிறது.இனி செய்வதுதான் மீதி வேலை.

**கேள்வி: ஆர்ப்பாட்டத்திலீடுபட்டுள்ள இளைஞர் படையணிக்கு நீங்கள் என்ன ஆலோசனை கூற விரும்புகிறீர்கள்?**

**பதில்:** எந்த வகையிலும் தட்டிக்கழிக்க முடியாத கோரிக்கைகள். அரசியலில் தற்போது தென்படத் தொடங்கியுள்ள புதிய மாற்றங்களுக்கான ஆரம்ப அடித்தளங்களையும் இவர்களது ஆர்ப்பாட்டங்களே இட்டதாக கருதப்படுகிறது. மே 09 இல் ஏற்பட்ட வெடிப்பும் அதனாலுண்டான விழிப்பும் அரசியலில் புதிய வரலாறு படைக்கப் புறப்பட்டுள்ளது. எதற்கும் நின்று, நிதானித்து, நீதிநெறி யோசித்துச் செல்ல வேண்டும்.

ஏ.ஜீ.எம்.தௌபீக்...


# நான் கண்ட பேராசிரியர் சோ.சந்திரசேகரம்: வாழ்வும் பணியும்

## நூல் மதிப்புரை

நூலாசிரியர்: துரைசாமி நடராஜா

வெளியீடு: குமரன் புத்தக இல்லம், கொழும்பு

பேராசிரியர் சோ.சந்திரசேகரம் கடந்த ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி எம்மிடமிருந்து நிரந்தரமாக விடைபெற்றுக் கொண்டமை கல்வியுலகுக்கு மட்டுமல்லாது சகலருக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.ஓய்வுக்குப் பின்னரும் கூட்டங்கள், கருத்தரங்குகள், எழுத்து, கலை இலக்கியம், கற்பித்தல், தமிழ்ச் சங்கம் என இடையறாது ஓய்வு ஒழிவின்றி இயங்கிக் கொண்டிருந்த பேராசிரியரின் திடீர் மறைவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்லாது அவரோடு தொடர்பு கொண்ட மாணவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் என சகலருக்கும் தாங்க முடியாத சோகத்தை ஏற்படுத்தி இருந்தது.




பேராசிரியருடன் நெருக்கமாக தொடர்பு கொண்டிருந்த கல்வி அதிகாரியும், ஊடகவியலாளருமான துரைசாமி நடராஜா மேற்படி நூலை அவருடன் ஊடாடி பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் பேராசிரியரின் மறைவுக்கு முன்னரே எழுதி முடித்திருந்தார்.

பேராசிரியரின் வேண்டுகோளின் அடிப்படையில் நான் இந்நூலுக்கு அணிந்துரையை வழங்கினேன். எனினும் தேசத்தின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பேராசிரியரின் முன்னிலையில் வெளியிட்டிருக்க வேண்டிய இந்நூல் அவரின் மறைவுக்குப் பின்னர் தற்போது இரு மாதங்கள் கழித்து வெளியிடப்பட்டமை மனவேதனைக்குரியதாகும்.

பேராசிரியரின் குடும்பப் பின்னணி, இளமைக்காலம், பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழக வாழ்க்கை, தொழில்சார் செயற்பாடுகள், ஜப்பானிய உயர்கல்வி, வெளிநாட்டுப் பயணங்கள், கலை இலக்கிய ஈடுபாடு, பெற்றுக் கொண்ட விருதுகளும் கௌரவங்களும் என்று 14 அத்தியாயங்களாகவும், பேராசிரியர் எழுதிய நூல்களின் விபரங்களையும் மட்டுமல்லாது பேராசிரியரைப் பற்றிய அவரது சகபாடிகள், நண்பர்கள், கலை இலக்கியவாதிகள், மாணவர்கள் முதலானோரின் மனப்பதிவுகளையும் கொண்டிருக்கும் இந்நூலை நூலாசிரியர் துரைசாமி நடராஜா சிறப்பான முறையில் யாத்துள்ளார்.

அத்துடன் பேராசிரியரின் வாழ்க்கையில் முக்கியமான தருணங்களில் எடுத்துக் கொண்ட புகைப்படங்களும் இந்நூலை அணி செய்கின்றன. முக்கியமாக கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி குமரன் அச்சகத்தில் நூலாசிரியர் உட்பட நண்பர்களுடன் எடுத்துக் கொண்ட இறுதிப்படமும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.பேராசிரியர் சந்திரசேகரம் மலையகத்தின் இரண்டாவது பேராசிரியர். அத்தோடு முதலாவது கல்வியியல் பேராசிரியராவார். கல்வி, எழுத்து, கலை இலக்கியம், மேடைப் பேச்சு, அரசியல் என பல்பரிமாண ஆளுமை கொண்டவர். அத்துடன் பேராசிரியர் சிறந்த நடிகரும் பாடகருமாவார் என்பதும் அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்கு தெரிந்த விடயமாகும்.

தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் உறுப்பினராகவும்,அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவராகவும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிபுணத்துவ ஆலோசகராகவும், கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ள பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீடத்தில் மூன்று தசாப்தங்களாக பணியாற்றியதுடன் பீடாதிபதியாகவும் உயர்வு பெற்றிருந்தார். அத்தோடு ஐக்கிய அமெரிக்காவின் ஓபோன் பல்கலைக்கழகம், ஜப்பானின் ஹிரோஷிமா பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வருகைதரு பேராசிரியராகவும் பேராசிரியர் கடமையாற்றியுள்ளார். இவ்வளவு கௌரவங்களையும் பெற்ற பேராசிரியர் மலையகத்தைச் சேர்ந்தவர் என்பது பெருமைக்குரிய ஒரு விடயமாகும்.

பேராசிரியர் கல்வியில் சமத்துவம் மற்றும் நியாயப்பாட்டுக்காக (equality and equity) தமது வாழ்நாள் முழுவதும் போராடிய ஒரு போராளியாவார். உண்மையில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது கற்பித்தலையும், ஆய்வுகளையும், எழுத்துக்களையும் சமூக அபிவிருத்தியுடன் இணைத்துக் கொள்ள வேண்டும் (engaged scholarship 1999) என்னும் கருத்து ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னரே பேராசிரியர் சமூக மேம்பாட்டுக்கான கல்வி குறித்து பேசியும் எழுதியும் வந்துள்ளார். இதன் அடிப்படையிலேயே பேராசிரியர் மலையகத்துக்கான தேசிய பல்கலைக்கழகத்தின் தேவை குறித்து ஒரு தசாப்தத்துக்கு முன்னரேயே குரல் எழுப்பியதோடு, அதற்கான நடவடிக்கைகளையும் ஏனைய கல்வியியலாளர்களுடன் சேர்ந்து முன்னெடுத்து வந்தார். எவ்வளவு முயன்றபோதும் இந்தக் கோரிக்கை நனவாகாத நிலையில் கடந்த வருடம் ஹட்டனில் நிகழ்ந்த நூல் வெளியீட்டு விழாவொன்றில் பேராசிரியர் உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் சிந்தினார். இதனை நூலாசிரியர் உணர்வுபூர்வமாக பதிவுசெய்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

பதுளை ஊவா கல்லூரியில் தனக்கு கற்பித்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆசிரியப் பெருமக்கள் குறித்து

பேராசிரியர் எப்போதும் சிலாகித்துப் பேசுவார். மலையகத்தின் கல்வியை மலையக ஆசிரியர்கள் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்னர் மலையகக் கல்வியை தமது தலையில் சுமந்தவர்கள் யாழ்ப்பாணத்து ஆசிரியர்களே எனவும், தனது ஆளுமை உருவாக்கத்தில் யாழ். மஹஜனாக் கல்லூரியின் பங்குதான் மிகவும் முக்கியமானது எனவும் பேராசிரியர் அடிக்கடி குறிப்பிடுவார். வேல் சிவானந்தன் மஹஜனாவின் அதிபராக இருந்த காலத்தில் பரிசளிப்பு விழா நிகழ்வொன்றில் பேராசிரியரை பிரதம அதிதியாக அழைத்து கௌரவித்திருந்தார். இதனையும் நூலாசிரியர் துரைசாமி நடராஜா இந்நூலில் உணர்வுபூர்வமாக பதிவு செய்துள்ளார்.

பேராசிரியர் 31 கல்விசார் நூல்களையும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும்எ முதியுள்ளார். சர்வதேச வெளியீடுகள் பலவற்றிலும் அவரது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. எனினும் மிக முக்கிய பங்களிப்பு பேராசிரியர் அரசரத்தினத்தின் வழிகாட்டலில் 1989 இல் எழுதி வெளியிட்ட அவரது முதலாவது நூலான 'இலங்கை இந்தியர் வரலாறு' ஆகும். மலையகம் தொடர்பான ஆய்வியலில் இந்நூலின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட முடியாது. இந்நூல் எழுதப்பட்ட பின்னணி குறித்து நூலாசிரியர் நன்கு பதிவுசெய்துள்ளமை பாராட்டுக்குரியது.

> பேராசிரியர் சந்திரசேகரம் மலையகத்துக்கான தேசிய பல்கலைக்கழகத்தின் தேவை குறித்து ஒரு தசாப்தத்துக்கு முன்னரேயே குரல் எழுப்பியதோடு, அதற்கான நடவடிக்கைகளையும் ஏனைய கல்வியியலாளர்களுடன் சேர்ந்து முன்னெடுத்து வந்தார். எவ்வளவு முயன்ற போதும் இந்தக் கோரிக்கை நனவாகாத நிலையில், கடந்த வருடம் ஹற்றனில் நிகழ்ந்த நூல் வெளியீட்டு விழாவொன்றில் பேராசிரியர் உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் சிந்தினார்

பேராசிரியர் தனது இறுதி நாட்களில் மலையகக் கல்வி மாநாடு ஒன்றினை நடத்துவதற்கு பெரிதும் ஆவலுடன் இருந்தார். இம்மாநாடு தொடர்பாக அவரது வழிகாட்டலில் நான் எழுதிய முன்மொழிவினை அவர் பெற்றுக் கொண்டிருந்தார். மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த வேளையில் பேராசிரியரின் மறைவு பேரிடியாக அமைந்தது.மேற்படி மாநாட்டை நடத்துவதும் மலையகத்துக்கான தேசிய பல்கலைக்கழகத்தை அமைப்பதும், கடந்த மூன்று தசாப்தங்களாக பேராசிரியர் மேற்கொண்டிருந்த கல்விப் பணிகளுக்கும் அவருக்கும் நாம் வழங்கும் மரியாதையாகவும் கௌரவமாகவும் அமையும்.

இந்நூலினை மிகவும் சிறப்பாக எழுதிய நூலாசிரியர் துரைசாமி நடராஜா அவர்களுக்கும், அழகிய முறையில் வடிவமைத்து சிறப்புடன் அச்சிட்ட நண்பர் க. குமரன் அவர்களுக்கும் நாம் அனைவரும் நன்றிக்கடன் பட்டுள்ளோம்.பேராசிரியரின் கல்விப் பணிகள் மற்றும் மனித நேயம் எனப் பல விடயங்களையும் இந்த நூல் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு செல்லும் என்பது உறுதியாகும்.

அத்துடன் இந்நூலை கடந்த மே மாதம் 29 ஆம் திகதி கொழும்பில் வெளியிட்ட மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் போஷகர்கள், தலைவர், செயலாளர் உள்ளிட்ட அலுவலர்கள், உறுப்பினர்கள் மற்றும் வெளியீட்டு விழாவை ஒழுங்குபடுத்திய பேராசிரியர் ஏ.எஸ்.சந்திரபோஷ், கலாநிதி இரா.ரமேஷ் ஆகியோர் எம் அனைவரினதும் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்களாவர்.

பேராசிரியர் தை.தனராஜ் ...

# நன்னீர் மீன்களின் விலை அதிகரித்ததால் கிழக்கில் வறியோருக்கு மீனுணவு இல்லை!



வசதி குறைந்த மக்களின் மீன் உணவாகக் கருதப்பட்டு வந்த கோல்டன், ஜப்பான், செப்பலி போன்ற மீன்களுக்கு இன்று மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அதிக கிராக்கி நிலவுகின்றது. முன்னரெல்லாம் ஒரு கிலோ 200 தொடக்கம் 300 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட இந்த மீன்கள் தற்போது 800 தொடக்கம் 1000 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றன.

முன்னரெல்லாம் வருமானம் குறைந்த மக்களாலே அதிகமாக கொள்வனவு செய்யப்பட்டு வந்த இந்த ஆற்று மீனை இன்று பணம் படைத்தவர்களே அதிகமாக கொள்வனவு செய்யத் தொடங்கியுள்ளனர்.

சந்தைக்கு மீன் கொண்டுவரப்பட்டு பல மணிநேரத்தின் பின்னர் விற்பனை செய்யப்பட்ட காலம் மலையேறி மீன் சந்தைக்கு வருமுன்பே அதனை பெற்றுக் கொள்ள பல மணிநேரம் மக்கள் காத்திருக்கும் நிலை உருவாகியுள்ளது.

அவ்வாறு மீன் சந்தைக்கு கொண்டுவரப்பட்டாலும் பணம் படைத்தவர்கள் முந்திக் கொண்டு விலையைப் பற்றி கவனத்தில் கொள்ளாது கிலோ கணக்கில் வாங்கிச் செல்கின்றனர். இதேநேரம் வியாபாரிகளும் அவர்களுக்கே முன்னுரிமை அளிக்கின்றனர். இவ்வாறு பணம் படைத்தவர்களிடம் இருந்து மிஞ்சினால் மாத்திரமே ஏனைய மக்கள் அம்மீன்களைப் பெறக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இன்று வருமானம் குறைந்த மக்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலை மற்றும் மீனுக்கான கேள்வி அதிகரித்தமையே விலையேற்றத்திற்கு காரணமாகவுள்ளதாக பொதுமக்கள் நம்புகின்றனர். ஆயினும் விலை உயர்விற்கு இன்னும் பல காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளதை மீனவர்கள் மற்றும் வியாபாரிகள் மூலமாக அறிய முடிகின்றது.





வெளிமாவட்ட வியாபாரிகளின் வருகை மற்றும் கட்டுப்பாடின்றிய மீனவர்களின் மீன்பிடி ஆக்கிரமிப்பு, ஆறுகளைப் பயன்படுத்த அனுமதியளிக்கப்பட்டவர்கள் தவிர்ந்த பிற பிரதேச மீன்பிடியாளர்களின் ஊடுருவல், இவர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிர்வாக முறைமையின்மை போன்ற பல காரணிகளும் இவ்விலையேற்றத்தில் தாக்கம் செலுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

எது எவ்வாறானபோதிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரத்தை காரணம் காட்டி குறித்த மீனுக்கான விலையினை வியாபாரிகள் அதிகரித்துள்ள நிலையில் இவ்விலையேற்றமானது மிகப் பெரிய அளவில் வருமானம் குறைந்த மக்களையே பாதித்துள்ளது.

மீன்பிடியாளர்களும் விற்பனையாளர்களும் நாட்டு நிலைக்கேற்பவே நாங்கள் செயற்படுகின்றோம் எனச் சொன்னாலும் அது மனச்சாட்சியை மீறிய செயலாகவே வருமானம் குறைந்த மக்களால் பார்க்கப்படுகின்றது.

ஆகவே இதற்குத் தீர்வு காணும் பொருட்டு பிரதேச செயலகம், பிரதேச சபை, மீன்பிடிச்சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து பொருத்தமான நியாயமான தீர்வினை கண்டு ஏழை மக்களை பாதுகாக்க முயற்சி மேற்கொள்வது காலத்தில் கட்டாயமாகும்.

வி.சுகிர்தகுமார் ...
(வாச்சிக்குடா விஷேட நிருபர்)

# வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் இந்திய பிரஜை விமான நிலையத்தில் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் இந்திய பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த 45 வயது இந்திய பிரஜை தமது பயணப் பையில் மறைத்து வைத்து குறித்த நாணயத்தாள்களை சென்னைக்கு எடுத்துச் செல்ல முற்பட்டபோதே கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அவர் விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் வியாபார நடவடிக்கைகளுக்காக இலங்கையில் தங்கியிருந்துள்ளதுடன் விமான நிலையத்தில் வைத்து அவர் பல தடவைகள் மலசல கூடத்திற்கு சென்று திரும்பியபோது சந்தேகத்தின் பேரில் விமான நிலைய அதிகாரிகள் அவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்டவரிடமிருந்து கனடியன் டொலர் 117,000 மற்றும் 19.000 யூரோ நாணயத் தாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஸ)

## முடிந்த அனைத்து... (03 ஆ ம் பக்கத் தொடர்)

பொருளாதார சவால்கள் குறித்து தாம் கரிசனை கொள்வதாகவும், அவற்றை முறியடிக்க முடிந்த அனைத்து பங்களிப்பையும் செய்வதாகவும் தூதுவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் திருமதி வசந்த பெரேராவும் கலந்துகொண்டார்.

## வெளிவிவகார அமைச்சர்... (03 ஆம் பக்கத் தொடர்)

அரசாங்கத்திடம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

இரு தரப்பினரும் பன்முக உறவுகளையும் இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்பையும் பாராட்டினர்.

இச் சந்திப்பின் போது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் சீனத் தூதரக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## முடிந்த அனைத்து...(03 ஆம் பக்கத் தொடர்)

பொருளாதார சவால்கள் குறித்து தாம் கரிசனை கொள்வதாகவும், அவற்றை முறியடிக்க முடிந்த அனைத்து பங்களிப்பையும் செய்வதாகவும் தூதுவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் திருமதி வசந்த பெரேராவும் கலந்துகொண்டார்.

## மண்ணெண்ணெய்... (03 ஆம் பக்கத் தொடர்)

அதேவேளை நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிலையங்களில் மண்ணெண்ணெய் கையிருப்பு இல்லை என்றும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டாம் என்றும் அந்த நிறுவனம் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும் நேற்றைய தினமும் மண்ணெண்ணெயை கொள்வனவு செய்வதற்காக பெருமளவு மக்கள் எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நின்றதை காண முடிந்தது. கடந்த சில தினங்களாக அவர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை, உலக சந்தையில் கடந்த வெள்ளிகிழமை எரிபொருளின் விலை சற்று குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மே 31ஆம் திகதி 124.24 டொலராக அதிகரித்திருந்த ப்ரேண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் விலை வெள்ளிகிழமை 117 டொலராக பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் கடந்த மாதத்தில் உலக சந்தையில் எரிபொருளின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## லாஃப் சமையல் ...

எரிவாயு கொள்கலன்களை மக்களுக்கு உடனடியாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லாஃப் நிறுவனம் அறிவித்துள்ளது.

## அரச ஊழியர்களது...

சம்பளம் வழங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மீண்டும் அரச ஊழியர்களின் ஒய்வு பெறும் வயதெல்லையை 3 வருடங்களாக குறைந்து 62 ஆக நிர்ணயிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2, 393 சந்தேக நபர்கள் ...

வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். அதன்படி, கடந்த மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை மற்றும் அமைதியின்மை தொடர்பில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கை 1,055 ஆக அதிகரித்துள்ளது.

## பாடசாலை வாகனங்களுக்கு ...

இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களில் இருந்து பாடசாலை வாகனங்கள் மற்றும் பஸ்களுக்கு எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## பிரபல சிங்கள நடிகை...

கெடுனு பொறந்துவ போன்ற பிரபல படங்களிலும் அவர் நடித்துள்ளதுடன் திரைப்படங்களையும் தயாரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வடக்கு, கிழக்கு தமிழ்...

ஆணைக்குழு முன்பாக ஆஜராகி தமது கருத்துகளை முன்வைத்த வேளையிலேயே மனோ கணேசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் தலைவரான உயர்நீதிமன்ற நீதியரசர் து. நவாஸ் தலைமையில் பி.எம்.ஐ.சி.எச் இல் ஆணைக்குழுவின் அமர்வு கடந்த (01.06.2022) அன்று நடைபெற்றது. அங்கு தனது கருத்துகளை மனோ கணேசன் எம்.பி முன்வைத்தார்.

"30 வருட கால யுத்தத்தின் போது வடக்கு_ கிழக்கு மக்கள் உணவு, எரிபொருள், மின்சாரம் உட்பட எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக வாழ்ந்தார்கள். அரசாங்கம் அங்கிருந்த 3 இலட்சம் மக்களுக்கு உணவு அனுப்பாமல் அரைவாசி மக்களுக்கே உணவு அனுப்பியது. ஏனைய மக்கள் பட்டினி கிடந்தார்கள். இன்றைய பொருளாதார நெருக்கடிப் போராட்டம் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் புதிதல்ல. அவர்கள் அதற்குப் பழக்கப்பட்டவர்கள். இன்றைய வாழ்க்கை முறையில் அம்மக்கள் வாழ்ந்து மடிந்தவர்கள் என்று அந்த ஊடகவியலாளருக்கு நான் கூறி வைத்தேன்.

இலங்கை பல்லின மற்றும் பல கலாசாரம் கொண்டதொரு நாடாகும். மாறாக இதனை சிங்கள பௌத்த நாடு என்றோ அல்லது தனியொரு இனம் மற்றும் மொழியைக் கொண்டதொரு நாடு என்றோ சொல்வதனை ஏற்றுக் கொள்வதற்கு நான் ஒரு போதும் தயாரில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தமிழ் கட்சித் ... (03 ஆ ம் பக்கத் தொடர்)

தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் 21 ஆவது திருத்தம் குறித்து அனைத்து கட்சி தலைவர்களும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். எனவே, இன்று கூடவுள்ள தமிழ் கட்சிகள், 21 ஆவது திருத்தம் தொடர்பாக கலந்துரையாடி தமது இறுதி நிலைப்பாட்டை அறிவிக்கவுள்ளனர்.

## 21 ஆவது... (03 ஆம் பக்கத் தொடர்)

பின்னர் அனைத்து தகவல்களும் ஊடகங்களுக்கு வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை வகிப்பது அவசியமானது எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையானோர் அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவளிக்கத் தயாராக உள்ளதோடு, ஐக்கிய மக்கள் சக்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஒன்பது கட்சிகளின் கூட்டணிஉட்பட பல அரசியல் கட்சிகள் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளன. (பா)

## சர்வதேச சந்தையில்...

நேற்றைய தினம் 18 டொலர்களால் வீழ்ச்சியடைந்து, 1,851 டொலராக காணப்பட்டது. இதேவேளை, கொழும்பில் நேற்றைய தினம் 24 கரட் ஒரு பவுண் தங்கம் 187,000 ரூபாவுக்கும் 22 கரட் தங்கம் 173,000 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டதாக சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ரஷ்யாவுடன்...

விரைந்து தீர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நீதி அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் ரஷ்யாவுக்கு அறிவித்துள்ளார்.

Aeroflot விமான சேவை நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட Celestial Aviation Trading நிறுவனத்திற்கு இடையே வணிகப் பரிவர்த்தனை தொடர்பாக ஏற்பட்ட தகராறே இதற்கு காரணம் என அதில் கூறப்பட்டுள்ளது. ரஷ்ய விமானம் ஒன்றுக்கு சொந்தமான MSN 1301 என்ற விமானத்தை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்பட விடாது கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் அண்மையில் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

Celestial Aviation Trading நிறுவனம் செய்த முறைப்பாட்டிற்கு அமைய இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் ராஜதந்திர ரீதியான நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

## இன்று சில பகுதிகளில்...

கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். குறித்த பகுதிகளின் டிப்போக்கள் ஊடாக டீசல் விநியோகம் செய்யப்படாத காரணத்தால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## வெள்ளிக்கிழமைகளில்...

இனிமேல் நான்கு நாட்களுக்கு மட்டும் கடமைக்கு சமூகமளிக்க வேண்டும் என்றும் வெள்ளிக்கிழமைகளில் வீட்டிலிருந்தே தனது பணிகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நிதி நெருக்கடி உள்ளிட்ட விடயங்களை கவனத்திற் கொண்டே இத்தகைய தீர்மானத்தை முன் வைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்து அதன் பின்னர் கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சுற்றாடல் தினத்தையொட்டி மாதிவலை பகுதியில் இடம்பெற்ற மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்ட பின்பு ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## சிறுவர்கள் மத்தியில்...

மற்றவருக்கு பரவக்கூடியது என்றும் எனினும் இது ஆட்கொல்லி நோயல்ல என்பதையும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். அதேவேளை, அவ்வாறான சிறுவர்களை ஆரம்ப பாடசாலை, சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு அல்லது பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டாம் என்றும் நான்கு நாட்கள் அவர்கள் ஓய்வாக வீட்டில் இருப்பதற்கு வழி செய்யுமாறும் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள சிறுவர் மருத்துவம் தொடர்பான விசேட மருத்துவநிபுணர்தீபால் பெரேரா:

ஹென்டிபுட்மவுன்ட் என்ற பெயரில் அறியப்பட்டுள்ள மேற்படி வைரஸ் காய்ச்சலானது சிறுவர்களுக்கு ஏற்படும் போது காய்ச்சலுடன்உடலில்சிவப்பு கொப்பளங்கள் ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளார். இக்காலங்களில் இந்த காய்ச்சல் கொழும்பு நகர் பகுதியில் வெகு வேகமாக பரவி வருவதாகவும்

இந்த வைரஸ் காய்ச்சல் மிக இலகுவாக சிறுவர்கள் மத்தியில் பரவி வருவதாகவும் ஒருவருக்கு ஒரு தடவை என்றில்லாமல் பல தடவைகளும் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு என்றும் தெரிவித்துள்ளார். அவ்வாறு காய்ச்சல் ஏற்படும் சிறுவர்களுக்கு பரசிட்டமோல் வில்லையை வழங்கி வீட்டிலேயே அவர்களுக்கு ஓய்வு பெற்றுக்கொள்ளும் வகையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த காய்ச்சல் ஏற்படும் சில சிறுவர்களுக்கு நகம் கழன்று விடக் கூடிய அறிகுறிகள் உள்ளதாகவும் அவ்வாறு ஏற்பட்டால் அவற்றுக்கு மருந்துகளை எடுக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரசாங்க... (03 ஆம் பக்கத் தொடர்)

சலுகைகளுடனும் அவர்களின் பதவியுயர்வு மற்றும் தரங்களை மீளப் பெறுவார்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளதாக அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் மூலம் அரச ஊழியர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாட்டிற்கு செல்வதற்கு ஊக்கம் கிடைக்கும்.

எனவே, இத்திட்டம் அரச ஊழியர்களுக்கு பல நன்மைகளை வழங்கும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## எதிர்வரும்... (03 ஆம் பக்கத் தொடர்)

மற்றும் பஸ் சேவைகள், பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளை (அம்புலன்ஸ்கள் போன்றவை) ஒரு சில நாட்களுக்குள் மேம்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எரிபொருள் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் போக்குவரத்துத் துறையில் குறைந்த எரிபொருள் பாவனையில் அதிக பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டிய அமைச்சர், அதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதன்படி, இம்மாதம் 15ஆம் திகதிக்குள் பல துறைகளில் போக்குவரத்து நடவடிக்கைகளை மேம்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (பா)

## இன்று முதல் லாப்ஸ் Gas... (03 ஆம் பக்கத் தொடர்)

அண்டிய பிரதேசங்களில் எரிவாயு சிலிண்டர்கள் வினியோகிக்கப்பட்டு டுள்ளதாகவும் ஏனைய பகுதிகளுக்கு விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

இதன்படி, 12.5 கிலோ கிராம் லாஃப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 6,000 ரூபாவை விட அதிகரிக்கும் என பேச்சாளர் தெரிவித்தார்.

சுமார் ஒரு வருடமாக லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் மீண்டும் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கடந்த இரு தினங்களாக விநியோகிக்கப்படவில்லை என நிறுவனம் தெரிவித்துள்ளது. 2,500 மெட்ரிக் தொன்கள் எரிவாயுவுடன் கூடிய கப்பல் ஒன்று நேற்று நாட்டை வந்தடைய இருந்தது.

அதன்படி, நாளை செவ்வாய்கிழமை முதல் எரிவாயு விநியோகத்தை மீள ஆரம்பிக்க எதிர்ப்பார்த்துள்ளதாக Litro மேலும் தெரிவித்துள்ளது. அதுவரை வரிசையில் காத்திருக்க வேண்டாம் என லிட்ரோ எரிவாயு நுகர்வோரை கேட்டுக்கொண்டுள்ளது.

## மைத்திரியை மடக்கி... (03 ஆம் பக்கத் தொடர்)

ஏற்றுக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரும் பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, ஜகத் புஷ்பகுமார, லசந்த அழகிய வண்ண, துமிந்த திஸாநாயக்க உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

கட்சியிலிருந்து தங்களை நீக்குவதற்கான கடிதம் அனுப்பப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான சந்திப்புகளுக்கு அழைப்பு விடுப்பதை தவிர்க்குமாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதன்போது தெரிவித்துள்ளார். எனினும் அவ்வாறான கடிதம் எவையும் அனுப்பப்படவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். தனிப்பட்டோரின் தேவைக்காக அவ்வாறானகடிதங்கள்அனுப்பப்பட்டுள்ளதாகவும்ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவினாலேயே அது அனுப்பப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜோன்ஸ்டனை தேடும் ...

இடம்பெற்று வருகின்றன.அதற்கமைய, இரண்டு விசேட பொலிஸ் குழுக்களை குற்ற விசாரணை பிரிவு நியமித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் எதிர்வரும் சில தினங்களில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 09 ஆம் திகதி கொள்ளுப்பிட்டி, காலி முகத்திடல் மற்றும் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற கலவரம் தொடர்பில் 2348 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 1,037 பேர் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். கடந்த 9ஆம் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆக்ரோஷமான முறையில் பேசி, தொண்டர்களை கிளர்த்தெழ செய்ததாக சமூக ஊடகங்களில் பலர் கருத்து வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## டீசல் கையிருப்பு...

கபில நாதுன்ன தெரிவித்தார்.

தற்போது தினசரி டீசல் விநியோகம் சுமார் 2,500 மெற்றிக் தொன் வரையில் குறைக்கப்பட்டுள்ளதாகவும், பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் தற்போது சுமார் 40,000 மெற்றிக் தொன் டீசல் மாத்திரமே இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். எதிர்வரும் 9 அல்லது 10 நாட்களில் ஒரு கப்பல் நாட்டை வந்தடையவுள்ளதாகவும் ஆனால் அது தொடர்பில் அதிகாரபூர்வ அறிவிப்பு இதுவரையில் இல்லையென தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் உதவியுடன், அடுத்த டீசல் கப்பல் எதிர்வரும் 16ஆம் திகதி நாட்டை வந்தடையும் வரையில், தற்போது கையிருப்பில் உள்ள டீசலை வைத்து தற்போதைய நிலைமையை முன்னெடுத்துச் செல்ல முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## சீனாவிலிருந்து...

இந்த மருந்துப்பொருட்கள் சீன அரசு மற்றும் அந்நாட்டின் பௌத்த அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு சமூக அமைப்புகளால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

சீன அரசாங்கத்தினால் வழங்கப்படும் மருந்துப்பொருட்களின் மற்றுமொரு தொகுதி, இந்த மாதத்திற்குள்ளேயே நாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளதுடன், அதன் பெறுமதி 28 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாகும்.

## பங்களாதேஷ் தீ....

இதுகுறித்து தகவல் அறிந்ததை அடுத்து பொலிஸார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் வாகனங்களுடன் விரைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயன்றனர். அப்போது கிடங்கில் திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. இதில் தீயணைப்பு வீரர்கள் உட்பட சுமார் 450 பேர் படுகாயமடைந்தனர். இந்த தீ விபத்தில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சுவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரசாயன எதிர்வினையின் காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இது குறித்து அதிகாரிகள் தொடர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## அன்றாட கூலி வேலை...

அனைத்தும் இரண்டு, மூன்று மாதங்களில் முடிவடையக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

இனிவரும் காலங்களில் பட்டினி சாவுகள் வருவதற்கான வாய்ப்புகளே கூடுதலாக உள்ளது.

சாதாரணமாக உழைக்கின்ற அன்றாட கூலி செய்கின்ற மக்களுடைய நிலைமை மிகவும் மோசமாக, பரிதாபமாக இருக்கின்றது.

அரசாங்கம் முதலிலே பசளையை இறக்கி விவசாயிகளுக்கு கொடுக்கின்ற போது கஞ்சியாவது குடித்து மக்கள் இருக்கின்ற வாழ்க்கையை உண்டு பண்ணலாம்.

பசளையை இறக்கி விவசாயிகளுக்கு கொடுப்பதன் ஊடாக நெல் உற்பத்தி பெருகும். அதேபோல் தோட்டங்களில் பயிர்ச் செய்கின்ற போது மரக்கறிகளை செய்கின்ற வாய்ப்புக்களும் ஏற்படும்.

அரசாங்கம் பசளையை விவசாயிகளுக்கு இறக்கி கொடுப்பதன் ஊடாகத் தான் பட்டினியில் இருந்து மக்களை மீட்க முடியும்.

இந்திய பிரதமர் இவ் விடயத்திலே கவனம் செலுத்தி உடனடியாக பசளையை தந்துதவுமாறு கேட்டிருக்கின்றேன்.

பசளை கிடைக்கின்ற போது ஓரளவிற்காவது பட்டினியை நிவர்த்தி செய்கின்ற வாய்ப்புகளை உண்டு பண்ணலாம் என்பது எனது ஆலோசனை என மேலும் தெரிவித்தார்.

## பாடசாலைகள் இன்று...

மீள திறக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 19ஆம் திகதி முதலாம் தவணையின் முதலாம் கட்டத்தை நிறைவுறுத்தி பாடசாலைகளுக்கான விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய இன்று முதல் ஆரம்பமாகும் புதிய கட்டத்திற்கான பாடதிட்டங்களை நிறைவு செய்வதற்கு முன்னுரிமை வழங்குமாறு சகல பாடசாலைகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இன்று முதல் பாடசாலை கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுகின்ற போதிலும் தற்போது ஏற்பட்டுள்ள டீசல் தட்டுப்பாடு காரணமாக மாணவர்களுக்கான போக்குவரத்து சேவையில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள 18,000 தனியார் பஸ்களில் 6,000 பஸ்கள் மாத்திரமே இன்றைய தினம் சேவையில் ஈடுபடவுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன எமது செய்தி சேவைக்கு குறிப்பிட்டார்.

எனினும் பாடசாலை மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் குறித்த பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையின் விடைத்தாள் திருத்தப் பணிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

106 மத்திய நிலையங்களில் விடைத்தாள் திருத்தப்பணிகள் நடைபெறவுள்ளன.இரண்டாம் கட்ட விடைத்தாள் திருத்தப் பணிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 09 ஆம் திகதி வரை 25 மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. விடைத்தாள் திருத்தப் பணிகளில் சுமார் 40,000 பரீட்சை மதிப்பீட்டாளர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகவும் திணைக்களம் கூறியுள்ளது.

இதனிடையே, 2021 ஆம் ஆண்டிற்கான கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளை அடுத்த மாத இறுதியில் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரயோக பரீட்சைகள் நடைபெற்ற பின்னர் பரீட்சை முடிவுகளை வெளியிடவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தர்மசேன கூறியுள்ளார்.

இதற்கமைவாக, பொறியியல் தொழில்நுட்ப பாடநெறிக்கான பிரயோக பரீட்சை எதிர்வரும் 10 ஆம் ஆரம்பமாகவுள்ளது.எதிர்வரும் 17 ஆம் திகதி உயிரியல் தொழில்நுட்ப பாடநெறிக்கான பிரயோக பரீட்சையும் எதிர்வரும் 29 ஆம் திகதி மனைப் பொருளியல் பாடநெறிக்கான பிரயோக பரீட்சையும் நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## நீதிமன்ற உத்தரவை...

தெரிவித்துள்ளார். நீதி மன்ற உத்தரவை மீறி அரசாங்கத்தினால் செயற்பட முடியாது என்று குறிப்பிட்ட அவர் அனுமதி கோரினால் அனுமதிக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

நேற்று (05) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையை ஒரு தரப்பு இணைப்பது சரியா தவறா என்பதை தெளிவுபடுத்துவதற்காக சட்டத்தரணிகள் குழு நீதிமன்றத்திற்கு சென்றது, விமானத்தை இலங்கையிலிருந்து வெளியேற அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்து நீதிமன்றம் செல்லவில்லை.

இரண்டாவது பிரதிவாதிக்கு இந்த தடை உத்தரவு பொருந்தாது எனவும், அதில் இருந்து இலங்கைக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் விமானத்தை தடுத்து வைக்கவோ அனுப்பவோ விமான கட்டுப்பாட்டாளருக்கு அதிகாரம் கிடையாது. சிவில் விமான அதிகார சபைக்கே அது தொடர்பான அதிகாரம் உள்ளது.

எவ்வாறாயினும், சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் இது தொடர்பில் Aeroflot க்கு அறிவித்துள்ளதோடு, அனுமதி கோரினால் குறித்த விமானத்தை எடுத்துச் செல்ல அனுமதி வழங்க முடியும் எனவும், இலங்கைக்கான ரஷ்ய தூதுவருக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் இலங்கை அரசு தரப்பில் எந்த தவறும் இல்லை என்றும், இந்த விவகாரத்தில் சட்டரீதியாக தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் உரிய உத்தரவை கடைபிடிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

மேலும், நீதிமன்ற உத்தரவை வேறு எந்த வகையிலும் மாற்ற முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.




முத்தமிழ் அறிஞர் மு. கருணாநிதியின் 99வது ஜென்ம தின நினைவேந்தலும், அல்லலுறும் இலங்கை மக்களுக்கு உதவி அளித்து வரும் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வும் வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் இந்து சமய கலாசார அமைச்சர் பி. பி தேவராஜ், பேராசிரியர் அ. சர்வேஸ்வரன், திருமதி உமா சந்திரபிரகாஷ், கே. ரி குருசாமி, வைத்தியகலாநிதி அனுஷந்தன் சிவப்பிரகாசம், சிரேஷ்ட ஊடகவியலாளர் என். எம். அமீன் கவிதாயினி சீமரா அலி, கவிஞர் காத்தான்குடி பவுஸ், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், தம்பிராசா ஈஸ்வரராஜ உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். படம்: எம்.நசார், ஏ.கே.விஜேபாலன்

# மலையக அரசியல்: தலைமைகளும் தளபதிகளும்

## நூல் லண்டனில் வெளியீட்டு விழா

மூத்த தொழிற்சங்கவாதியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி வேலுப்பிள்ளை 1958 களில், "மலைநாட்டுத் தமிழ் மக்கள் தலைவர்கள்" என்ற தலைப்பில் நடேச ஐயர், அப்துல் அஸீஸ், எஸ்.தொண்டமான், ஜார்ஜ் ஆர். மோத்தா, பெரிசுந்தரம், கே. இராஜலிங்கம், ஐ.எக்ஸ்.பெரேரா, எஸ்.பி. வைத்திலிங்கம், குஞ்சுப் பொரி சண்முகம், ஏ.எஸ்.ஜோன், டி. சாரநாதன், சி.எஸ்.சிவனடியான் ஆகியோர் பற்றி எழுதிய கட்டுரைகளையும், மலைநாட்டு தமிழ் மக்கள் உரிமைப் போர்த்தளபதிகள் என்ற தலைப்பில் எஸ்.எம்.சுப்பையா, எஸ்.செல்லையா, கே.குமாரவேல், வி.கே.வெள்ளையன், டி.இராமானுஜம், சிவபாக்கியம் குமாரவேல், பி.தேவராஜ், கோகிலம் சுப்பையா, போஸ் (ஆர்.எம்.) செல்லையா, எஸ்.நடேசன், கே.சுப்பையா, கே.ஜி.எஸ்.நாயர், எஸ்.மாரியப்பா,




எஸ்.சோமசுந்தரம் ஆகியோர் பற்றி எழுதிய கட்டுரைகளையும் சேர்த்து மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும் என்ற தலைப்பில் மு. நித்தியானத்தன், எச். எச் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் தொகுத்து வெளியிடுகின்றனர்.

சி.வியின் இந்த புதிய வரலாற்று ஆவணத்தின் வெளியீட்டு விழா லண்டன் மலையக இலக்கிய மகாநாட்டில் 11 ஜுன் 2022 இல் நடைபெறும்.

மலையக எழுத்தாளர்களும் சமூக செயற்பாட்டாளர்களுமான சி.வி. வேலுப்பிள்ளை, கோகிலம் சுப்பையா, இர. சிவலிங்கம், கவிஞர் தமிழோவியன், சாரல் நாடன், பேராசிரியர் சோ. சந்திரசேகரன், காத்தாயி ஆகிய ஏழு அரங்குகளில் 25 மலையக எழுத்தாளர்களின் நூல்களின் விமர்சனங்களும் இந்த மாநாட்டில் இடம்பெறுகின்றன.

சென்னை தாய் பதிப்பகம் வெளியீட்டின் சார்பில் குமார் ராஜேந்திரன் இந்நூலை பதிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவை குறிவைக்கும் சீனாவின் இராணுவ நகர்வுகள்

## இந்தியா மென்மையாக நடந்துகொள்வதாக அவதானிகள் குற்றச்சாட்டு

உலக நாடுகளின் பார்வை ரஷ்ய உக்ரைன் யுத்தத்தில் நிலைத்திருப்பதைப் பயன்படுத்தி சீனா தன் அண்டை நாடுகளின் எல்லைப் புறத்தில் ஆக்கிரமிப்பில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இமாலய பிரதேசத்திலும் தென் சீனக் கடற் பிராந்தியத்திலும் இராணுவ நோக்கங்களுடன் கூடியதாக இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

சீனா லடாக் எல்லையோரமாக இந்திய நிலத்தை சீன இராணுவம் ஆக்கிரமித்ததில் அப்பிரதேச்தில் இந்திய இராணுவம் குவிக்கப்பட்டதோடு மோதல்களும் நிகழ்ந்தன. பின்னர் இரு நாடுகளின் எல்லையோரமாக சமாதான பிரதேசத்தை உருவாக்கினாலும் பிரச்சினை முற்றாகத் தீர்க்கப்படவில்லை என அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

இமாலய பிராந்தியத்தில் சீனா படிப்படியாக பல உத்திகளைக்



கையாண்டு ஆக்கிரமிப்பில் ஈடுபடுவதாகவும், 624 இராணுவ மயப்படுத்தப்பட்ட கிராமங்களை எல்லையோரமாக சீனா உருவாக்கி வருவதாகவும் தெரிவிக்கும் அவதானிகள், தென்சீன கடலில் காணப்படும் தீவுகளை இராணுவமயப்படுத்தியுள்ளதோடு இராணுவத் தீவுகளையும் உருவாக்கியுள்ளது என்று கூறுவதோடு இவற்றை சீனாவின் யுத்த உத்தியாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

லடாக எல்லைப்புறமாக பெங்ஹொங் ஏரியின் மீது அமைக்கப்பட்டிருக்கும் பாலம், பூட்டானுக்கு உரித்தான பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் பாதைகள், இந்தியாவின் வட கிழக்கு புறமாக பிரதான இந்திய நிலப்பரப்புடன் இணைக்கும் 'சிக்கன் நெக்' என அழைக்கப்படும் குறுகிய நிலப்பரப்புக்கு அண்மித்ததாக அமைக்கப்பட்டுள்ள பாதை என்பன இராணுவ இராஜதிரத்துடனான சீனாவின் நகர்வுகள் என அவதானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியாவை குறிவைத்து சீனா தன் நகர்வுகளை மேற்கொண்டு வருகையில் இந்தியா மென்மையான போக்கையே கடைபிடித்து வருவது கவலையளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அதிகரிக்கும் தெஹ்ரிக் ஈ தலிபான் அமைப்பின் பாகிஸ்தான் மீதான தாக்குதல்

## ஐ.நா. பாதுகாப்பு சபை தகவல்

ஆப்கானிஸ்தானில் இருந்து இயங்கிவரும் தெஹ்ரிக் ஈ தலிபான் பாகிஸ்தான் என்ற பயங்கரவாத அமைப்பு தொடர்ந்தும் பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக



விளங்குவதாக ஐ.நா. சபை வெளியிட்டிருக்கும் புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த பயங்கரவாத அமைப்பு ஏற்கனவே பாக். ஆப்கான் எல்லையோரமாக பாக். காவல் படையினர் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

தெஹ்ரிக் ஈ தலிபான் அமைப்பு பாகிஸ்தானுக்கு எதிராக தொடர்ச்சியாக இயங்கி வந்திருப்பதாகவும் அந்த அமைப்பில் பல்லாயிரம் வெளிநாட்டு பயங்கரவாதிகள் இணைந்திருப்பதாகவும் குறிப்பிடும் ஆப்கான் மீதான ஐ.நா. பாதுகாப்பு சபை கண்காணிபபு குழு, தலிபான்கள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றிய பின்னர் அதிகளவிலான வெளிநாட்டு பயங்கரவாதிகள் இந்த அமைப்பில் சேர்ந்திருப்பதாகவும் அதன் பின்னரேயே பாக். மீதான தாக்குதல்கள் அதிகரித்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

இதேசமயம் ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு பாகிஸ்தான் அளித்திருக்கும் தகவல் குறிப்பில் தெஹ்ரிக் ஈ தலிபான் அமைப்புக்கு இந்திய உளவுத்துறை தேவையான ஆயுத தளபாடங்களையும் நிதியையும் அளித்து வருவதாகவும் எல்லைப்புறத் தாக்குதல்கள் மற்றும் சிவிலியன் இலக்குகளை தாக்கும்படி ஊக்குவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேஷாவார் இராணுவ பாடசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 150 சிறுவர் சிறுமியர் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு இந்த அமைப்பே பொறுப்பு எனத் தகவல்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



திருவையாறு ஒளவைக்கோட்டம் வளாகத்தில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவா் சிலையை டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைமையில் முன்னாள் அமைச்சர் சி.நா.மீ. உபயதுல்லா திறந்து வைத்தார். யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதுவர் ஆ. நடராஜன், மெல்பர்ன் தமிழ்ச் சங்கத் தலைவர் ந.சுந்தரேசன் மற்றும் ஒளவைக்கோட்டம் கலைவேந்தன் ஆகியோர் அருகில் உள்ளனர்.


திகதி 04.06.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4776
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,175,270.00
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 5 9 7 6 6 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,747,309.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3018
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,409,340.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 14 19 50 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,957,697.36

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1254
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,600,600.00
வெற்றி இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 0 3 5 6 8 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,509,570.00

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0085
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,550,260.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 13 17 36 60
விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,700,074.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 806
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,975,620.00
வெற்றி இலக்கினம் O வெற்றி இலக்கங்கள் 02 24 25 82
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 113,007,227.60

கோடி 25+ Mega Power மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1124
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,047,700.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 254,586,574.00
R 12 02 14 32 58
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

திகதி 03.06.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4775
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,512,690.00
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 1 3 4 1 3 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,395,691.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3017
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,174,240.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 02 28 56 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,759,330.96

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1253
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,340,480.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 6 5 6 1 5 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,464,906.00

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0084
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,966,740.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 01 02 29 46
விசேட இலக்கினம் சிம்மம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,700,074.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 805
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,061,800.00
வெற்றி இலக்கினம் J வெற்றி இலக்கங்கள் 21 47 57 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 113,006,466.80

கோடி 25+ Mega Power மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1123
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,011,720.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 254,386,334.00
G 08 02 26 29 61
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk




# நீரில் மூழ்கி ஒன்றரை வயது குழந்தை உயிரிழப்பு

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி மருத நகர்ப்பகுதியில் ஒன்றரை வயது குழந்தையொன்று நேற்று முன்தினம் (04062022) நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளது. கிளிநொச்சி மருத நகர் பகுதியில் ஒன்றரை வயது குழந்தை ஒன்றை காணவில்லை என அவரது பெற்றோர்கள் தேடி வந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த குழந்தை வாய்க்காலில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட சமயம் குறித்த குழந்தை உயிரிழந்துள்ளது. உயிரிழந்த குழந்தையின் சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் பிரதான நீர்ப்பாசன வாய்க்காலில் வழமையாக பெற்றோர்கள் உறவினர்கள் நீராடுவது வழக்கம் இந்த நிலையில் குறித்த குழந்தையும் இவ்வாறு வாய்க்காலுக்கு சென்று நீரில் மூழ்கி உள்ளதாக அறிய முடிகின்றது.

# யாழில் உள்ள 78 ஆயிரத்து 442 சமுர்த்தி பயனாளிகளுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

கரவெட்டி தினகரன் நிருபர்

யாழ். மாவட்டத்தில் உள்ள 78 ஆயிரத்து 442 சமுர்த்திப் பயனாளிகளுக்கு அரசாங்கத்தின் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் வங்கிகளில் வைப்பிலிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சமுர்த்தி பயனாளிகளுக்கு 5ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கும் அதே நேரம் காத்திருப்போர் பட்டியலில் உள்ள 27 ஆயிரத்து 978 பேருக்கு அரசாங்கத்தின் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் 1–2 நபர்களை கொண்ட குடும்பத்துக்கு 5ஆயிரம் ரூபாவும், மூன்று நபர்களை கொண்ட குடும்பத்துக்கு 6400 ரூபாவும், நான்குக்கும் மேற்பட்ட நபர்களை கொண்ட குடும்பங்களுக்கு 7500 ரூபாவாக சமூர்த்திக் கொடுப்பனவுடன் வழங்கப்படவுள்ளது.

அதேநேரம், யாழ் மாவட்டத்தில் சுமார் 6 ஆயிரம் வயது முதிர்ந்தவர்கள் பட்டியலில் காணப்படும் நிலையில் அவர்களுக்கும் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் எரிவாயு விநியோகத்தை முறையாக மேற்கொள்வதற்கு உரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ள நிலையில் எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்தளவிலேயே கிடைக்கப் பெறுகின்றன.

ஆகவே கிடைக்கப் பெறுகின்ற எரிவாயு சிலிண்டர்களை தேவையின் அடிப்படையில் பகிரந்தளிப்பதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியம் என்றார்.

# பசளையை இறக்குமதி செய்தால் கஞ்சியாவது குடித்து மக்கள் வாழ்வார்கள்

ஓமந்தை விஷேட நிருபர்

பசளையை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு கொடுத்தால் கஞ்சியாவது குடித்து மக்கள் வாழ்வார்கள் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நிலமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

விவசாயிகள் சேமித்து வைத்த அரிசி அனைத்தும் இரண்டு , மூன்று மாதங்களில் முடிவடையக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. இனிவரும் காலங்களில் பட்டினி சாவுகள் வருவதற்கான வாய்ப்புகளே கூடுதலாக உள்ளன.

சாதாரணமாக உழைக்கின்ற அன்றாட கூலி செய்கின்ற மக்களுடைய நிலைமை மிகவும் மோசமாக, பரிதாபமாக இருக்கின்றது. அரசாங்கம் முதலிலே பசளையை இறக்கி விவசாயிகளுக்குக் கொடுத்தால் கஞ்சியாவது குடித்து மக்கள் வாழ்வார்கள்.



பசளையை இறக்கி விவசாயிகளுக்கு கொடுப்பதன் ஊடாக நெல் உற்பத்தி பெருகும். அதேபோல் தோட்டங்களை செய்கின்ற போது மரக்கறிகளை செய்கின்ற வாய்ப்புக்களும் ஏற்படும். அரசாங்கம் பசளையை விவசாயிகளுக்கு இறக்கி கொடுப்பதன் ஊடாகத்தான், பட்டினியில் இருந்து மக்களை மீட்க முடியும்.

இந்திய பிரதமரிடம் இவ் விடயத்திலே கவனம் செலுத்தி உடனடியாக பசளையை தந்துதவுமாறு கேட்டிருக்கின்றேன். பசளை கிடைக்கின்ற போது ஓரளவிற்காவது பட்டினியை நிவர்த்தி செய்கின்ற வாய்ப்புகளை உண்டு பண்ணலாம் என்பது எனது ஆலோசனை என மேலும் தெரிவித்தார்.

# நுணாவில் மேற்கு விளைவேலி வீரகத்தி விநாயகர் மகோற்சவம் நேற்று ஆரம்பம்

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்களுக்கு நடைபெறவுள்ளது. இதற்கமைய எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30. மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 15 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனமும் இடம்பெற்று மகோற்சவம் நிறைவு பெறும்.

# முல்லைத்தீவு சுற்றுலா கடற்கரையில் சிரமதான பணி



மாங்குளம் குருப் நிருபர்

உலக சுற்றுச்சூழல் தினமான நேற்று முல்லைத்தீவு சுற்றுலா கடற்கரையில் சிரமதான பணி

உலக சுற்றுச்சூழல் தினமான நேற்று முல்லைத்தீவு சுற்றுலா கடற்கரையில் சிரமதான பணி ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கரித்தாஸ், கியூடெக் அரசசாற்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த சுத்தம் செய்யும் நிகழ்வில் அருட் தந்தையர்கள் முல்லைத்தீவு,கிளிநொச்சியினை சேர்ந்த மக்கள், முல்லைத்தீவு பொலிஸார் ஆகியோர் ஈடுபட்டார்கள்.

மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் இந்த சுத்தம் செய்யும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இவர்கள் சுற்றுலா கடற்கரையில் உள்ள பொலித்தீன் மற்றும் கழிவுகளை அகற்றும் நடவடிக்கையில் சுமார் ஒரு மணி நேரம் ஈடுபட்டார்கள்.

# சிவசிதம்பரத்தின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

கரவெட்டி தினகரன் நிருபர்

தமிழ்த் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் மு. சிவசிதம்பரத்தின் 20 ஆவது நினைவுதினம் நேற்று நெல்லியடி பஸ் நிலைய சதுக்கத்தில் உள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு முன்பாக அனுஷ்டிக்கப்பட்டது. கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் செயலாளர் இ. இராகவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஒன்றியத் தலைவர் உபாலி பொன்னம்பலம், எஸ் பொன்னம்பலம் பிரதான தீபத்தை ஏற்றி வைத்து உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து யாழ் மாவட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செ கஜேந்திரன், முன்னணயின் கரவெட்டி பிரதேசசபை உறுப்பினர்களான எஸ். சிவராசா, கந்தப்பு, இளங்கோ, க கிரிதரன், எஸ். நடராசன் ஆகியோர் உள்ளிட்ட பலர் மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினார்கள். தொடர்ந்து கரவெட்டி அத்துளுஅம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள அமரர் சிவசிதம்பரத்தின வீட்டில் உள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ் இராசையா, ஆதரவாளரான எஸ் சிதம்பரநாதன், ஓய்வுநிலை அதிபர் இ. இராகவன் ஆகியோர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.



# விபத்தில் பெண் துறவி உயிரிழப்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் துறவி ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் மாநகர சபைக்கு அருகில் சனிக்கிழமை இடம்பெற்ற குறித்த விபத்தில் மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தை சேர்ந்த ஓங்கார ரூபி (வயது 70) எனும் பெண் துறவியே உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை வீதி ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த பெண் துறவி மாநகர சபைக்கு அருகில் உள்ள வீதிக்கு சடுதியாக திரும்ப முற்பட்ட வேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியே விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கோண்டாவிலில் மோட்டார் சைக்கிள் தீக்கிரை



யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் உள்ள வாகன திருத்துமிடம் ஒன்றில் மோட்டார் சைக்கிள் ஒன்று சனிக்கிழமை தீப்பிடித்து முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வாகனத் திருத்துமிடத்தில் மோட்டார் சைக்கிளின் பாகம் ஒன்று மின்சாரம் மூலம் ஒட்டப்பட்டுக் கொண்டிருந்த போது, எழுந்த தீப்பொறியினால் மோட்டார் சைக்கிளில் தீப்பற்றியுள்ளது. இதனையடுத்து வாகன திருத்துமிடத்தில் இருந்தவர்கள் தீயை அணைக்க முயற்சித்த போதும், முயற்சி பயனளிக்காத நிலையில் மோட்டார் சைக்கிளின் பெரும் பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

# சாவகச்சேரி நகரசபை உலருணவு வழங்க ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி நகரசபை தமது சபை எல்லைக்குட்பட்ட வறுமை நிலையில் உள்ள 200குடும்பங்களுக்கு உலருணவு வழங்க ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது. அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போது சபை உறுப்பினர் க.கஜிதன் சில உள்ளூராட்சி சபைகள் பொருளாதார நெருக்கடியான தருணத்தில் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு உதவியிருப்பதாக சுட்டிக்காட்டிய நிலையில் சாவகச்சேரி நகரசபையும் அவ்வாறு உதவித்திட்டம் வழங்க முன்வந்துள்ளது. 2022ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள குறித்த நிதியை வறுமை ஒழிப்பிற்கு செலவிடுவதற்கான அனுமதியை விரைவில் தந்துதவுமாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் அனுப்பவும் நகரசபையினர் தீர்மானித்துள்ளனர். அந்த வகையில் வறுமை நிலையில் உள்ள 200 குடும்பங்களைத் தெரிவு செய்து தலா ஐயாயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவுகள் வழங்கி வைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காமத்துக்கு பாத யாத்திரை

கரவெட்டி தினகரன்

யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காமத்துக்கான பாத யாத்திரை தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை ஆரம்பமாகியது.

வருடா வருடம் யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காமத்துக்கு பாத யாத்திரை செல்லும் குழுவினர் செல்வச் சந்நிதியான் ஆலயத்தில் தங்கியிருந்து காலை தொண்டைமானாறு ஆற்றில் நீராடி வழிபாடு நடத்தி பாத யாத்திரையை ஆரம்பித்தனர்.

முன்னதாக, வலிகாமம் வடக்கு பகுதியில் இருந்து புறப்பட்டவர்கள் கீரிமலை நகுலேஸ்வரம், மாவட்டபுரம் கந்தசுவாமி ஆலயங்களில் வழிபாடு நடத்தி மயிலிட்டி திருப்பூர் ஒன்றியம் பேச்சி அம்மன் ஆலயத்தில் இரவு தங்கியிருந்தனர்.



இவ்வாறு மயிலிட்டி திருப்பூர் ஒன்றியம் பேச்சி அம்மன் ஆலயத்தில் தங்கியிருந்த யாத்திரிகர்களுக்கு உணவு, தேநீர் என்பவற்றை வழங்கியும் நினைவு சால்வைகளை வழங்கியும் ஊர் மக்கள் உபசரித்திருந்தனர்.

மயிலிட்டி திருப்பூர் ஒன்றியம் பேச்சி அம்மன் ஆலயத்தில் வழிபாட்டினை மேற்கொண்டு நேற்று காலை 8.00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வைகாசி விசாகம்



முருகன் என்றாலே தமிழ் கடவுள் என நம் அனைவருக்கும் தெரியும். முருகனுக்கு உகந்த நக்ஷத்ரங்களாக அழைக்கப்படுவது க்ருத்திகை பூசம் விசாகம். இந்த நக்ஷத்ரங்களில் பௌர்ணமி வரும் நாள் முருகனுக்கு உகந்த நாட்களாக சொல்லப்படுகிறது. அதாவது திருக்கார்த்திகை கார்த்திகை மாதம் வரும் பௌர்ணமி, அதே போல் தை மாதம் பௌர்ணமி வரும் நாள் தைப்பூசம், இதே போல் வைகாசி மாதம் வரும் பௌர்ணமி வைகாசி விசாகம் என்று சொல்லப்படுகிறது. இந்த வைகாசி விசாகம் முருகன் பிறந்த நாளாக கருதப்படுகிறது. விசாகம் நக்ஷத்ரத்திற்கு என்று பல சிறப்புகள் உள்ளது. அதில் முக்கியமானது ஐப்பசி மாதம் வரும் கந்த சஷ்டி விரதம் துவங்குவது இந்த விசாக நக்ஷத்ரத்தில்தான். இந்த விசாக நக்ஷத்ரத்திற்கு ஜோதிட ரீதியாக குரு அதிபதி ஆவார்.

வைகாசி விசாகம் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டியது:

முருகன் நவக்கிரகங்களில் செவ்வாய்க்கு அதிபதி. தைரியம் வீரம் வீடு மனை வாகனப் ப்ராப்தம் ரத்தம் சம்பந்தமான உறவுகள் செல்வம் போன்ற பல விஷயங்களுக்கு அதிபதி முருகன். முருக பெருமானின் பிறந்த நாளை வைகாசி விசாகம் என்ற பெயரில் விழாவாக கொண்டாடுகிறோம்.

இந்த திருவிழா முக்கியமாக உலகம் முழுவதும் உள்ள தமிழர்களால் கொண்டாடப்படுகிறது. அம்மனிடமிருந்து முருகன் சக்தியைப் பெற்ற நாளாகவும் இது கொண்டாடப்படுகிறது.

மகாபாரதத்தின் வில் வித்தகனான அர்ஜுனன் சிவனிடமிருந்து பாசுபத ஆயுதத்தை வரமாக பெற்ற நாள்.

பன்னிரு ஆழ்வார்களில் முக்கியமான நம்மாழ்வார் பிறந்த தினம் அன்று.

வைகாசி விசாக சுப தினத்தில் தான் திருமழப்பாடி என்ற ஊரில் சிவபெருமான் மழு என்ற ஆயுதத்தை ஏந்தி திருநடனம் ஆடிய அற்புத நாள்.

முருகன் அவதரித்த வைகாசி விசாக தினத்தில் பிறப்பவர்கள் அறிவுக் கூர்மையுடன், பல புகழ்களை அடைவார்கள் என கருதப்படுகிறது.

இப்படி பல சிறப்புகள் நிறைந்த வைகாசி விசாக தினத்தில் நாமும் விரதம் இருந்து முருகப் பெருமானை வணங்கினால் ஞானமும், எல்லா வகை செல்வமும் கிடைத்து சிறப்பாக வாழலாம்.

**சைவ மஞ்சரி**

## மானுடவியல்

(தொடர்)

### காரைக்கால் அம்மையார்



74

அவன் மனைவியாராகிய புனிதவதியார் பரமசிவனுடைய திருவடிகளிலே அன்பு மேன்மேலும் பெருக, இல்லறத்திற்கு வேண்டுவனவற்றை வழுவாது செய்வாராயினார். தம்முடைய வீட்டுக்குச் சிவனடியார்கள்வரின், அவர்களைத் திருவமுது செய்வித்து, அவரவர் வேண்டியபடி பொன் இரத்தினம் வஸ்திரம் முதலாயின உதவுவார்.

இப்படி நிகழுங்காலத்தில் ஒருநாள் பரமதத்தனிடத்திற் காரியமூலமாக வந்தவர்கள் சிலர் அவனுக்கு இரண்டு மாம்பழங்கொடுக்க; அவன் அவைகளை வாங்கிக்கொண்டு அவர்கள் கருத்தை முடித்து, அவைகளை மனைவியாரிடத்திற்கு அனுப்பிவிட்டான்.



புனிதவதியார் அவைகளை வாங்கி வைத்தார். பின்பு, சிவனடியார் ஒருவர் பசியினால் வருந்தி, அவர் வீட்டிற்சென்றார். புனிதவதியார் அவ்வடியவருடைய நிலையைக் கண்டு, கலத்தை வைத்துச் சோறு படைத்து, அந்நேரத்திலே கறியமுது பாகம் பண்ணப்படாமையால், "சிவனடியவரே பெறுதற்கு அரிய விருந்தினராய் வந்தபொழுதே, இதைப் பார்க்கிலும் பெறவேண்டிய பேறு நமக்கு ஒன்றும் இல்லை" என்று நினைந்து, தம்முடைய கணவன் அனுப்பிய மாம்பழங்கள் இரண்டினுள் ஒன்றை எடுத்துக்கொண்டு வந்து படைத்து, அவ்வடியாரைத் திருவமுது செய்வித்தார். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

### நவக்கிரக வழிபாடு

***19102) அவரை வணங்கி விட்டு பின்னர் என்னசெய்யலாம்?***
உப தெய்வங்களை வணங்கலாம்.

***19103) எப்பொழுது நவ கிரகத்திற்கு வந்து நிற்க வேண்டும்?*** இறுதியாக

***19104) முதலிலேயே நவகிரகத்தை வணங்குவது சரியா?***
தவறான செயலாகும்.

***19105) நவகிரக வழிபாட்டில் மிகவும் விசேஷமானது எது?***
நவகிரகங்களுக்கு வஸ்திரம் சாற்றி வழிபடுவது அல்லது நவ கிரகங்களுக்கு உரிய தானியங்கள் தானம் செய்வது, அந்தந்த கிரகங்களுக்கு உரிய மலர்களை சாற்றி வழிபடுவது.

### ஸ்வஸ்திக் சின்னம்

***19106) நாம் எந்த ஒரு காரியத்தை துவங்குவதாக இருந்தாலும் முதலில் யாரை வணங்குவோம்?***
விநாயகரை

***19107) இப்படி முதற்கடவுளான விநாயகரை வணங்கிவிட்டு தொடங்கும் எந்த ஒரு காரியமும் எப்படி இருக்கும்?***
சிறப்புடன் நடந்து முடியும்.



***19108) அவ்வாறு சிறப்பு வாய்ந்த விநாயகரின் கையில் சிறப்பு சின்னமாக வரையப்பட்டுள்ளது எது?***
ஸ்வஸ்திக் சின்னம்.

***19109) இந்த ஸ்வஸ்திக் சின்னம் எங்கு வரையப் பட்டுள்ளதை பார்த்திருப்பீர்கள்?***
பலரின் வீட்டு வாசலில்

***19110) அவ்வாறு இதனை ஏன் பயன்படுத்துகிறார்கள்?***

***19111) இந்த ஸ்வஸ்திக் சின்னத்தின் வடிவமானது எப்படி இருக்கிறது?*** நான்கு திசைகளையும் குறிக்கின்ற விதத்தில் இருக்கிறது.
மேலிருந்து கீழாகவும், இடமிருந்து வலமாகவும், ஒவ்வொரு கோடும் ஒன்றிற்கு மேல் குறுக்கே செல்லுமாறு இந்த ஸ்வஸ்திக் சின்னம் வரையப்படுகிறது.

***19112) இதனை வீடுகளில் எங்கு, எப்படி வரைந்து வைத்திருப்பார்கள்?*** வீட்டு நிலை வாசலில் மஞ்சள், குங்குமம் பயன்படுத்தி இந்த ஸ்வஸ்திக் சின்னத்தை வரைந்து வைப்பார்கள்.

***19113) ஸ்வஸ்திக் என்றால் என்ன பொருள்?*** தடையற்ற வாழ்வு என்று பொருள்.

***19114) இந்த ஸ்வஸ்திக் சின்னம் எப்படிபட்டதாக விளங்குகிறது?***
வெற்றியை ஏற்படுத்திக் கொடுக்கும் சின்னமாக விளங்குகிறது.

***19115) ஸ்வஸ்திக் என்பது எங்கு அதிர்ஷ்ட அடையாளமாக இருக்கிறது?*** ஜெர்மனியில்

***19116) அது மட்டுமல்லாமல் வேறு எதன் சின்னமாகவும் இந்த ஸ்வஸ்திக் இருக்கிறது?*** நலத்தின்

***19117) ஸ்வஸ்திக் என்ற இந்தப் பெயர் எந்தமொழியிலிருந்து வந்தது?***
சமஸ்கிருதத்திலிருந்து

***19118) இதில் "ஸ்" என்பதற்கு என்ன பொருள்?*** நல்லது

***19119) "அஸ்தி" என்பதற்கு என்ன பொருள்?***
நல வாழ்வு









மெராயா நகர செல்வவிநாயகர் ஆலய வருடாந்த தேர்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது தேர் ஊர்வலம் இடம்பெற்றது.

தெல்தோட்டை தினகரன் நிருபர் ஆர. நவராஜா.

## நாதப் பிரம்ம யோகம் - 22



இசை பற்றிய அறிவியல் ஆய்வுகள் மற்றைய அறிவியல் துறைகளில் இருப்பதைப் போலவே முறைப்படி அறிவியலால் ஆராயப்படுகிறது.

பல ஆராய்ச்சிகள் புலன் வழி சென்று துன்ப முறுகிற மனதிற்கு அகத்தின் வழி சென்று நிம்மதி அனுபவிக்க இசை பெருந்துணை புரிகிறது என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இசை என்பது உண்மை அன்பிற்கு சமமான ஒன்றாக கூறப்பட்டிருக்கிறது. இந்த இரண்டும் புத்தாக்கத்தைத் தரும் சக்திகள்.

இரண்டும் உயிர் வாழ்க்கையின் ஜடம்,சேதனம் ஆகிய இரண்டையும் தாக்கி இன்பத்தைத் தரக்கூடியது.

இசை அகத்தினை தூண்ட ஒரு நல்ல சாதனம். அதனால் இசையை தகுந்த இசைக்கருவி ஒன்றின் உதவியுடன் நாம் பாடவேண்டும் என்று தத்துவஞானியும், கணிதவியலாளருமான பைதகரஸ் கூறுகிறார்.

Dr. McFaden என்பவர் இசைக்கருவிகளை விட குரலிசையை மிக உயர்ந்த ஒன்றாக கூறுகிறார். Dr. McFaden இனது ஆய்வு ஸ்தூல உடலின் ஆரோக்கியத்தினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பைதகரஸின் கருத்து மனஆதங்கத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆன்மாவினை அடிப்படையாகக் கொண்டு மகாகவி ரவீந்திரநாத் தாகூர் கூறுகிறார். 'வாழ்க்கை தெய்வீக அழகுடன் மிளிர வேண்டும் என்றால் அது இசையாலே மாத்திரம்தான் சாத்தியம்' என்றார். ருஷ்டின் என்பார் அகவிழிப்பிற்கு, ஆளுமை விருத்திக்கு, கலை விருத்திக்கு, புத்தாக்க உணர்விற்கு இசை ஒரு அரிய சாதனம் என்று கூறியுள்ளார்.

இத்தகைய பல்வேறு கருத்துக்கள் அவர்களது தனிப்பட்ட அனுபவம் சார்ந்தது. இவை அனைத்தையும் தொகுத்து இசை பற்றிய ஒரு முடிவை நாம் சிந்திப்போமாக இருந்தால் இசை என்பது இயற்கையாக உடல், மனம், ஆன்மாஆகிய மூன்றும் வளர்வதற்குரிய அத்தியாவசிய கூறு என்பது பெறப்படுகிறது.

இதனாலேயே புராதன ரிஷிகள் சங்கீத சாஸ்திரத்திற்கு மிக உயர்ந்த முக்கியத்துவத்தைக் கொடுத்தார்கள்.

ஸாமவேதம் ரிஷிகளின் அர்ப்பணிப்புடன் கூடிய இசை பற்றிய நுண்ணறிவிற்குரிய ஆதாரமாகும். ஸாம வேதம் என்பது இசையானது இயற்கையாக எப்படி உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் வளர்க்கிறது என்பது பற்றிய ரிஷிகளின் அரிய ஞானமாகும். இதிலிருந்தே ஸ்வரங்கள், தாளங்கள், லயம், ராகம், சந்தங்கள், கதி, மந்திரங்கள், நிருத்யங்கள், முத்திரை, பாவங்கள் என்பவை உருவாகின. இவை அனைத்தும் ஸாம வேதத்திலிருந்து உருவாகியவை.

**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்







வத்தளை, உணுப்பிட்டி அருள்மிகு முத்துக்குமரன் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றது. ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சோதிரத்ன சிவாச்சாரியார் பூஜை வழிபாடுகளை செய்வதையும் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கனகேஸ்வரன் குடும்பத்தினர் காளாஞ்சி பெறுவதையும் நாதஸ்வர வித்துவான் நாகேந்திரன் குழுவினர் நாதஸ்வர கச்சேரி நடத்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஏ. கே. விஜயபாலன்)

# கிழக்கின் குரல்



# கல்முனை பிராந்திய வைத்தியசாலைகளில் மரங்கள் உணவுப்பயிர்களை நடும் வேலைத்திட்டங்கள்

(பாலமுனை விஷேட நிருபர்)

நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, கல்முனை பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் பயன்தரும் மரங்கள் மற்றும் உணவுப்பயிர்களை நடுவதற்கான விஷேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப் பட்டு வருவதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு சனிக்கிழமை (04) ஒருதொகுதி மருத்துவ உபகரணங்களை கையளித்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில் சுகாதார துறையினரும் நாட்டினுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு தங்களாலான பங்களிப்புக்களைச் செய்ய வேண்டும்.

கல்முனை பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலங்கள் உள்ளிட்ட சுகாதார நிறுவனங்களில் போதியளவு நிலங்கள் காணப்படுகின்றன. குறித்த நிலங்களில் பயன்தரும் மரங்கள் மற்றும் உணவுப் பயிர்களை நடுவதற்குரிய விஷேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அவற்றை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு சகலருடைய ஒத்துழைப்புக்களும் அவசியமாகும். நாங்கள் சுகாதாரத் துறையினர் என்றும் அதிகாரிகள் என்றும் கூறிக்கொண்டு சும்மா இருந்துவிட முடியாது.

ஒரு சிறியதொரு பொருளையேனும் கொள்வனவு செய்ய முடியாத இக்காலகட்டத்தில், என்னுடைய தனிப்பட்ட செல்வாக்கினைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ளப் பட்ட மருத்துவ உபகரணங்களில் சுமார் நான்கு மில்லியன் ரூபா



பெறுமதியான உபகரணங்களை பொத்துவில் வைத்தியசாலைக்கு கையளித்துள்ளோம். குறித்த பொருட்களின் மூலம் மக்கள் உச்ச பயனடையும் வகையில் பணியாற்றுங்கள். இல்லையெனில் அவற்றை தேவையான இடங்களுக்கு வழங்கி ஏனையவர்களுக்கும் உதவுங்கள்.

மருந்துப் பொருட்களுக்கு அதிக விலை மற்றும் தட்டுப்பாடுகள் நிலவிவரும் இக்காலகட்டத்தில், அரசாங்க வைத்தியசாலைகளில் நோயாளர்களின் வருகையும் அதிகரித்துக்காணப்படுகின்றது. எனவே மருந்துப் பொருட்களை சிக்கனமாகப் பாவியுங்கள். ஒரு பிளாஸ்டர் துண்டையேனும் வீண் விரயம் செய்துவிடாதீர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புகையிலை, போதை பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு ஊர்வலம்

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

'இது புகையிலை இல்லாத பகுதி' எனும் தொனிப்பொருளில் அக்கரைப்பற்று பிரதேச செயலகமும், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயமும் ஏற்பாடு செய்த புகையிலை மற்றும் போதை பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம் அண்மையில்,அக்கரைப்பற்றில் இடம்பெற்றது.

இதன்போது அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சார், உதவி பிரதேச செயலாளர் ஏ.கே.றொசின்தாஜ், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி எப்.எம்.ஏ.காதர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# உணவுப்பஞ்சத்தை எதிர்கொள்ள அவசர அவசிய உணவு உற்பத்திகள் ஊக்குவிப்பு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

எதிர்வரும் காலங்களில் ஏற்படலாமென எதிர்வு கூறப்படும் உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ள,

அவசர அவசிய உணவு உற்பத்திகளை விவசாய திணைக்களம் ஊக்குவித்து வருவதாக

மட்டக்களப்பு விவசாய உதவிப் பணிப்பாளர் எஸ். சித்திரவேல் தெரிவித்தார். இதன்பொருட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் நிகழ்வு,ஏறாவூர் நகர பிரதேச விவசாயப் போதனாசிரியை எம்.எச். முர்ஷிதாஷிரீன் தலைமையில் ஐயன்கேணியில் நேற்று (05) இடம்பெற்றது.நிகழ்வில் கிராம வீட்டுத் தோட்ட விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களத்தினால் அரை மானிய அடிப்படையில் சிறந்த ரக மிளகாய்,



கொடிப்பயற்றை, பீர்க்கு, வெண்டி ஆகிய நால்வகை மரக்கறிப் பயிர் விதைகள் விநியோகிக்கப்பட்டன.

விவசாயிகள் மத்தியில் தொடர்ந்து உரையாற்றிய உதவிப் பணிப்பாளர் சித்திரவேல், உணவுப் பஞ்சத்தை நாம் எதிர்கொள்ளத் தயாராகின்ற அதேவேளை போஷாக்கைப் பற்றியும் அக்கறை கொள்ள வேண்டும். பட்டினிக்காலத்தில் இளம் பராயத்தினரைப் பாதுகாப்பதற்கு போஷாக்கு முக்கியம். ஒவ்வொருத்தரும் தங்களது வீடுகளிலுள்ள வீட்டுத் தோட்டங்களிலே போஷாக்கான உணவு உற்பத்திகளை மேற்கொள்ள முடியும்" என்றார்.

இந்நிகழ்வில், ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் வி. நிஹாறா, சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டின் இணைப்பாளர் எம்.ஐ. தஸ்லிம் உட்பட விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் கவிதாரணி பிறேம்ரூபன் உட்பட விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

## பாலர் பாடசாலைகளுக்கு குடிநீர் வசதி

(கிண்ணியா தினகரன் நிருபர்)



கந்தளாயில் அமைந்துள்ள மூன்று பாலர் பாடசாலைகளுக்கு குடிநீர் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அல்ஹித்மத்துல் உம்மா பௌண்டேஷன்,இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தது. இவற்றை மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை (02) மாலை 4 மணிக்கு நடைபெற்றது.

அல்ஹித்மத்துல் உம்மா பௌண்டேசனின் தலைவரும் சமூக சேவையாளருமான கஸ்ஸாலி முஹமட் பாத்திஹ் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

விஷேட அதிதியாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளரான ஆசிரியர் ஏ.எல்.முஹமட் நபீல் கலந்து கொண்டார்.

பாலர் பாடசாலைகளான பாத்திமா பாலர் பாடசாலை, அஸ்ஸபா பாலர் பாடசாலை,ஆயிஷா பாலர் பாடசாலை ஆகியவற்றுக்கே இக்குடி நீர் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு இம்மாத இறுதிக்குள் உரம் கிடைக்கும்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு இம்மாத இறுதிக்குள் உரம் கிடைக்கும் என்பது, விவசாய அமைச்சரோடு இடம்பெற்ற சந்திப்பில் உறுதியளிக்கப்பட்டதாக அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் எஸ். யோகவேள் தெரிவித்தார்.

அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் மாவட்டத் தலைவர்களுக்கும், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் இடையிலான சந்திப்பு வியாழக்கிழமை பிற்பகல் (02) விவசாய அமைச்சில் இடம்பெற்றது.

அமைச்சருக்கும் விவசாயிகளுக்குமிடையிலான இச்சந்திப்பு, அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தேசியத் தலைவர் எச். சமரகோன் தலைமையில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில், சமகாலத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி குறிப்பாக இரசாயன உர விநியோகம் பற்றிப் பேசப்பட்டது. இந்தியாவிலிருந்து வந்தடையவுள்ள உரத்தில்,அதன் முதலாவது விநியோகத்திலேயே 65 மெற்றிக்தொன்



உரத்தை மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க அமைச்சர் ஒப்புக் கொண்டதாக அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் யோகவேள் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் தெரிவித்த யோகவேள், இந்தியாவிலிருந்து வெகுவிரைவில் இலங்கை வந்தடையவுள்ள உரத்தின் ஒரு மூடை விலை 10 ஆயிரம் ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் எதிர்வரும் (25) உர விநியோகம் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் கடந்த போகத்தின்போது உர விநியோகம் கிடைக்கப்பெறாததால் நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு ஜூன் மாத இறுதிக்குள் இழப்பீடும் கிடைக்கவுள்ளது. அதேபோன்று, இயற்கைப் பசளை உற்பத்தி செய்தவர் களுக்குரிய கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளதாக இச்சந்திப்பில் தெரவிக்கப்பட்டது. எனினும், களைநாசினி பெற்றுக் கொள்வதற்கான எந்தவித வழிகளும் இன்னும் கண்டறியப்படவில்லை என்றும் யோகவேள் மேலும் தெரிவித்தார்.

## இறக்காமம் பிரதேச மக்களுக்கு உலருணவு பொதிகள் விநியோகம்

(இறக்காமம் தினகரன் நிருபர்)



பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் நன்மை கருதி, தமிழ்நாட்டு மக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட உலர் உணவு அடங்கிய பொதிகள் அம்பாறை மாவட்டத்திலுள்ள இறக்காமம் பிரதேச மக்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

இப்பொதிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு (02) இறக்காமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல் தலைமையில் இடம்பெற்றது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 1195 குடும்பங்களுக்கு இந்நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன. இதில் பாலூட்டும் 89 தாய்மார்களுக்கு பால்மா பக்கட்டுக்களும் வழங்கப்பட்டன.

## கிழக்கில், இன்றும் நாளையும் மகிழ்ச்சிகரமான கற்பித்தல்

( காரைதீவு குறூப் நிருபர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளும் இன்று (06) திங்கட்கிழமை 2022 முதலாம் தவணைக்காக ஆரம்பிக்கப்படுவதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ள நாயகம் தெரிவித்தார் .

இது தொடர்பான அறிவுறுத்தல்களை 17வலயங்களின் வலய கல்வி பணிப்பாளர்களுக்கு அவர்,அறிவித்துள்ளார்.

இன்றும் ,நாளையும் பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் மகிழ்ச்சிகரமான சூழலை ஏற்படுத்துமாறும் அவர் கேட்டிருக்கிறார் .

மாணவர் கழகம் ,கலாசாரக் கழகம் ,மேடை நாடகம், விவாத போட்டிகள் போன்ற பலவிதமான புறக்கிருத்திய செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தி, மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை ஏற்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை ,பாடசாலைகள் மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் தனியார் பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை (06) முதல் மீள ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முதலாம் தவணையின் இரண்டாம் கட்டக்கல்வி நடவடிக்கைகளுக்காக இவ்வாறு பாடசாலைகள் மீள திறக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் (19) முதலாம் தவணையின் முதலாம் கட்டத்தை நிறைவுறுத்தி பாடசாலைகளுக்கான விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

## உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு புலவர் மணியில் மரம் நடுகை

(பெரியநீலாவணை விஷேட நிருபர்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நேற்று (05) பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் மஹா வித்தியாலயம் ஏற்பாடு செய்த மரம் நடுகை நிகழ்வு, பாடசாலை வளாகத்தில் அதிபர் எம். எம். முஹம்மட் நியாஸ் தலைமையில் பிரதியதிபர் எம்.சி நசாரின் ஒருங்கிணைப்போடு நடைபெற்றது. இந்கழ்வில் பாடசாலையின் பழைய மாணவரும் பொத்துவில் மாவட்ட நீதிபதியுமான ஏ.சி. றிஸ்வான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு, பாடசாலையில் பசுமை சூழலை உருவாக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் பயன்தரும் மரக்கன்றுகளை நட்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். பாடசாலைச்சூழலை, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு பொருத்தமானதாக்க பசுமையான சூழலாக உருவாக்க வேண்டிய விடயம் தொடர்பிலும், பாடசாலையின் எதிர்கால கல்விச்செயற்பாடுகள் தொடர்பிலும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமஅதிதி பாடசாலை ஆசிரியர்களோடு சுமுகமாக கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.

## தயிர் உட்கொண்டதில் ஒரே குடும்பத்தில் ஆறுபேருக்கு உபாதை

(றொட்டவெவ குறூப் நிருபர் )

திருகோணமலைறொட்டவெவ பகுதியில் தயிர் உட்கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர் மஹதிவுல்வெவ மற்றும் ஹொரவபொத்தானை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இந்த 6 பேரும் நேற்று (05) காலை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில், ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த 6 வயது 7 வயது மற்றும் 15 வயதுடைய சிறுவர்கள் வயிற்று வலி, வாந்தி பேதியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இதேவேளை தாய் மற்றும் இரு சிறார்கள் ஹொரவ்பொத்தானை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, மாடு மேய்ச்சலில் ஈடுபட்டு வரும் குடும்ப உறுப்பினர் ஒருவர் பாலை தயிராக்கி உட்கொண்டதாகவும் இதனையடுத்தே வயிற்றுவலி, வாந்திபேதி இவர்களுக்கு ஏற்பட்டதாகவும் தெரியவருகின்றது.

குறித்த ஆறுபேரும் தற்பொழுது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணம் கதிர்காமம் பாதயாத்திரை ஆரம்பம்



வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம், கதிர்காமம் பாதயாத்திரை, கடந்த இரண்டு வருடங்களுக்குப்பிறகு கடந்த சனிக்கிழமை (04) ஆரம்பமானது. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமம் நோக்கி இப்பாதயாத்திரை ஆரம்பமானது. (காரைதீவு குறூப் நிருபர்)

# சர்வதேச செய்திகள்

## வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை

பிலிப்பைன்ஸ் கடலில் தென் கொரியா மற்றும் அமெரிக்கா இடையில் போர் ஒத்திகை ஆரம்பிக்கப்பட்டு ஒரு நாளைக்குப் பின் வட கொரியா எட்டு குறுகிய தூர ஏவுகணைகளை சோதனை செய்துள்ளது.

வட கொரியத் தலைநகர் பியொங்யாங்கின் சுனான் பகுதியில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த ஏவுகணைகள் வீசப்பட்டிருப்பதாக தென் கொரியாவின் கூட்டுப் படை தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவை 25 கி.மீ தொடக்கம் 90 கி.மீ இடையில் உயரம் சென்று 110 கி.மீ மற்றும் 600 கி.மீ இடையே பறந்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். 2022 ஆம் ஆண்டில் வட கொரியா மேற்கொள்ளும் 18 ஆவது சுற்று ஏவுகணை சோதனை இதுவாகும்.



## மதத்தலைவருடன் மோதிய ஆடவர் தீயிட்டுக் கொலை

நைஜீரியாவில் முஸ்லிம் மதத் தலைவர் ஒருவருடன் மோதலில் ஈடுபட்ட ஆடவர் ஒருவர் தலைநகர் அபூஜாவில் அந்த மதத் தலைவரின் ஆதரவாளர்களால் தீ வைத்துக் கொல்லப்பட்டுள்ளார்.

30 வயதான அஹமது உஸ்மான் என்ற ஆடவர் சுமார் 200 பேர் கொண்ட கும்பலால் தாக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். எனினும் இந்தப் பிரச்சினைக்கான காரணம் பற்றிய விபரம் வெளியாகவில்லை.

கடந்த மாதம் சொகோடோ என்ற நகரில் மதநிந்தனையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட கிறிஸ்தவ மாணவி ஒருவர் முஸ்லிம் மாணவர்களால் தாக்கிக் கொல்லப்பட்டு அவரது உடலுக்கு தீ வைக்கப்பட்டது.




## கொவிட்-19: இந்தியாவுக்கு அமெ. ஜனாதிபதி பாராட்டு

கொவிட் தொற்றைக் கையாளுவதில் சீனா தோல்வி அடைந்துள்ள போதிலும் இந்தியா வெற்றியடைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இதன் நிமித்தம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் நாட்டின் டோக்கியோ நகரில் நடைபெற்ற குவாட் நாடுகளது தலைவர்கள் மாநாட்டின் மூடிய அமர்வின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி பைடன், இப்பெருந்தொற்றை இந்தியா ஜனநாயக முறைப்படி கையாண்டுள்ளதாகவும் கூறியுள்ளார். கொவிட் பெருந்தொற்றை இந்தியாவும் சீனாவும் ஒப்பீட்டளவில் ஒரே விதமாக எதிர்கொண்ட போதிலும் அதனைக் கையாளுவதில் இந்தியா வெற்றியடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## ஆஸி. விமானத்தை சீனா இடைமறித்தது



அவுஸ்திரேலியாவின் கண்காணிப்பு விமானத்தைச் சீனப் போர் விமானம் இடைமறித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் தென் சீனக் கடற்பகுதியில் அந்த சம்பவம் நேர்ந்ததாக, அவுஸ்திரேலியாவின் பாதுகாப்புத் துறை அறிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த மாதம் 26ஆம் திகதியன்று, சர்வதேச ஆகாய வெளியில் அவுஸ்திரேலிய விமானம் அதன் வழக்கமான கடற்கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. அப்போது சீனாவின் ஜே16 போர் விமானம் இடைமறித்தது என்று அவுஸ்திரேலிய பாதுகாப்புத் துறை குறிப்பிட்டது.

சீன விமானம், அவுஸ்திரேலிய விமானத்துக்கு மிக அருகே வந்ததால் அது ஆபத்தான நடவடிக்கை என்று அது கூறியது.

சம்பவம் குறித்து அக்கறை தெரிவித்திருப்பதாக, அவுஸ்திரேலிய அரசாங்கம் குறிப்பிட்டது.

# பங்களாதேஷ் கொள்கலன் கிடங்கில் தீ, பாரிய வெடிப்பினால் 49 பேர் பலி

பங்களாதேஷின் சிட்டகொங் நகருக்கு அருகில் உள்ள கொள்கலன் கிடங்கு ஒன்றில் ஏற்பட்ட பாரிய வெடிப்பு மற்றும் தீயினால் குறைந்தது 49 பேர் கொல்லப்பட்டு மேலும் 300க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு இந்த கொள்கலன் நிலையத்தில் தீ ஏற்பட்டிருப்பதோடு இதனைத் தொடர்ந்து ஒன்றுக்கு மேற்பட்ட வெடிப்புகள் இடம்பெற்றிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தீயை கட்டப்படுத்த நூற்றுக்கணக்கானோர் அங்கு திரண்டுள்ளனர். இந்தத் தீக்கான காரணம் கண்டறியப்படாதபோதும், சில கொள்கலன்களில் வைக்கப்பட்டிருந்த இரசாயனங்களே இதற்குக் காரணம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அந்த பகுதியில் இருக்கும் மருத்துவமனை நிரம்பி வழிவதோடு, இரத்ததானம் வழங்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த பலரும் ஆபத்தான நிலையில் இருக்கும் சூழலில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

“வெடிப்பினால் நான் இருந்த இடத்தில் இருந்து 10 மீற்றர் தூரத்திற்கு தூக்கி எறியப்பட்டேன். எனது கைகள் மற்றும் கால்கள் எரிந்தன” என்று லொரி ஓட்டுநரான தொபாயேல் அஹமது ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.




மீட்புப் பணியில் ஈடுபடும் தன்னார்வலர்கள் நேற்றுக் காலை எந்த பாதுகாப்பு உடையும் இன்றி காலில் செருப்பை மாத்திரம் அணிந்து தொடர்ந்து புகை எழுந்து வந்த அந்த கிடங்குக்குள் இருந்து உடல்களை எடுத்து வந்தனர்.

இந்த வெடிப்பில் குறைந்தது ஐந்து தீயணைப்புப் படையினர் கொல்லப்பட்டதோடு மேலும் பலர் காயமடைந்தனர்.

வெடிப்பு இடம்பெறுவதற்கு முன்னர் தீ பரவியது பற்றி செய்தி சேகரிப்பதற்கு அங்கு விரைந்த பல ஊடகவியலாளர்களும் காணாமல் போயுள்ளனர்.

வெடிப்புச் சத்தம் பல கிலோமீற்றர் தூரத்திற்கு கேட்டதோடு அருகில் இருக்கும் விடுகளில் ஜன்னல்கள் வெடித்துள்ளன. வெடிப்புக்குப் பின் தீப்பந்துகள் மழை போல் பொழிந்ததை பார்த்ததாக உள்ளூர் கடை உரிமையாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கிடங்கில் தொடர்ந்து வெடிப்புகள் இடம்பெற்று வரும் சூழலில் தீயை கட்டுப்படுத்துவதில் தீயணைப்பு வீரர்கள் நேற்று ஞாயிற்றுகிழமை மாலை வரை போராடி வந்தனர்.

“இரசாயன பொருட்கள் தொடர்ந்தும் எஞ்சி இருப்பதால் எம்மால் இன்னும் தீயை கட்டுப்படுத்த முடியாதுள்ளது” என்று பங்களாதேஷ் தீயணைப்பு சேவையின் தலைவர் மயின் உதாஹ் தெரிவித்தார்.

இந்த இரசாயனங்கள் கடலுக்குள் கலப்பதை தடுக்க அங்கு இராணுவம் அனுப்பப்பட்டுள்ளது.

பங்களாதேஷின் இரண்டாவது மிகப்பெரிய நகரான சிட்டகொங் துறைமுகத்தின் ஊடாக பயணிக்கும் கொள்கலன்களுக்கான போக்குவரத்து இடமாக இருக்கும் இந்த கிடங்கில் சுமார் 4,000 கொள்கலன்கள் வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

மேற்குலக வர்த்தகர்களுக்கு ஏற்றுமதி செய்வதற்காக இந்தக் கிடங்கில் பல மில்லியன் டொலர் ஆடைகள் இருந்ததாக பிராந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பங்களாதேஷில் போதிய ஒழுங்குமுறைகள் இன்மை மற்றும் மோசமான பாதுகாப்பு விதிமுறைகள் அண்மைய தொழில்துறை விபத்துகளுக்கு காரணமாகக் கூறப்படுகிறது. அண்மைய ஆண்டுகளில் இடம்பெற்ற தீ விபத்துகளில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு நாட்டின் தென் பகுதியில் படகு ஒன்றில் ஏற்பட்ட தீயில் குறைந்தது 39 பேர் கொல்லப்பட்டனர்.

அதே ஆண்டில் தலைநகருக்கு அருகில் உள்ள ருப்கான்ஜ் பகுதியில் இருக்கும் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீயில் குறைந்தது 52 பேர் பலியாகினர்.

## விண்வெளிக்கு சீன வீரர் மூவர் பயணம்



சீனா விண்வெளியில் நிறுவி வரும் தனது சொந்த ஆய்வு நிலையத்தின் இறுதிப் பணிகளை நிறைவேற்றுவதற்காக, 3 விண்வெளி வீரர்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை விண்வெளிக்கு அனுப்பியது.

சீனாவின் விண்வெளி நிலையம் இந்த ஆண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு ஆரம்பித்த அதன் கட்டுமானம் முக்கியக் கட்டத்தில் உள்ளது.

அது கடுமையாகவும் பல சவால்கள் நிறைந்ததாகவும் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. விண்வெளிக்குச் சென்றுள்ள மூவரும் அங்கு 6 மாதங்கள் தங்கியிருப்பர்.

அவர்கள் நிலையத்தின் கட்டுமானத்தில் ஈடுபட்டிருப்பர். வரும் டிசம்பர் மாதம் அவர்கள் பூமிக்குத் திரும்புவார்கள்.

## வீட்டருகே பறந்த விமானம்: வெளியேற்றப்பட்டார் பைடன்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடைய கடற்கரை வீட்டின் அருகே சிறிய தனியார் விமானம் ஒன்று தவறுதலாகப் பறந்ததை அடுத்து, ஜனாதிபதியும் அவரின் மனைவியும் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

தாக்குதல் ஏதும் நடைபெறவில்லை என்றும் ஜனாதிபதியும் அவரது மனைவியும் பாதுகாப்பாக உள்ளனர் என்றும் கூறப்பட்டது.

டெலவேர் மாநிலத்தின் ரெஹோபோத் கடற்கரையில் சம்பவம் நடந்தது.

பைடனும் அவரது மனைவியும் பின்னர் அவர்களின் வீட்டிற்குத் திரும்பியதாகக் கூறப்பட்டது. பாதுகாக்கப்பட்ட ஆகாயவெளிக்குள் தவறுதலாகப் பறந்த அந்த விமானம் உடனடியாக வெளியேற்றப்பட்டது. அமெரிக்காவின் உளவுச் சேவை அந்த விமானியை விசாரிக்கும் என்று அதன் பேச்சாளர் தெரிவித்தார்.



## பாக். தலிபான்களுடன் அரசு போர் நிறுத்தம்

ஆப்கான் தலிபான் அரசின் மத்தியஸ்தத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை தொடர்ந்து பாகிஸ்தான் அரசு மற்றும் அந்நாட்டு தலிபான்கள் இடையே காலவரையற்ற போர் நிறுத்தம் ஒன்று எட்டப்பட்டுள்ளது.

காபுலில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாகவும் போர் நிறுத்தம் மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டிருப்பதாகவும் பாகிஸ்தான் தலிபான்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தை சாதகமான திசையை நோக்கிச் செல்வதாக பாக் அரச அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு கூறினார்.

பாகிஸ்தான் தலிபான்கள் பாக். இராணுவத்துடன் பல ஆண்டுகளாக போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## வெளிநாட்டிலிருந்து ஹஜ் யாத்திரிகர் சவூதி வருகை

சவூதி அரேபியா கடந்த சில ஆண்டுகளின் பின் அதன் முதல் வெளிநாட்டு ஹஜ் யாத்திரிகர்களை வரவேற்றுள்ளது.

கொரோனா தொற்று சூழலுக்குப் பின் இந்தோனேசிய யாத்திரிகர்கள் அங்கு முதல் முறை சென்றுள்ளனர். மலேசியா, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து மேலும் கூடுதல் யாத்திரிகர்களை எதிர்பார்ப்பதாக அந்நாட்டின் ஹஜ் அமைச்சு தெரிவித்தது.

2 ஆண்டு இடைவெளிக்குப் பின் மீண்டும் வெளிநாட்டவர்கள் ஹஜ் யாத்திரையை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அவர்களை வரவேற்க சவூதி அரேபியா முற்றிலும் தயாராக இருப்பதாய் அமைச்சு தெரிவித்தது.

வைரஸ் பரவலுக்கு முந்திய காலக்கட்டத்தில் 2019ஆம் ஆண்டில் ஹஜ் யாத்திரையில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை 2.5 மில்லியனாக இருந்தது.



## உக்ரைன் தலைநகரில் வெடிப்புகளால் அதிர்வு

உக்ரைன் தலைநகர் கியேவில் கடந்த சில வாரங்களுக்குப் பின் முதல் முறை நேற்று ஒன்றுக்கு மேற்பட்ட வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன.

அவசர சேவை பிரிவினர் நிலைமையை கையாண்டு வரும் நிலையில் நகரின் வானுக்கு மேலால் கரும்புகை எழுந்திருப்பதை காண முடிவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. குறைந்தது ஒருவர் காயமடைந்திருப்பதாக ஆரம்பக் கட்ட செய்திகள் தெரிவிக்கின்றன.

ரஷ்யப் படை கிழக்கு உக்ரைனின் டொன்பாஸ் பிராந்தியத்தின் மீது அவதானம் செலுத்த ஆரம்பித்ததைத் தொடர்ந்து கியேவ் நகர் தப்பித்து வந்தது.

தற்போது செவரோடோனெட்ஸ்க் நகரிலேயே உக்கிர மோதல் இடம்பெற்று வருகிறது. இந்த நகரை கைப்பற்றும் பட்சத்தில் லுஹன்ஸ் பிராந்தியம் ரஷ்ய கட்டுப்பாட்டில் வந்துவிடும்.



## 83 வயதில் பசிபிக் கடலில் தனியே பயணத்து சாதனை

ஜப்பானின் 83 வயதான கெனிச்சி ஹோரி பசிபிக் பெருங்கடலில் இடைவிடாமல் தனியே பயணம் செய்து உலக சாதனை புரிந்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் சான் பிரான்சிஸ்கோ துறைமுகத்தில் பயணத்தை ஆரம்பித்த ஹோரி கடந்த சனிக்கிழமை ஜப்பானைச் சென்றடைந்தார். இரண்டு மாத காலத்திற்குப் பசிபிக் பெருங்கடலில் அவர் தன்னந்தனியாகப் பயணம் செய்தார்.

இதன் மூலம் பெருங்கடலைத் தனியே இடைவிடாமல் பயணம் செய்த உலகின் மிக வயதானவர் என்ற உலக சாதனையைப் படைத்துள்ளார் ஹோரி. இதற்கு முன்னர் அவர் 23 வயதில் தனியே ஜப்பானிலிருந்து சான் பிரான்சிஸ்கோ வரை பசிபிக் பெருங்கடலில் பயணம் செய்தார். 1962 ஆம் ஆண்டு கடவுச்சீட்டு இல்லாமல் பசிபிக் பெருங்கடலில் சென்றதால் பிடிபட்டுவிடக்கூடும் என்ற பயம் இருந்தது என்று ஹோரி கூறினார்.

ஆனால் தம்முடைய இந்தப் பயணம் முற்றிலும் வித்தியாசமானது. பலர் தம்மைக் கடலுக்கு அனுப்புவதில் பங்காற்றினர். கண்காணிப்புக் கெமராக்கள், ரேடியோ மூலம் அனைவரின் ஆதரவையும் பெற்றதாகத் தெரிவித்தார்.



## பாகிஸ்தானில் பெற்றோல் விலை மீண்டும் அதிகரிப்பு



பாகிஸ்தானில் ஒரே வாரத்தில் 2ஆவது முறையாக பெற்றோல், டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. லீற்றருக்கு தலா 30 ரூபாய் (பாகிஸ்தான் மதிப்பில்) என 17 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விலை அதிகரிப்பை அடுத்து மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குவிந்திருப்பதோடு தமது எதிர்ப்பையும் வெளியிட்டு வருகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியை பெறுவதற்காக எரிபொருளுக்கான மானியத்தை பாக். அரசு நீக்க முடிவு செய்திருக்கும் நிலையிலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த புதிய அதிகரிப்பை அடுத்து பெற்றோர் லீற்றர் ஒன்று 209.86 ரூபாவாகவும் டீசல் லீற்றர் ஒன்று 204.15 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.




# மண்ணெண்ணெய் பெற்றுத் தரக்கோரி மக்கள் வீதியினை மறித்து ஆர்ப்பாட்டம்

ஹற்றன் விசேட நிருபர்



நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நோர்வூட் நகரில் உள்ள மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம் ஒன்றில் மண்ணெண்ணெய் பெறுவதற்கு பல மணித்தியாலங்கள் காத்திருந்த பின் 3 மணி அளவில் மண்ணெண்ணெய் வராது என்று தெரிவித்ததால் காத்திருந்த மக்கள் ஆத்திரமடைந்து வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து அங்கு போராட்டத்தில் ஈடுப்பட்டிருந்த நபர் ஒருவரை பொலிஸார் தள்ளிக்கொண்டு சென்றதனால் அங்கு அமைதியற்ற சூழல் உருவானது.

இதனால் நோர்வூட் மஸ்கெலியா நோர்வூட் பொகவந்தலா ஊடான பொது போக்குவரத்து முற்றாக தடைப்பட்டது.

அதனை தொடர்ந்து நோர்வூட் பொலிஸார் நிலைமையினை சுமுகமான நிலைக்கு கொண்டு வர முயற்சி செய்த போதிலும் அது பயனளிக்கவில்லை மண்ணெண்ணெய் வரும் என்று தெரிவித்துவிட்டு இப்போது இல்லை என்றால் நாங்கள் என்ன செய்வது இந்த அரசாங்கமும் அதிகாரிகளும் மக்களை மாடுகள் என்று எண்ணியுள்ளார்களா அல்லது மக்கள் படும் அவலம் இவர்களுக்கு தெரியவில்லையா என பலரும் தனது ஆதங்கத்தை வெளியிட்டனர்

இது குறித்து மற்றுமொருவர் கருத்து தெரிவிக்கையில் அரங்கம் என்று ஒன்றுமில்லை அவர்கள் இன்று அனைத்தையும் பெற்றுக் கொண்டு மிகவும் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர் வாக்களித்த மக்களின் வாழ்க்கை வீதிகளில் சீரழிகின்றன நாளுக்கு நாள் பொருட்கள் விலையேறுவதற்கு போதாமைக்கு பல மணித்தியாலங்கள் மக்கள் காத்திருக்க வைக்கின்றனர் மலையகத்தில் இருந்து வாக்குகளை பெற்று சென்றவர்கள் மக்களின் பிரச்சினைகளை கண்டும் காணாது போல் வாய் மூடி மௌனிகளாக இருக்கின்றனர் இதற்கு மேலும் இவர்களுக்கு வாக்களிப்பார்களேயானால் நிச்சயம் அவர்கள் மனிதர்களாக இருக்க முடியாது என தெரிவித்தனர்.

எது எவ்வாறான போதிலும் நாட்டு மக்கள் படும் துன்பங்களை உணர்ந்து பொறுப்பு வாய்ந்தவர்கள் சரியான தீர்வினை பெற்றுக் தர வேண்டியது அவர்களது கடமையும் பொறுப்பும் ஆகும்.

நாட்டின் பெரும் நெருக்கடியான தற்போதைய சூழ்நிலையில்

# 5 நாட்களும் ஆசிரியர்களை அழைப்பது சாத்தியமில்லை

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.புவனேஸ்வரன்

( ஹாலிஎல விசேட நிருபர்)

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகளை வாரத்தில் ஐந்து நாட்களும் நடத்துவதென்பது பெரும் நெருக்கடியான விடயம் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளது.

ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.புவனேஸ்வரன் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. எஸ். புவனேஸ்வரன் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

" பாடசாலைகளை வாரத்தில் ஐந்து நாட்களும் நடத்துவது மற்றும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக எமது சங்கம் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளோம்." அந்த கடிதத்தில், " தற்போதைய நெருக்கடியில் ஆசிரியர்கள் ஐந்து நாட்களும் பயணம் செய்து கற்பித்தல் பணியில் ஈடுபடுவது முடியாத காரியமாகும். நாளுக்கு நாள் எரிபொருட்களின் விலைகள் அதிகரித்தபடியே உள்ளன.



இந் நிலையில் ஒவ்வொரு நாளும் பயணம் செய்வதால் உழைப்பின் முழுத் தொகையையும் போக்குவரத்திற்கு செலவழிக்க வேண்டியுள்ளது. ஆசிரியர்களை முழு நாட்களும் அழைப்பதெனில் அவர்களின் போக்குவரத்து செலவீனத்தில் அரைப்பங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில், மற்றைய திணைக்களங்களில் பின்பற்றப்படும் நடைமுறைகளுக்கு ஒத்ததாக பாடசாலைகளை இயக்குவதே தற்போதைய நெருக்கடியில் சிறந்த வழியாகும்.

ஆசிரியர்களின் பாடநேரங்களை அதிகரித்து அவர்களை சுழற்சி முறையில் அழைப்பதே பொருத்தமானது. இதனை தாங்கள் நடைமுறைப் படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும், இந்த நடைமுறையானது பாடசாலை அதிபரின் நிர்வாக நடைமுறைக்கு உட்பட்டதாக நெகிழ்ச்சிப் போக்குடையதாக இருக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடியில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி சகல மார்க்கங்களையும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

உணவுப்பஞ்சம், போக்குவரத்து நெருக்கடி, அன்றாட வாழ்க்கைக்கான துயரம் இவை அனைத்துமே மாணவர்களை மட்டுமல்ல ஒட்டுமொத்த நாட்டில் உள்ள குழந்தைகளையும் பாதித்துள்ளது.

போதிய போசாக்கின்மையால் குழந்தைகளின் ஆரோக்கியம் கேள்விக்குறியாகியுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இதனை பற்றி மருத்துவத்துறையினரும் எச்சரித்துள்ளனர்.

இது அபாயகரமானது என்பதால் மாணவர்களின் மதிய போசனம் தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கான போசாக்கு உணவு பாடசாலைகளில் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளோம்" என கூறியுள்ளார்.

# அரசியல்,பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மை காணப்படின் உதவி செய்வதில் சர்வதேசம் தயக்கம் காட்டாது

## சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர்.ரமேஷ்

(அக்குறணை குறூப் நிருபர்)

நாட்டில் ஸ்திரத்தன்மை கொண்ட அரசோ அல்லது பொருளாதாரக் கொள்கைகளோ இல்லை என்பதனால் எமக்கு சர்வதேச நாடுகள் பொருளாதார உதவிகளைச் செய்வதில் தயக்கம் காட்டி வருகின்றதை அவதானிக்க முடிகிறது என பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர்.ரமேஷ் தெரிவித்தார்.

மக்களுக்கான புத்திஜீவிகள் ஒன்றியம் கண்டியில் நடத்திய ஊடக சந்திப்பொன்றிலே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது




இன்று நாட்டில் ஆட்சி செய்வது ஒரு தோல்வி அடைந்த அரசாகும். அதாவது பொதுமக்களின் நம்பிக்கையை இழந்த ஒரு தரப்பே ஆட்சி நடத்துகிறது. அதனால் சர்வதேசமும் எமது நாட்டுக்கு உதவி செய்வதில் தயக்கம் காட்டி வருவதை அவதானிக்க முடிகிறது.

அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மை காணப்படின் இப்பிரச்சினை இருக்காது என்றும் தெரிவித்தார்.

சர்வதே நாடுகளின் உதவிகள் முறையாக பொதுமக்களுக்கு சென்றடையுமா அல்லது கடந்த காலங்களைப் போன்று அவை குறிப்பிட்டவர்களது கைகளுக்கு மட்டும் சென்று சிதறடிக்கப்படுமா? என்ற கேள்விகள் சர்வதேசத்தின் அவதானிப்பாக இருப்பதையும் காணமுடிகிறது.

ஜனநாயகத்தை மதிக்கும் ஆட்சியையும் அரச தலைவரையுமே சர்வதேசம் எதிர்பார்த்துள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச கொண்டுவர உள்ள 21ம் திருத்தம் பொதுமக்கள் எதிர்பார்க்கும் திருத்தமாகத் தெரியவில்லை. 19ம் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட சில விடயங்கள் அதில் காணப்படவில்லை. நிறைவேற்று அதிகாரம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதே பரவலாக பேசப்படும் விடயமாக இருந்த போதும் அதுபற்றிய விடயங்கள் அத்திருத்தத்தில் இல்லை. அமைச்சின் செயலாளர்கள் மற்றும் வெளிநாட்டு தூதுவர்களை நியமிக்கும் விடயத்தில் ஜனாதிபதியின் கைகளிலே அவ்வதிகாரம் இன்னும் உள்ளது. அரசியல் அமைப்பு பேரவை அதனை நியமிப்பதாக காட்டப்பட்டாலும் அந்த அரசியல் அமைப்பு பேரவை அரசியல் தலையீடுகள் மூலமே தீர்மானிக்கப்படுவதால் அதனை சுயாதீனம் எனக் கூற முடியாது என்றும் கூறினார்.

இங்கு உரையாற்றிய பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியற்துறை பேராசிரியர் உபுல் அபேரத்ன தெரிவித்தாவது

கொண்டுவரப்பட உள்ள உத்தேச 21வது திருத்தம் ஒரு கண்துடைப்பாகும். அது மேலும் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு உந்து சக்தியை வழங்கும் ஒன்றாக உள்ளது

தனிமனித அதிகாரத்தில் வெளிநாட்டு தூதரக அதிகாரிகளை நியமிப்பதால் வெளிநாட்டு உறவுகள் மற்றும் உதவிகள் பாதிப்படைந்துள்ளன.

அரசியல் அமைப்பு பேரவைக்கு நியமனங்கள் வழங்கும் போது சுயாதீனத்தன்மை கொண்டவர்களுக்கு வழங்கப்படவேண்டும். ஆனால் உத்தேச 21ம் திருத்தத்தில் அரசியல் சார்ந்தவர்களே நியமிக்கப்படும் சாத்தியம் உண்டு.

உதாரணமாக அதில் ஒரு அங்கத்தவர் பல்கலைக்ழக மானியங்கள் ஆணைக்குழுவால் தெரிவு செய்யப்படுவார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பது அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒரு நியமனமாகும் என்று கூறினார். கலாநிதி பாஸ்கரன் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்.

கண்டி மாவட்டத்தில்

# 75000 வீட்டுத்தோட்டங்கள் அபிவிருத்தி



(அக்குறணை குறூப் நிருபர்)

உணவுப் பற்றாக்குறையை சமாளிக்க கண்டி மாவட்டத்தில் 75000 வீட்டுத்தோட்டங்ளை ஆரம்பித்து அபிவிருத்திசெய்து வருவதாக கண்டி மாவட்டசெயலாளர் சந்தன தென்கோன், கண்டி மாவட்டசெயலகத்தில் அண்மையில் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் அளவில் இவ்வேலை த்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் பிரதேச செயலாளர் மட்டத்தில் இவை முன் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். பல்வேறு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ள இத்திட்டத்தில் முதற்கட்டத்தில் 52000 வீட்டுத் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவை பெரிதும் வெற்றி அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்குத் தேவைப்படும் வித்துக்கள் மற்றும் தேவையான அடிப்படை மூலப்பொருட்களும் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். சிறுபோகத்தின் போது கண்டி மாவட்டத்தில் 11000 ஹெக்டேயர்பரப்பில் பல்வேறு வகை உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட உள்ளதாகவும் அதில் 5000 ஹெக்டேயரில் நெல் உற்பத்தி செய்யப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் பசுமையாக்கல் விவசாய வேலைத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் போதியளவு கொம்போஸ்ட் பசளையை உற்பத்திசெய்யத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# கடியன்லேன நகரம் சுற்றுலா தளமாக அபிவிருத்தி செய்யப்படும்



தலவாக்கலை குறூப் நிருபர்

தலவாக்கலை நாவலப்பிட்டி வீதியில் காணப்படும் கெட்டப்புலா கடியன்லேன நீர்வீழ்ச்சிக்கு அருகிலுள்ள அழகிய நகரமான கடியன்லேன புதிய சுற்றுலாத்தலமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடியன்லேனையை சகல வசதிகளுடனும் முழுமையான நகரமாக அபிவிருத்தி செய்து சுற்றுலாத்துறையினூடாக அப்பிரதேசத்திலுள்ள தோட்ட மக்கள் மற்றும் ஏனைய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் பிரதான நோக்கமாகும் என முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நகரை முழுமையாக நிர்மாணிப்பதற்காக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் காணி பஸ்பாகே கோரளை பிரதேச சபையினால் பெறப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்களுக்கு அமைய நகரை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். கடியன்லேன நகரின் புதிய நகரமாக அபிவிருத்தி நடவடிக்கைகளை பார்வையிடுவதற்காக முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சனிக்கிழமை (04) கடியன்லேன பிரதேசத்திற்கு விஜயம் செய்தார். பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் தலைவர் ரோஹண பண்டார மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் குழுவினரும் இதன்போது சென்றிருந்தனர்.

# தேயிலை ஏலத்தை டொலரில் நடத்துவது சாத்தியம் அல்ல

## தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம்

(ஹாலிஎல விசேட நிருபர்)

கடந்த பல மாதங்களாக இருந்து தேயிலை ஏற்றுமதி சுமார் 20 சதவீதம் குறைந்துள்ளதுடன், தேயிலையை ஏலம் டொலரில் நடத்துவது நடைமுறைக்கு சாத்தியம் அல்லது என தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் கூறியது.

தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் இது பற்றி கருத்து தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:

உரப்பிரச்சினை காரணமாக தேயிலை உற்பத்தி கணிசமானளவு குறைந்துள்ளமையே இதற்குக் காரணம்.

தேயிலை ஏற்றுமதியில் ஏற்றுமதியாளர்களுக்கு பணம் செலுத்த வாங்குபவர்களுக்கு 180 நாட்கள் உள்ளன. ஆனால், தேயிலை ஏலத்தில் ஏற்றுமதியாளர்கள் தேயிலையைப் பெற்றால், வியாபாரிகளுக்குக் கட்டனம் செலுத்துவதற்கு ஒரு வாரம் மட்டுமே உள்ளது.

மேலும், பல சேவை வழங்குனர்களுக்கு டொலரில் பணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும். தேயிலை ஏலத்தை டொலரில் நடத்தினால், பணம் செலுத்துவதற்கு தேவையான டொலர்களை பெறுவது கடினமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

நாட்டுக்கு அதிக டொலர்களை வரவழைக்கும் வகையில் தேயிலை ஏலத்தை டொலரில் நடாத்தாமல் தேயிலை உற்பத்தியை அதிகரிக்க வசதி செய்ய வேண்டும்.

உள்ளூர் தேயிலை ஏலத்தில் சுமார் 300 தேயிலை ஏற்றுமதியாளர்கள் பங்கேற்கின்றனர். வாரத்தின் ஒவ்வொரு செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் ஏலம் நடைபெறும். நாட்டின் தேயிலை உற்பத்தியில் 80 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

உலக அளவில் கிட்டத்தட்ட 40 நாடுகளுக்கு இலங்கையில் இருந்து தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தேயிலை ஏற்றுமதி தொடர்ந்து வெற்றிபெற வேண்டுமானால், அதிகாரிகள் உரிய நேரத்தில் இத்தகைய மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

# மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட மூன்று இராணுவ வீரர்கள் கைது



(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுப ட்ட இரண்டு இராணுவச் சிப்பாய்க ளையும் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற இராணுவ சிப்பாய் ஒ ருவரையும் கொலன்ன பொலிசார் கைது செய்துள்ளனர்.அத்துடன் இ வர்களால் திருடப்பட்ட ஒவ்வொன் றும் சுமார் 8 இலட்சம் ரூபா பெறும தியான ஒரே வகையை சேர்ந்த இர ண்டு மோட்டார் சைக்கிள்களும் குற் றச் செயல்களுக்காக பயன்படுத்த தயாராக இருந்த இன்னொரு மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றிய உ ள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கொலன்ன புதிய நகர பகுதியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களுக்கு சொந்தமான ஒவ்வொன்றும் சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான 16 இலட்சம் ரூபா பெறுமதியான இரு மோட்டார் சைக்கிள்களும் கெப்பெட்டிபொல மற்றும் லுணுகம்வெஹெர பிரதேசங்களில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.பொலிசார் மேலதிக விசாரணைகள மேற்கொண்டு வருகின்றனர்.

# ரஷ்ய விமானம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண உடனடி நடவடிக்கை வேண்டும்

## உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் வலியுறுத்து

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஷ்ய விமானம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.இரு நாடுகளுக்கும் இடையில் பாரிய பொருளாதார பாதிப்புகள் ஏற்படுவதற்கு முன்னர் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

கெஸ்பேவ – கொரகப்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன இதனை தெரிவித்தார்.

Aeroflot விமானம் இலங்கை அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பில், ரஷ்யா தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் ஜனிதா லியனகே, ரஷ்ய வெளிவிவகார அமைச்சுக்கு வரவழைக்கப்பட்டு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.இதற்கிடையில், ரஷ்ய Aeroflot விமான நிறுவனம் கொழும்பிற்கான தனது வணிக விமானங்களை நிறுத்தியுள்ளது.இலங்கையில் தனது விமானங்கள் தடையின்றி பறப்பதை உறுதி செய்ய முடியவில்லை என்பதால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பை நோக்கி பயணிக்கும் விமானங்களுக்கான விமானச் சீட்டு விற்பனை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக Aeroflot நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.இதனிடையே, Aeroflot விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்கும் அரசாங்கத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என விமான நிலையமும் விமான சேவை நிறுவனமும் அறிக்கை வெளியிட்டுள்ளன.



Aeroflot விமான சேவை நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட Celestial Aviation Trading நிறுவனத்திற்கு இடையே வணிகப் பரிவர்த்தனை தொடர்பாக ஏற்பட்ட தகராறே இதற்கு காரணம் என அதில் கூறப்பட்டுள்ளது.ரஷ்ய விமானம் ஒன்றுக்கு சொந்தமான MSN 1301 என்ற விமானத்தை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்பட விடாது கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் அண்மையில் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. Celestial Aviation Trading நிறுவனம் செய்த முறைப்பாட்டிற்கு அமைய இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அவ்வாறானதொரு தடை உத்தரவு அல்லது இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவித்தார்.

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல : VE/DS/LA/AQ/WS/218.

காணி அமைச்சின் குறிப்பு இல : 4-3/9/2018/WS/218.

ஒரு பகிரங்க தேவைக்காக கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. இக்காணி தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விசாரணை தொடர்பான அறிவித்தல் ஒன்று 7 ஆம் பிரிவின் கீழ் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2278/24ஆம் இலக்க 2022.05.06 ஆம் திகதிய அதி விசேஷ வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : வடக்கு |
| மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : தீவகம் தெற்கு, வேலணை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : வேலணை வட கிழக்கு - J/13 |
| கிராமம் | : வேலணை கிழக்கு |
| ஆரம்ப வரைபட இலக்கம் | : பிபி யா 2992 |
| காணித் துண்டு இலக்கம் | : 01 |
| விஸ்தீரணம் | : 0.1478 ஹெக்டயர் |

மேலதிக விபரங்களுக்கு மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**பிரதேச செயலகம்**
**தீவகம் தெற்கு, வேலணை.**
**30.05.2022.**

## ரஷ்ய பயணிகள் Aeroflot விமானத்தில் நாடு திரும்பினர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ரஷ்யாவின் மொஸ்கட்டில் இருந்து நேற்று காலை இலங்கை வந்த Aeroflot எயார்பஸ் நேற்று 275 ரஷ்ய விமான பயணிகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்று பிற்பகல் புறப்பட்டுச் சென்றுள்ளதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று மொஸ்கோவில் இருந்த பயணிகளின்றி வருகை தந்த A330 300 ஆம் இலக்க விமானமே இவ்வாறு ரஷ்ய பயணிகளுடன் புறப்பட்டுச் சென்றுள்ளது.

ரஷ்ய Aeroflot பயணிகள் விமானத்துக்கு இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு தடைவிதித்து கொழும்பு வாணிப நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை உத்தரவு பிறப்பித்திருந்தது



அத்தகைய பின்னணியிலேயே நேற்றைய தினம் ரஷ்ய எயார் பஸ் கட்டுநாயக்கவில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

அதேவேளை மேற்படி ரஷ்ய விமானம் தொடர்பான பிரச்சினை இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினை யல்ல என்றும் இது ஒரு தனிப்பட்ட சட்டப் பிரச்சினை எனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க குறித்த சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க நீதி யமைச்சருக்கு அறிவுறுத்தியுள்ளார்.


இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்

**கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

LSC

**கேள்வி அறிவித்தல்**

**சூரிய சக்தி அமைப்பை நிறுவுவதற்கு கூரையை வாடகைக்கு வழங்குதல்**

**கேள்விமனு குறிப்பு - LSC/2022/SOLAR/003- Recall**

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தில் பெலவத்த மற்றும் செவனகல பிரிவுகளுக்கு சூரிய சக்தி அமைப்பை நிறுவுவதற்கு கூரையை வாடகைக்குப் வழங்குவதற்கு உள்ளூர் விலைமனுதாரர்களிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்திற்காக திணைக்கள கேள்விமனு குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**பணி நோக்கம்**

நிலையான பாதுகாப்பு நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தங்களுடனும் மேல் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காகவும் தேசிய மின்சக்தி வலையமைப்புடன் இணைக்கும் வகையில் மின்சார வேலைகள், சிவில் வேலைகள் மற்றும் பொறிமுறை வேலைகள் முதலியவற்றை உள்ளடக்கியதாக சூரிய சக்தி நிலையத்தை நிறுவுதல் வேண்டும்.

**விற்பனையாளர் பின்வரும் நிபந்தனைகளுடன் கூறுவிலை இடுதல் வேண்டும்.**

- ➢ ஒப்பந்தக் காலத்தை குறிப்பிடுதல் வேண்டும் (அதிகபட்சம் 15 ஆண்டுகள் - குறைந்த ஒப்பந்தக் காலங்களுக்காக முன்னுரிமை வழங்கப்படும்)
- ➢ மின்சார உற்பத்தி வருவாயின் சதவீதத்திற்கு அமைய கூரையின் வாடகைக் கட்டணம்.
- ➢ ஒப்பந்தக் காலம் பூர்த்தியான பின் பொறுப்புடைய தரப்பினால் (விற்பனையாளர் அல்லது வலுசக்தி நிலையத்தை நிறுவும் நிறுவனம்) வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்துடன் பராமரிப்புக்காக உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடுதல் வேண்டும்.
- ➢ வலுசக்தி நிலைய முறைமையின் உத்தரவாதம் சிறந்த செயல்திறனுடன் 20 ஆண்டுகளுக்கு மேல் இருத்தல் வேண்டும்.
- ➢ விபரக்குறிப்புகள் மற்றும் சூரியக் கலங்களின் வகை கூறுவிலையில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

2022 ஜுன் 27 ஆம் திகதி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக 15,000 ரூபாவை செலுத்தி எந்த ஒரு வேலை நாட்களிலும் (09.00 மணி தொடக்கம் 16.00 மணி வரை) கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் இருந்து விலைமனு ஆவணத்தை பெறலாம். அனைத்து விலைமனுக்களும் 900,000 இலங்கை ரூபாவிற்கான "விலைமனுப் பிணையொன்றுடன்" இணைக்கப்படல் வேண்டும். 2022 ஜுன் 21ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு செவனகல கேட்போர் கூடத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். 2022 ஜுன் 28 ஆம் திகதி பி.ப. 2.00 வரை முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும் என்பதோடு தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இது தொடர்பில் கேள்விமனு சபையின் முடிவு இறுதியானதாகும். கீழ் தரப்பட்ட முகவரியில் கேள்விமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**ஏதேனும் விசாரணைகளுக்கு: பெறுகை முகாமையாளர்: 0770103359,**
**மின்னஞ்சல்: sapumal@lscl.lk**

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04.**






கொழும்பு கொம்பனித்தெரு ரி.பி ஜாயா ஸாஹிரா கல்லூரி கேட்போர் கூடத்தில் மாபெரும் இரத்ததான முகாமொன்று நடைபெற்றது. கொழும்பு கொம்பனித்தெரு ரி.பி ஜாயா ஸாஹிராக் கல்லூரி பழைய மாணவர் குழு 2005 உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரத்ததான முகாமுக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் தேசிய இரத்த வங்கியைச் சேர்ந்த மருத்துவர்களும் மருத்துவ உதவியாளர்களும் பிரதானிகளும் ஊழியர்களும் கலந்து கொண்டு அர்ப்பணிப்புடன் அனுசரணை வழங்கினர். முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை நடைபெற்ற இரத்ததான முகாமுக்கு துண்டுப் பிரசுரங்கள் மூலம் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டதுடன் பகுதி வாழ் மக்களும் தன்னார்வலர்களும் இரத்த தானம் செய்ய முன்வந்தனர். பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்களும் நலன்விரும்பிகளும் பரோபகாரிகளுடன் ரி.பி ஜாயா ஸாஹிரா கல்லூரி அதிபரும் கலந்துகொண்டு இதற்கு உற்சாகம் அளித்தனர்.

(தாஸிம் அகமது)


எனது இல: WGSWD&EIP/ACQ/KB/13

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/10/2012/LRB/221

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் அரசுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கொ:9594 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் இல. 98 எனக் காட்டப்பட்ட காணித் துண்டில், உரித்து உறுதி செய்யப்படாத 17.7 பர்ச்சஸ் விஸ்தீரணமுடைய காணிப் பகுதிக்கான பெயரளவிலான நட்டஈட்டுத் தொகை, காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ், நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன். மேலதிக விபரங்களுக்கு 2022.04.27ஆம் திகதிய 2277/44ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்க.

**எச்.திலக்கவர்தன,**
**காணி எடுத்தல் உத்தியோகத்தர்,**
**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்.**
**கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு**

**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம், இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம், இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கடை இராஜகிரிய.**
**2022.05.30**

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பாணந்துறை, கெசல்வத்தை, கொரக்கான, கல்கனுவ வீதி, இலக்கம் 127/3இல் வசிக்கும் கிரிகன்கானமலாகே தமித் நிலக்ஷ பெரேரா (தே.அ.அ.இல. - 900742894V) ஆகிய நான் அதே குடியரசின் பதலன்கல, வைத்தியசாலைப் பிரதேசம், இலக்கம் 891/2/1 இல் வசிக்கும் லஹந்தபுரகே அயேஷா மதுமாலி (தே.அ.அ. இல. - 907993485V) என்பவரை எனக்குப் பதிலாக கடமை புரிவதற்காக பிரசித்தி பெற்ற நொத்தாரிசு திருமதி பிரக்னா லியனகே என்பவரால் 2018ஆம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் : 1722 என்ற விஷேட அற்றோணி அதிகாரப் பத்திரத்தை 2022ஆம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி முதல் இரத்துச் செய்கின்றேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

இதற்குப் பின்னர் லஹன்தபுரகே அயேஷா மதுமாலி என்பவர் பெயரால் செய்யப்படுகின்ற ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புக் கூறமாட்டேன் என இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**கிரிகன்கானமலாகே தமித் நிலக்ஷ பெரேரா**

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது இல.: WGSWD&EIP/ACQ/KB/04

காணி அமைச்சின் குறிப்பு இல : 4-3/10/2012/LRB/16

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் அரசுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கொ:9568 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 39 எனக் காட்டப்பட்ட காணித் துண்டில் உரித்து உறுதி செய்யப்படாத 0.0105 ஹெக்டயாரும், துண்டு இல. 40 எனக் காட்டப்பட்ட காணித் துண்டில் உரித்து உறுதி செய்யப்படாத 0.0040 ஹெக்டயாரும் விஸ்தீரணமுடைய காணிப் பகுதிகளுக்கான பெயரளவிலான நட்டஈட்டுத் தொகைகள், காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ், நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன். மேலதிக விபரங்களுக்கு 2022.04.27ஆம் திகதிய 2277/44 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்க.

**எச்.திலக்கவர்தன,**
**காணி எடுத்தல் உத்தியோகத்தர்,**
**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்.**
**கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு**

**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம், இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம், இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை , வெலிக்கடை இராஜகிரிய.**
**2022.05.25**

**பெயர் மாற்றம்**

இலக்கம் 299/2C மடுவத்தை வீதி கல்லரைச்சல் - 02, சம்மாந்துறையைச் சேர்ந்த செல்வராசா ஜசந்தன் ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை "செல்வராசா முகம்மட் நிறோஸ்" என மாற்றி உள்ளேன் என்பதை இத்தால் இலங்கை சோஷலிச குடியரசுக்கும் மக்களுக் கும் அறியத் தருகிறேன்.

**செல்வராசா முகம்மட் நிறோஸ்**

பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக 2022 மே 25 ஆம் திகதியிலிருந்து செயல் வலுப் பெறும் வகையில் அல்மாஸ் ஓர்கனை சேஷன் (பிரைவட்) லிமிட்டட் ஆனது அதனது பெயரை அல்மாஸ் ஹோல் டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட் என மாற்றியுள்ளதென மேற்கூறப்பட்ட சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்: அல்மாஸ் ஓர்கனைசேஷன் (பிரைவட் லிமிட்டட்

கம்பனியின் இலக்கம்:PV 1773

பதிவு அலுவலகம் : வெஸ்ரின் டவர், 5 ஆம் மட்டம், இல. 2, 4/1, லேக் ட்ரைவ், கொழும்பு-08.

கம்பனியின் புதிய பெயர்: அல்மாஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

சபையின் கட்டளையின் பிரகாரம்,
கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்
செயலாளர்கள்
அல்மாஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

ICRC

செஞ்சிலுவை சர்வதேச குழுவிடமிருந்தான அவசரமானதும் முக்கியதுமான அறிவித்தல்

தயவுசெய்து எச்சரிக்கையாக இருங்கள்

செஞ்சிலுவை சர்வதேச குழுவின் (ஐசிஆர்சி) இலச்சினையானது புலம்பெயர்வு/விசா திட்டங்கள் தொடர்பில் அதிகாரமற்றவர்களும் அடையாளப்படுத்தப்படாதவர்களும் சமூக மற்றும் ஏனைய ஊடகங்களூடாக விளம்பரப்படுத்தி மோசடியாக பணம் பெறுதலானது ஐசிஆர்சியின் கவனத்திற்கு வந்துள்ளது.

இது தொடர்பாக ஐசிஆர்சி அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளது.

தயவுசெய்து அவ்வாறான செய்திகளில் ஐசிஆர்சி தொடர்புபடவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும். புலம்பெயர்வு நடைமுறைகள் எது தொடர்பிலும் ஐசிஆர்சி ஈடுபடுவதில்லை. இவ்வாறான நோக்கங்களுக்காக அடையாளப்படுத்தப்படாத வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிடும்படியாகவும் தொலைபேசி, தொலைநகல் மற்றும் மின்னஞ்சலூடாக வங்கிக் கணக்கிலக்கங்களை தெரியப்படுத்தும்படியாகவும் எவரையாவது ஐசிஆர்சி வேண்டிக்கொள்ளவுமில்லை.

ஐசிஆர்சி
இலக்கம் 29, லெயாட்ஸ் வீதி, கொழும்பு 05

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், சப்ரகமுவ மாகாண சபை**

**விலங்குணவுகளை வழங்குதல்**

கேகாலை உடுகொட, வளர்ப்பு அபிவிருத்தி நிலையத்திற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் (சப்ரகமுவ) பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இப்போது கோரப்படுகின்றன.

**கறவை மாட்டுத் தீவணம் - 32500 கி.கிராம், கன்றுகளுக்கான ஆரம்ப தீவணம் - 550 கி.கிராம், Sow உணவு - 3000 கி.கிராம், சிப்பிகள் - 500 கி.கிராம்**

**முட்டைக் கோழித் தீவணம் - 15000 கி.கிராம், வளர்ப்பு உணவு - 2250 கி.கிராம், கோழிக் குஞ்சுணவு - 1050 கி.கிராம்.**

விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியான விலைக்கோரல் மூலம் இடம்பெறும்.

01. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் சப்ரகமுவ மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளரிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் (தொலைபேசி இலக்கம் 045 2226927) 2022-06-06ஆம் திகதி முதல் 2022-06-26ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
02. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூல வேண்டுகோளொன்றுடன் 2000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
03. விலைமனுதாரர்கள் உற்பத்தியாளர்களாக அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களாகவிருத்தல் வேண்டும். மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.
04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை விலைக்கோரல் உத்தரவாதத்துடன் 2022 ஜுன் 27ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பின்வரும் முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட முகவர்களின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம், இரத்தினபுரி.**

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## பதவி வெற்றிட அறிவித்தல்

## இலங்கை காலநிலை நிதியம்

### சூழல் அமைச்சு

## ஒப்பிட்டுப் பார்த்தல் நிறைவேற்று அலுவலர் (Verification Executive)

**கல்விசார் தகைமைகள்:**
பெருந்தோட்ட முகாமைத்துவம், வனவியல், சூழல் முகாமைத்துவம், சூழல்தொகுதி வியாபார முகாமைத்துவம், பசுமை தொழில்நுட்பவியல், காலநிலை மாற்றம், இயற்கை மூலவளங்கள் முகாமைத்துவம் ஆகியவற்றில் பெற்ற விஞ்ஞானமானிப் பட்டம் அல்லது ஏனைய தொடர்புள்ள பட்டப் படிப்பு.

**தேவைப்படும் செயற்திறன்கள் மற்றும் அனுபவம்:**

- காலநிலை மாற்ற அமைப்பு மற்றும் நவீன நிலைத்தன்மை செயற்பாடுகளின் **அறிவு.**
- ISO தொடர்புடைய சூழல் முகாமைத்துவ முறைமைகளுக்கு வெளிக்காட்டல்.
- ஆங்கில மொழி தீவிரமான எழுத்துமூலம் மற்றும் பேச்சுமூல திறன்
- வன உயிர்நூல் ஆய்வின் (Forest Biometrics) தொழில்நுட்ப அறிவு
சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**வயது** : 25 இற்கும் 45 இற்கும் இடைப்பட்டது.

**சம்பளம்** : ஆரம்ப சம்பளம் - 27,500.00 + 7,800.00 + 5000

**நியமனத்தின் வகுதி** : **ஒப்பந்தம் (செயற்பாட்டின் அடிப்படையில் நிரந்தரமாக்கப்படும்)**
**ஆரம்ப ஒப்பந்த காலப்பகுதி: 1 வருடம்**

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்யப்பட்ட சுயதரவு அல்லது விபரக்குறிப்பை சமர்ப்பிக்கலாம் /மின்னஞ்சல் மூலம் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். (தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்காக தொடர்பு கொள்ளப்படுவார்கள் என்பதை தயவு செய்து கவனிக்கவும்)
விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி: 2022 ஜுன் 17 ஆம் திகதியன்று.
முகவரி: இலங்கை காலநிலை நிதியம், ‘‘சம்பத்பாய’’, இல.: 82, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.

**மின்னஞ்சல்** : **info@climatefund.lk./ milanislcf@gmail.com/ smilani2011@gmail.com**
**இணையம்** : **www.climatefund.lk**
**தொலைபேசி : 011-2053065 அலைபேசி: 077-9410408**

---

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 யூன் 08ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 98,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122I095 | LKA18222L096 | LKA36423F090 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 40,000 | 30,000 | 28,000 | 98,000 |

ஏல விற்பனைத் திகதி : 2022 யூன் 08
தீர்ப்பனவுத் திகதி : 2022 யூன் 10
வழங்கப்படும் திகதி : 2022 யூன் 10
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 யூன் 08, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம். இசட். எம். ஆசிம்**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/ பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

---

## திவுலப்பிட்டிய பிரதேச சபை

### திவுலப்பிட்டிய பிரதேச சபைக்குரித்தான வல்பிட உள்நாட்டு உணவகத்தை (ஹெல பொஜுன் ஹல) குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்வி கோரல்

திவுலப்பிட்டிய பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு உணவகத்தை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. **கேள்விப் படிவங்கள் வழங்கப்படுதல்** - 2022.06.06ஆம் திகதி வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை
**கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள்** - 2022-06-28ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை
**கேள்விகள் திறக்கப்படுதல்** - 2022.06.28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு.

3. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை என்பவற்றை திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்குச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறைந்தபட்ச கட்டணத்திற்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். அவ்வாறான கேள்விதாரர்களின் வைப்புத் தொகை மற்றும் கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டு கேள்விகளைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களின் வைப்புத் தொகை சபைக்கு உரியதாக்கப்படும்.
5. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப்படிவங்கள் 2022.06.28ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை என்னால் ஏற்கப்படும். குறித்த விண்ணப்பப்படிவக் கட்டணம் மற்றும் கேள்விப் பிணை வைப்புத் தொகையை திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்கு செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்வி விண்ணப்பங்களை வெவ்வேறாக பூர்த்தி செய்த பின்னர் “மூலப்பிரதி” மற்றும் “நகல் பிரதி”யை வேறுவேறாக இரு உறைகளில் இட்டு அவ் உறைகளின் பின்பக்கம் “மூலப்பிரதி” மற்றும் “நகல் பிரதி” என்று குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் இன்னுமொரு கடித உறையில் இட்டு முத்திரைக் குறியிட்டு அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை “தலைவர், திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டிய” எனும் முகவரிக்கு 2022.06.28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
7. 2022-06-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் அந்நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
8. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் கேள்விச் சபையின் தீர்மானம் என்பதுடன் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
9. மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் திவுலப்பிட்டிய பிரதேச சபையின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் விசாரித்தறியலாம்.

| தொடர் இலக்கம் | விபரங்கள் | 2022ஆம் ஆண்டிற்கான ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா சதம் | கேள்விப் பிணை வைப்பு (மீளளிக்கப் படும்) ரூபா சதம் | படிவக் கட்டணம் (மீளளிக் கப்படாத) ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 1 | திவுலப்பிட்டிய பிரதேச சபைக்குரித்தான வல்பிட்டயில் அமைந்துள்ள உள்நாட்டு உணவகம் | 183,000.00 | 2000.00 | 1000.00 |

**டீ.டீ. இந்திக்க ஜயசிங்க**
**தலைவர்,**
**திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டியவில்.**
**2022.05.30**

**தொலைபேசி இல. : 031-2246275**
**தொலைநகல் இல : 031-2243865**

---

## பெறுகை அறிவித்தல்

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

### வல்பிட திரவ உரம் தயாரிக்கும் நிலையத்திற்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தல்

**கேள்வி இல. PRDA/WP/PRO/2022/18**

இந்த அதிகார சபையின் தேவைப்பாட்டிற்காக பின்வருவனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| விபரங்கள் | அளவு | கேள்விப் பிணை முறி | |
|---|---|---|---|
| | | பணமாக (ரூபா | வங்கிப் பிணை மூலம் (ரூபா) |
| 200x100x5.5x8mm- H iron (6m Length) | 60 Nos. | 30,000.00 | 60,000.00 |
| 150x75x7mm "I" - Section (6m Lengh) | 45 Nos. | | |
| C - Channel - 100x50x14.5x2mm Thick (4m Length) | 280 Nos. | | |
| Zinc Alum Roofing Sheet - 0.47 mm Thick (4200x750mm Sheet) | 225 Nos. | | |
| M. S Plate - Thick - 16mm (2400x1200mm Sheet) | 01 Nos. | | |
| M. S Plate - Thick - 12mm (2400x1200mm Sheet) | 02 Nos. | | |
| M. S Plate - Thick - 6mm (2400x1200mm Sheet) | 01 Nos. | | |
| J - Bolt - 16mm Thick | 260 Nos. | | |
| Nuts & Bolts 4 mm Thick | 1,250 Nos. | | |
| 2"x1"x1.6mm Box Bar | 15 Nos. | | |
| 6'.0 Amano Sheet (Green) | 35 Nos. | | |
| No. 12 Welding Rod | 2 1/2 Kg | | |
| Black Matt (QD) Paint | 2 Ltr | | |
| Thinner | 2 Ltr | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியை 2022-06-06ஆம் திகதி முதல் 2022-06-10ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வாரத்தின் வேலை நாட்களில் கேள்விப் படிவக் கட்டணமாக 1,080.00 ரூபாவைச் (அதிகார சபையின் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர) செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை ரொக்கப் பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிடப்பட்ட பெறுமதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்வியை வழங்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் கேள்வித் தொகைக்கு கேள்விதாரரினால் 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் 2022-06-13ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**

**தொ. இலக்கம் 011-5676903**

---

## பெறுகை அறிவித்தல்

## களனி பிரதேச சபை

### களனி பிரதேச சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அழைப்பு

களனி பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்க்காணும் சொத்துக்களை குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு குத்தகைக்கு விடுவதற்காக கேள்வி விண்ணப்பங்கள் 2022.06.27ஆம் திகதி பி.ப.3.00 வரை களனி பிரதேச சபையின் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2022.06.28 மு.ப.10.00 வரை ஏற்கப்படும்.

கேள்வி சமர்ப்பிக்கும் மாதிரிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுவது எழுத்து மூல விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத ரூ.3000.00 படிவக்கட்டணம் மற்றும் கீழே தரப்பட்டுள்ள வேண்டப்படும் சொத்துடன் சம்பந்தப்பட்ட மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் மட்டுமேயாகும்.

கேள்வி விண்ணப்பங்கள் இரு பிரதிகளுடன் வழங்கப்படுவதுடன் அவ் இரு பிரதிகளும் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிடப்பட்டு, வேறுவேறாக முத்திரையிடப்பட்டு மீண்டும் அவ் உறைகளை ஒரு உறையில் இட்டு பொறியிடப்பட்டு செயலாளர், களனி பிரதேச சபை என்ற முகவரிக்கு 2022.06.28 மு.ப.10.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது குறித்த நேரத்திற்கு முன்பு களனி பிரதேச சபையின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விதாரர்களால் கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி விடயத்தையும் குறிப்பிடுதல் வேண்டும். குறைந்தபட்ச கேள்விக்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்பட்டு பிணைத்தொகை சபைக்கு உரியதாக்கப்படும்.

2022.06.28ஆம் திகதி மு.ப.10.00 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்வதுடன் அது முடிவடைந்தவுடன் கேள்விகள் திறத்தல் இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது கேள்விதாரரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

சித்திகரமான கேள்விதாரருக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு அனுப்பிய பின்னர் கேள்விதாரரால் ரூபா 90,000.00 ஒப்பந்த பிணைத்தொகையை இவ் அலுவலகத்தில் வைப்புச் செய்து ஒப்பந்தமொன்றிற்கு வரல் வேண்டும் அவ்வாறே அரசிற்கு செலுத்த வேண்டிய தொகையையும் செலுத்துதல் வேண்டும். மேலும் கேள்விதாரரால் களனி பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள மற்றும் இதன் பின்னர் விதிக்கப்படும் இடைக்கால யாப்பு மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்படுதல் வேண்டும் கேள்வியை ஏற்றுக்கொள்ளல் பற்றிய இறுதித்தீர்மானம் களனி பிரதேச சபை கேள்விச் சபைக்கு உரியது.

அவ்வாறே கீழ்க்காணும் சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதன் பின்னர் சபையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஒரு மாதத்திற்கு முன் முன்னறிவித்தலின் பின்னர் எவ்வேளையிலும் மீண்டும் சபைக்கு சுவீகரிக்கும் ஆற்றல் உண்டு.

**நிபந்தனைகள்**

- ❖ கிரிபத்கொட பொதுச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள பொதுக்கிணற்றில் நீர்பவுசரை பெற்றுக்கொள்ள வேண்டியது தொழிற்சாலையில் செயற்படுத்தப்படும் இயந்திராதிகளின் குளிரூட்டும் விடயங்களுக்கு மட்டும்.
- ❖ ஒரு நாளைக்கு பெற்றுக்கொள்ள முடிவது அதி கூடியது 200 லீற்றர் 03 பவுசர்கள் மட்டுமே.
- ❖ சபையினால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிக்கு நாளாந்தம் காசு செலுத்தி பற்றுச்சீட்டொன்றை பெற்றுக்கொண்ட பின்னர் நீரைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் - 0112914110.

**அட்டவணை**

| தொடர் இல | வர்த்தக நிலையம் | குறைந்த பட்ச கேள்வி (நீர் 2000 லீற்றர் பவுசர் ஒன்றிற்காக) | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் | குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட கால எல்லை |
|---|---|---|---|---|---|
| 01 | கிரிபத்கொடை பொதுச் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள பொதுக் கிணற்றிலிருந்து நீர் 2000 லீற்றர் பவுசர் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக | ரூ.1000.00 | ரூ.10,000.00 | ரூ.3000.00 | 2022.08.01-2023.12.31 |

**டபிள்யூ.டி.சாந்தி குமுதினீ**
**தலைவர்**
**களனி பிரதேச சபை**
**2022.06.06**

## எல்ஓஎல்சி ஜெனரல் இன்சூரன்ஸ் பிஎல்சி – PQ00251202
## 2021 டிசம்பர் 31ஆம் திகதி முடிவுற்ற வருடத்திற்கான பட்டியலின் விளைவான 1ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டம்

எல்ஓஎல்சி ஜெனரல் இன்சூரன்ஸ் பிஎல்சி இன் பட்டியலின் விளைவான 1ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டமான (AGM) மெய்நிகர் AGM ஐ நடத்துவதற்காக கொழும்பு பங்குச் சந்தையினால் (CSE) வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைய, இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய என்ற முகவரியில் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை மையமாகக் கொண்டு 2022 ஜுன் 29 ஆம் திகதி செவிப்புல-கட்புல வடிவில் இடம்பெறும் என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

சந்தையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காகிதம் கிடைக்கப்பெறுவதன் காரணமாக ஆண்டறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதிகளை பங்குதாரர்களுக்கு வழங்குவதற்கு முடியாதுள்ளது என்பதை நிறுவனம் பங்குதாரர்களுக்கு அறியத்தருகிறது.

04/2022 ஆம் இலக்க CSE சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட தேவைகளுடன் இணங்கிய பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு உட்பட்ட பட்டியல் விதிகளின் 7.5 (b) (i) விதியின் விண்ணப்பத்தை கொழும்பு பங்குச் சந்தை (CSE) தள்ளுபடி செய்துள்ளது என்பதை கருத்தில் கொண்டு நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபை, பங்குதாரர்களின் குறிப்புக்காக ‘‘நிதி – ஆண்டறிக்கை’’ என்ற தலைப்பின் கீழ் நிறுவனத்தின் இணையதளம் (https://www.lolcgeneral.com/) மற்றும் CSE இன் இணையதளத்தில் (https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=LGIL.N00000.) 2021 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டுக்கான ஆண்டறிக்கையை வெளியிடுவதற்கு ஏற்பாடுகளை செய்துள்ளது. AGM அறிவித்தல், பிரதிநிதியின் படிவம் பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை மற்றும் AGM இற்கான பதிவுப் படிவத்தை ‘Announcements’ என்ற தலைப்பின் கீழ் நிறுவனத்தின் இணையதளம் (https://www.lolcgeneral.com/) மற்றும் CSE இன் இணையதளத்தில் (https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=LGIL.N0000.) தரப்பட்டுள்ளது. மெய்நிகர் AGM இல் பங்கேற்பது மற்றும் பதிவு செய்வது குறித்த தொடர்புடைய அறிவுறுத்தல்களை மேற்கூறிய இணையதளங்களில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

ஏதேனும் விசாரணைகளுக்கு பங்குதாரர்கள், எந்த ஒரு வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) எல்ஓஎல்சி ஜெனரல் இன்சூரன்ஸ் பிஎல்சி இன் நிறுவன செயலாளர் பிரிவில் திருமதி. சத்துராங்கனி செனவிரத்னவை தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி: 011 5880880 (நீடிப்பு 2360)
மின்னஞ்சல்: chathuranganis@lolc.com

AGM இல் பங்கேற்பதற்கு அல்லது பங்கேற்பது மற்றும் வாக்களிப்பதற்கு உரித்துடைய பங்குதாரர்கள் மெய்நிகர் AGM இல் பங்கேற்பதற்கு மாத்திரம் அல்லது மெய்நிகர் AGM இல் பங்கேற்பது மற்றும் (பொருந்தும் வகையில்) அவர் இடத்தில் வாக்களிப்பதற்கு பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கு உரித்துடையவராவர். பிரதிநிதி ஒருவர் நிறுவனத்தின் பங்குதாரர் ஒருவராக இருக்க வேண்டிய தேவை இல்லை. பிரதிநிதியின் படிவத்தை மேற்கூறிய இணையதளங்களில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

**சபையின் ஆணைப்படி**
**எல்ஓஎல்சி ஜெனரல் இன்சூரன்ஸ் பிஎல்சி**
**எல்ஓஎல்சி கோபரேட் சேர்விஸ் (பிறைவட்) லிமிடெட்**
**நிறுவன செயலாளர்கள்**
**2022 ஜுன் 03**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## கைத்தொழில் அமைச்சு
## இலங்கை கனிப்பொருள் மற்றும் மணல் லிமிடெட்
### இல. 341/21, சரண மாவத்தை, இராஜகிரிய.

**‘‘இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21 எனும் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டிற்கான உத்தேச புதிய அலுவலகக் கட்டிடத்திற்கு பகுதிபிரிப்பு வேலைகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்’’**

01. ‘‘இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21 எனும் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டிற்கான உத்தேச புதிய அலுவலகக் கட்டிடத்திற்கு பகுதிபிரிப்பு வேலைகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்’’ எனும் பணிக்காக CIDA C7 தரம் அல்லது CIDA SP3 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவைக் கொண்டுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை கனிப் பொருள் மணல் லிமிட்டெட் பொது முகாமையாளர் இப்போது அழைக்கின்றார்.

    **செயற்றிட்டம்**
    வரைபடங்கள் மற்றும் BOQ ஆகியவற்றைக் கொண்ட விலைக்கோரல் ஆவணத்தில் விளக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் பகுதிபிரிப்பு வேலைகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல் அவசியமாகும். அதே நேரத்தில் முக்கிய சிவில் ஒப்பந்தக்காரர்கள் ஏனைய நிர்மாணப் பணிகளை மேற்கொள்கின்றனர்.

    **வேலைத் தள அணுகுவழி:**
    சரண மாவத்தையிலிருந்து

    **வேலை நேரங்கள்:**
    சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 6.00 வரை (எவ்வாறாயினும் சூழ்நிலைகளைப் பொறுத்து கோரிக்கையின் பேரில் விசேட அனுமதி வழங்கப்படலாம்)

    **செயற்றிட்ட அமைவிடம்:**
    இல. 341/21, சரண மாவத்தை, இராஜகிரிய.
    இதற்கான ஒப்பந்தக் காலம் 45 வேலை நாட்கள்.

02. திறந்த கேள்வி நடைமுறை ஊடாக விலைக்கோரல் செயற்பாடுகள் இடம்பெறும்.

03. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதித் தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன:
    சராசரி வருடாந்த அளவாக கடந்த மூன்று வருடங்களில் குறைந்தபட்சம் 50,000,000.00 ரூபா பெறுமதியான நிர்மாண வேலைகளைச் செய்திருத்தல் வேண்டும்.
    கடந்த மூன்று வருடங்களில் இதற்கு நிகரான தன்மையான சிக்கல் நிறைந்த குறைந்தபட்சம் ஒரு நிர்மாண ஒப்பந்த அனுபவம்

04. இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், வழங்கல் முகாமையாளரிடமிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இல. 011-2883972 மின்னஞ்சல்: minsupply@sltnet.lk என்பதுடன் 2022-06-07ஆம் திகதி 2022-06-28ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் எந்தவொரு வேலை நாளிலும், மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அதே முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21, இலங்கை கனிப் பொருள் மணல் லிமிட்டெட் வழங்கல் முகாமையாளருக்கு ஒரு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் மீளளிக்கப்படாத கட்டணமாக 8,000.00 ரூபாவை ரொக்கப் பணமாக செலுத்துவதன் மூலம் 2022-06-27ஆம் திகதி மு. ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

05. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டிற்கு 2022-06-29ஆம் திகதி பி.ப. 2.30 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விலைமனுக்களை ‘‘மூலப் பிரதி’’ மற்றும் ‘‘நகல் பிரதி’’ என இரு உள் உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு வெளி உறையில் இடுதல் வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு திறப்பில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**321/21, சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**

## பவர் அட்டோனி பத்திரம் ரத்து செய்தல்

நாவலப்பிட்டி, மல்லந்த, தொருவாதெனிய பாதை, 5 ஏக்கர் எனும் விலாசத்தில் வசிக்கும் சாமர கௌஷல்ய வீரரத்ன (தேசிய அடையாள அட்டை இல. 840254232V) ஆகிய நான், என்னால் பெந்தோட்டயைச் சேர்ந்த சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசுமாகிய W.சனத் D.குணதிலக்க அவர்களினால் 05.07.2019ம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3580ம் இலக்க அட்டோனி பவர் பத்திரம் மூலம் (பெந்தோட்டை பிட்டாரம் ஸ்ரீ தர்ம விஜயாராம மாவத்தை, இல. 150 எனும் விலாசத்தில் வசிக்கும் நாகந்தலாகே தோன சித்தாரா உதயங்கனீ (தேசிய அடையாள அட்டை இல. 198783910019) என்பவருக்கு வழங்கிய அட்டோனி பத்திரத்தை 12.05.2022ம் திகதி ரத்துச் செய்வதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் பொதுமக்களிற்கும் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**சாமர கௌஷல்ய வீரரத்ன**

## விசேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்மலானை, புதிய விமான நிலைய வீதி, இல.104/1A, ஐச் சேர்ந்த தற்போது கிழக்கு அவுஸ்திரேலியா, Nedlands, Broom street இல.11இல் தற்போது வசிக்கும் கிம்ஹார ராஜபக்ஷ (தே.அ.அ.இல- 7771309606V) ஆகிய நான், எனது வெளிநாட்டு விசேட அற்றோணிதாரராக என் சார்பாக செயற்படுவதற்கு கடுவலை, இஹலபூமிரிய இல152/3ஐச்சேர்ந்த விதானகே சுஜித் மஞ்சுல லனேரோல் (தே.அ.அ.இல- 196931300034) என்பவரை என்னால் நியமித்த சொல்லப்பட்ட அற்றோணியானது பத்தரமுல்ல, பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் தினப்புத்தக இல.1189 பக்கம் 67 மற்றும் வரிகள் 18இன் கீழ் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட 2022 ஜனவரி10ஆம் திகதி கிழக்கு அவுஸ்திரேலியாவில் அத்தாட்சிப் படுத்தப்பட்ட வெளிநாட்டு விசேட அற்றோணி தத்துவத்தை நான் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**கிம்ஹார ராஜபக்ஷ**

## விசேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்மலானை, புதிய விமான நிலைய வீதி, இல.104/1Aஐச் சேர்ந்த கெமுனு வில்சன் ராஜபக்ஷ ஆகிய நான் மற்றும் விக்ரமாரச்சி மில்லவலாகே துலானி பிரியதர்ஷனீ விக்ரமசிங்ஹ ராஜபக்ஷ ஆகிய நாமிருக்கும், கடுவலை, இஹலபூமிரிய, இல.152/3 ஐச் சேர்ந்த விதானகே சுஜித் மஞ்சுல லனேரோல் சார்பாக, பத்தரமுல்ல பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் தினப்புத்தக இல.1189 பக்கம் 67 மற்றும் வரிகள் 18 இன் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட 2022 ஜனவரி 10ம் திகதி கிழக்கு அவுஸ்திரேலியாவில் அத்தாட்சிப் படுத்தப்பட்ட வெளிநாட்டு விசேட அற்றோணி தத்துவத்தை நான் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**G.W.ராஜபக்ஷ மற்றும்**
**W.M.D.P.W.ராஜபக்ஷ**

1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: 11/9/2/2நயாபெந்தி எல /C9
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2021/U/D/49

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2022.04.25ஆம் திகதிய 2277/03ஆம் இலக்க அதிவிசேட வத்தமானியின் பகுதி III ஐப் பார்க்க

**அட்டவணை**

1. மாகாணம் — வடமத்திய மாகாணம்
2. மாவட்டம் — அநுராதபுரம்
3. பிரதேச செயலாளர் பிரிவு — கிழக்கு நுவரகம் பலாத்த
4. கிராம உத்தியோகத்தர் பிரிவு — இல.246-வன்னியன் குளம பகுதி V
5. கிராமம் — வன்னியன்குளம
6. வரைபட இல — இறுதிக் கிராம வரைபட இல 259. (பிற் சேர்க்கை இல. 180, தாள் இல. 182).
7. துண்டு இல.
   துண்டு இல. 2484,2485,2486,2487,2489,2490,2492,2493,2494,2496,2497,2500,2501,2502,2503,2504,2505,2506,2507,2508,2509,2510,2512. (23 காணித் துண்டுகள்).
8. முழு விஸ்தீரணம் 0.4055 ஹெக்டயார்.

**ஈ.எம்.ஆர்.பீ.பி. ஏக்கநாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**கிழக்கு நுவரகம் பலாத்த பிரதேச செயலாளர் பிரிவு**
**அநுராதபுரம்**

**கிழக்கு நுவரகம் பலாத்த பிரதேச செயலகம்.**
**அநுராதபுரம்.**

## இலங்கை புகையிரத சேவைகள்
## விலைமனு நீடிப்பு அறிவித்தல்கள்

கீழ்க்காணும் பெறுகைக்காக முறையே பத்திரிகை விளம்பரங்களில் பிரசுரமான விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி மற்றும் விலைமனுக்களின் மூடப்படும்/திறக்கப்படும் திகதி கீழ்க்காணுமாறு நீடிக்கப்படுகின்றது.

| பெறுகை இல | விபரம் | பத்திரிகைகளில் பிரசுரமான திகதி | வழங்கப்படும் இறுதி நாள் | மூடப்படும்/ திறக்கப்படும் திகதி | கேள்விக்கு முன்னரான கூட்டத் திகதி |
|---|---|---|---|---|---|
| SRS/F.7820A<br>SRS/F.7820B<br>SRS/F.7820C<br>SRS/F.7820D<br>SRS/F.7820E<br>SRS/F.7820F<br>SRS/F.7820G<br>SRS/F.7820H<br>SRS/F.7820I<br>SRS/F.7820J<br>SRS/F.7820K<br>SRS/F.7820L | இலங்கை புகையிரத சேவையின் 10 ரெயில்வே நிலையங்கள் அடங்கலாக 12 அமைவிடங்களில் துப்புரவேற்பாட்டு வசதிகளை நாளதுவரைக்கு உட்படுத்துதல் | 24.05.2022 | 20.06.2022 | 21.06.2022 | 15.06.2022 |

விலைமனு அழைப்பிற்கான ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் அவ்வாறே மாற்றமின்றி இருக்கும்.
மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:-

தொலைபேசி : 011-2438078/2436818
பெக்ஸ் இல : 0112432044
மின்னஞ்சல் : tender2@railway.gov.lk
srs.sir@gmail.com
இணையதளம் : www.railway.gov.lk

**தலைவர்**
**திட்ட பெறுகைக்குழு**
**இலங்கை புகையிரத சேவைகள்**

## பெருந்தோட்ட அமைச்சு
## இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்
## நிறங்கள் பிரிப்பானொன்றை (Colour Seperator) வழங்குவதற்கான விலைமனுக்களுக்கான அழைத்தல் கூமெரா தேயிலைத் தொழிற்சாலை (Goomera Tea Factory)

**TENDER No.: SLSPC/PL/Factory Mod./T-1-116/2022**

தவளந்தென்ன, கூமெரா தேயிலைத் தொழிற்சாலைக்கு நிறங்கள் பிரிப்பானொன்றை வழங்குவதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபன பெறுகை குழுவின் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

**அட்டவணை:- புதிய இயந்திராதிகள் -**

| இயந்திராதியின் இனம் | மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணம் (ரூபாவில்) | விலைமனுப்பிணை (மீளளிக்கப்படுவது) | விலைமனுக்களை பெற்றுக் கொள்ளலை மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| நிறங்கள் பிரிப்பான் | 2000.00 | 300,000 ரூபா | திகதி: 2022.06.24 ஆம் திகதியன்று<br>நேரம்: பி.ப. 2 மணிக்கு |

1. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022 ஜுன் 08 ஆம் திகதியிலிருந்து மேலதிக தகவலை பெற்றுக் கொண்டும் ஆவணங்களை கொழும்பு-12, மீரானியா தெரு, 21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபன பெறுகைப் பிரிவிலிருந்தும் அல்லது பன்வில, கல்/ விலேவிலுள்ள இஅபெகூ இன் பிராந்திய அலுவலகத்திலிருந்தும் கையேற்றுக் கொள்ளலாம்.
2. மீளளிக்கப்படாத கட்டணமாக 2000 ரூபாவை செலுத்திய பின்னர், அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும்) கம்பனி தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்று மேலேயுள்ள முகவரியிலிருந்து கொள்வனவு செய்யப்படலாம்
3. 2022 ஜுன் 24 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒப்படைக்கப்படலாம் அல்லது இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரிடம் நேரடியாகவே ஒப்படைப்பதற்காக இஅபெகூ பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம் அல்லது பதிவுத் தபாலிலும் அனுப்பி வைக்கப்படலாம். மேலே குறிப்பிட்டவாறு விலைமனுப்பிணைக்கான சான்று இணைக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அவையிரண்டும் இன்னொரு தனியுறையில் அடக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“Supply of Colour Seperator – Goomera Tea Factory”** என குறிப்பிடப்படல் வேண்டும்.
4. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்தின் பின்னர் விலைமனுதாரர்களின் முன்னிலையில் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்று சமுகமளித்திருக்கும் பிரதிநிதிகளின் முன்னிலையில் பி.ப. 2 மணிக்கு கொழும்பு-12, மீரானியா தெரு, 21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபன பெறுகைப் பிரிவில் விரைவாகவே திறக்கப்படும்.
5. விலைமனுக்களை பெற்றுக் கொள்ளலின் மூடும் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது 63 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலும் நிலையாகவுமிருத்தல் வேண்டும். இஅபெகூ பெறுகைக் குழுத் தலைவர் ஆவணத்தை பெற்றுக் கொண்டதற்கான அல்லது ஆவணத்தின் முழுமையையும் அல்லது பகுதியொன்றையும் இரத்துச் செய்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இல.: 21, மீரானியா தெரு, கொழும்பு-12.**
**தொடர்பிலக்கம்: 011-5921463 அல்லது கூமெரா பெருந்தோட்டம் - 0815-634907**
**02.06.2022**

# கேள்வி அழைப்பு

## பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - கேகாலை

# டயர், டியூப் மற்றும் பற்றரி கொள்வனவு செய்தல்

01. பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் மற்றும் அதன் கீழுள்ள ஏனைய சுகாதார நிறுவனங்களின் பாவனைக்காக கீழ்க்காணுமாறு டயர், டியூப் மற்றும் பற்றரி வழங்குதல் சார்பாக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து 2022.06.28 மு.ப. 10.30 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

**டயர் மற்றும் டியூப்**

| தொடர் இல. | விபரம் | டயர் அளவு | டியூப் |
|---|---|---|---|
| 01 | 215*65*16 | 24 | 08 |
| 02 | 185*14 | 60 | 16 |
| 03 | 195*15 | 40 | 12 |
| 04 | 255*75*16 | 28 | 12 |
| 05 | 205*80*16 | 08 | 04 |
| 06 | 215*75*15 | 04 | 04 |
| 07 | 255*70*15 | 20 | 04 |
| 08 | 215*85*16 | 04 | 04 |
| 09 | 265*65*17 | 20 | 08 |
| 10 | 195*14 | 04 | 04 |
| 11 | 750*16 | 36 | 12 |
| 12 | 700*15 | 16 | 08 |
| 13 | 400*8 | 56 | 28 |
| 14 | 145*12 | 12 | 04 |
| 15 | 700*16 | 08 | 04 |
| 16 | 205*75*14 | 04 | 04 |
| 17 | 235*75*15 | 04 | 04 |

**பற்றரி**

| தொடர் இல | விபரம் | அளவு |
|---|---|---|
| 01 | 95 Amp | 20 |
| 02 | 35 Amp | 08 (திரீவிலர்) |
| 03 | 35 AL | 02 (டிமோ லொறி) |
| 04 | 65 Amp | 01 (கார்) |

02. கேள்வி ஆவணங்களை கேகாலை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையில் கணக்குப் பிரிவிலிருந்து 2022.06.06 முதல் 2022.06.27 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலத்திற்குள் மீளளிக்கப்படாத ரூபா 100.00 தொகையைச் செலுத்திக் கொள்வனவு செய்யலாம்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையான கேள்விதாரர்களுக்கு வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கேகாலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் (நிதி) இடம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் கேள்வி கோரல் பத்திரங்கள் இலவசமாக பரீட்சிக்கலாம். (தொ.பே- 035-2222571)

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**கேகாலை.**
**தொ.பே :- 035-2222549/ 035-2222578/ 035-222257**
**பெக்ஸ் :- 035-2221253**




# இலங்கை - அவுஸ்திரேலியா தொடருக்கான நடுவர்கள் அறிவிப்பு



இலங்கை-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள ரி 20, ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களுக்கான நடுவர்கள் மற்றும் போட்டி மத்தியஸ்தர் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று அதிகமாக இருந்த காலப்பகுதியில் சர்வதேச போட்டிகளுக்கு உள்ளூர் நடுவர்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு வந்தனர்.

இரண்டு நாடுகளுக்கும் பொதுவான நடுவர்கள் மற்றும் போட்டி மத்தியஸ்தர்களை பயன்படுத்தவேண்டும் என ஐசிசி மீண்டும் தங்களுடைய விதிமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதன் அடிப்படையில் அனைத்து தொடர்களுக்குமான போட்டி மத்தியஸ்தர்களாக இந்தியாவின் ஜவகல் ஸ்ரீநாத் மற்றும் இலங்கையின் ரஞ்சன் மடுகல்ல ஆகியோரை நியமித்துள்ளது.

இவர்களுடன் ரி 20 மற்றும் ஒருநாள் தொடர்களுக்கான போட்டி மத்தியஸ்தர்கள் குழாத்தில், ஐசிசி உயரடுக்கு நடுவர் குழாத்தைச் சேர்ந்த குமார் தர்மசேனவுடன், ஐசிசி நடுவர்களான ருச்சிர பல்லியகுருகே, ரவீந்ர விமலசிறி, லிண்டன் ஹெனிபல் மற்றும் பிரகீத் ரம்புக்வெல்ல ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.

20க்கு20 மற்றும் ஒருநாள் தொடர்களில் உள்ளூர் நடுவர்கள் மாத்திரம் இடம்பெற்றிருந்தாலும், ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான நடுவர்கள் குழாத்தில் வெளிநாட்டு நடுவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதில் இந்தியாவைச் சேர்ந்த நிதின் மேனன் மற்றும் இங்கிலாந்தைச் சேர்ந்த மைக்கல் கோக் ஆகியோர் இடம்பெற்றுள்ளதுடன், இலங்கையைச் சேர்ந்த குமார் தர்மசேன, ருச்சிர பல்லியகுருகே மற்றும் லிண்டன் ஹெனிபல் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

சுற்றுலா அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான தொடரானது, மூன்று போட்டிகள் கொண்ட ரி 20 தொடருடன் நாளை 7ம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

## பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ்: இகா ஸ்வியாடெக் சம்பியன்





பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் போலாந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக் சம்பியன் பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் உலகின் முதல் தர வீராங்கனை இகா ஸ்வியாடெக், அமெரிக்காவின் கோகோ காஃப்பை எதிர்கொண்டார்.

ஆட்டத்தின் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய இகா ஸ்வியாடெக் 6-1, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

அவர் பெற்றுக்கொண்ட இரண்டாவது பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் சம்பியன் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சனிக்கிழமை நடந்த போட்டியில் வெற்றி பெற்றமையின் மூலம், தொடர்ந்து 35 போட்டிகளில் வெற்றிகளை குவித்த பெருமையை இகா ஸ்வியாடெக் பெற்றுள்ளார்.

OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
44th
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

## 44th OBSERVER SLT- MOBITEL

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் **OBSERVER SLT- MOBITEL** மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 11-06-2022
இல. 11

STREAM LIKE A BOSS!
இலங்கையின்
முதன்மையான,
அதிவேகமான
மற்றும் விஸ்தரிக்கப்பட்ட
PREMIUM FIBRE வலையமைப்பு.
SLTMOBITEL
FIBRE
www.sltmobitel.lk

# நிபுனின் அசத்தலான நுழைவு, மறக்கப்பட்ட வீரக்கொடி

கடந்த வார இறுதியில் இங்கிலாந்தின் பிரிஸ்டலில் நடைபெற்ற ரி20 கிரிக்கெட் போட்டியில், *Gloucestershire* அணிக்கு எதிராக இலங்கை வளர்ந்து வரும் அணியை 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்ய, முன்னாள் ஒப்சர்வர் SLT மொபிடெல் பாடசாலை கிரிக்கெட் வீரர் நிபுன் ரன்சிக, பரபரப்பான பந்துவீச்சினால் வெற்றி பெறவழி ஏற்படுத்தி கொடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை வளர்ந்து வரும் அணிக்கு ஒரு மாத கால சுற்றுப்பயணத்தை வெற்றிக் குறிப்புடன் முடித்துக் கொள்ள முடிந்தது. இலங்கை அணி சுற்றுப்பயணத்தில் மூன்று நான்கு நாள் ஆட்டங்கள் மற்றும் மூன்று ரி T20 போட்டிகளில் விளையாடியது, ஆனால் *Gloucestershire*க்கு எதிரான ஒரு தனி வெற்றியை மட்டுமே பெற முடிந்தது.

206 என்ற இலக்கை துரத்திய குளோசெஸ்டர்ஷைர் ரன்சிகவின் சில ஊடுருவல் வலது கை நடுத்தர வேகப்பந்து வீச்சுக்கு எதிராக 16.3 ஓவர்களில் 138 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

2017 ஆம் ஆண்டுக்கான ஒப்சர்வர் SLT மொபிடெல் பாடசாலை கிரிக்கெட் வீரராக தெரிவுசெய்யப்பட்ட அம்பலாங்கொட பி.டி எஸ் குலரத்ன மத்தியவித்தியாலயத்தின் வீரராவார்.

தொடக்க ஆட்டக்காரர் வில்லியம் நைஷின் முதல் பந்தில் விக்கெட்டை வீழ்த்திய சகல துறை வீரர் தனஞ்சய லக்ஷன், ரி 20 அறிமுக லெக் ஸ்பின்னர் திலும் சுதீர, 19 வயதான துனித் வெல்லலகே மற்றும் நிபுன் ஆகியோரின் பங்களிப்புடன் மூன்று ஓவர்களில் 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை எடுத்தார்.

முன்னணி துடுப்பாட்ட வீரான நுவனிது பெர்னாண்டோ 67 பந்துகளில் 14 பவுண்டரிகளுடன் ஆட்டமிழக்காமல் 126 ஓட்டங்கள் குவித்தார். சுற்றுப்பயணத்தில் முதன்முறையாக தொடக்க ஆட்டக்காரராக விளையாடிய நுவனிந்து பெர்னாண்டோ அபாரமான வீச்சின் மூலம் இலங்கை அணியை 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 205 ஓட்டங்கள் எடுத்தது.

ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் ஒஃப் தி இயர் ஷோவில் ஐந்து பட்டங்களை வென்ற ஒரே பள்ளி வீரர் ரொஹான் வீரக்கொடி மட்டுமே நினைவக பாதையில் செல்கிறார்.

1987 இல் அவரது புகழ்பெற்ற பாடசாலை கிரிக்கெட் சாதனைகள் இருந்தபோதிலும், இலங்கை இளைஞர் மட்டத்திற்கு அப்பால் செல்ல முடியாமல் போனது துரதிர்ஷ்டவசமானது.

OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
44th
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

வீரக்கொடி அண்மையில் ஒரு பேட்டியில், தான் சாதிக்காதது குறித்து வருத்தம் இல்லை என்று கூறினார். 1987ல் அந்த விருதுகளை வென்றது பெருமையாக உள்ளது என்றார்.








'ஒரே நிகழ்வில் ஒப்சர்வர் ஆண்டின் சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர் உட்பட ஐந்து பட்டங்களை வென்றது மிகப்பெரிய மரியாதை' என்று அவர் கூறினார்.

"கடந்த காலத்தைப் பற்றியும் நீங்கள் தவறவிட்டதைப் பற்றியும் பேசுவதில் அர்த்தமில்லை. இருந்தும் இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்திருந்திருந்தால் வித்தியாசமான படத்தை வரைந்திருப்பேன்" என்றார் வீரக்கொடி.

ஆம், ஒப்சர்வர்மொபிடெல் பாடசாலை கிரிக்கெட்டர்ஸ் ஒஃப் தி இயர் விருது வென்றவர்களில் ஒருவரான ரோஹான் வீரக்கொடி, 1987ஆம் ஆண்டு ராயல் ஜாரங்பதிக்குப் பிறகு, 1987ல் சிறந்த விருதை வென்றார்.

அவர் இலங்கை இளைஞர் அணிகளுக்காக விளையாடிய போதிலும், வீரக்கொடி புனித ஜோசப் கல்லூரியில் தனது சிறந்த பாடசாலை வாழ்க்கைக்குப் பிறகு டெஸ்ட் அல்லது ஒரு நாள் அணியில் நடக்க முடியவில்லை.

ஸ்ரீலங்கா டெலிகொம் மற்றும் SLT மொபிடெல் நிறுவனத்தின் தலைவர் ரொஹான் பெர்னாண்டோ வின் வழிகாட்டுதலின் கீழ், நிகழ்வின் வெற்றிக்கு மகத்தான பங்களிப்பு வழங்கப்பட்டது.

இருந்தபோதிலும், ஒப்சேர்வர் *Mobitel* பாடசாலை கிரிக்கெட்டர்ஸ் ஆஃப் தி இயர் நிகழ்ச்சியின் அனுசரணையாளர் SLT மொபிடெல் 44வது ஆண்டாக நிகழ்வின் தடையின்றி ஓட்டத்தை தக்கவைக்க சண்டே ஒப்சர்வருடன் நேராக பேட்டில் விளையாடியது.

# அமைச்சரின் சம்பளம் விளையாட்டு நிதியத்துக்கு வழங்க தீர்மானம்



விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக பதவியேற்றுள்ள ரொஷான் ரணசிங்க, தனது கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் விளையாட்டுத்துறை அமைச்சின் ஊழியர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார். நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் திறைசேரிக்கு விளையாட்டுத் துறையில் இருந்து பெறப்படும் பணத்தின் அளவை மட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

பணப்பற்றாக்குறை காரணமாக வீரர்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் சகல வசதிகளையும் தொடர்ந்து வழங்குவதற்கு விளையாட்டு நிதியம் பலப்படுத்தப்பட வேண்டுமென அமைச்சர் தெரிவித்தார். விளையாட்டு வீரர்களின் செயற்பாடுகள் புறக்கணிக்கப்படக் கூடாது, வெளிநாடுகளுக்குச் செல்வது, தேவையான போஷாக்கான உணவைப் பெற்றுக் கொள்வது, பயிற்சி நடவடிக்கைகளைத் தொடர்வது என அமைச்சர் தெரிவித்தார்.

இதற்குப் பங்களிப்புச் செய்வதற்கும் ஏனைய அனைவரினதும் ஆதரவைப் பெறுவதற்கும் எடுத்துக்காட்டாகத் தனது சம்பளத்தை விளையாட்டு நிதியத்துக்கு வழங்க அமைச்சர் தீர்மானித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூன் மாதம் 6ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.